வெளியீடு : 28-11-2002

Issued : 28-11-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை ஏப்ரல் 5, 2002 தொகுதி 18 – எண் 2

**Thursday the 5th April, 2002 – Volume 18 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

## 5-4-2002

### உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்-விடைகள்— | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 123-152 |
| 2. | கவன ஈர்ப்பு— | |
| | தனியார் கல்லூரிகளில் முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் நியமனங்களில் இனச் சுழற்சி முறை | 153-159 |
| 3. | தகவல் கோரல்— | |
| | உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 160 |
| 4. | அறிக்கை அளித்தல்— | |
| | (அ) பொதுக் கணக்குக் குழு | 160 |
| | (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 161 |
| 5. | வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்—தொடர்ச்சி | 161-230, 231-244 |
| | திரு. எச். ராஜா | 161-169 |
| | திரு. ஜி. பழனிசாமி | 170-188 |
| | *திருமதி டி. யசோதா | 188-208 |
| | திரு. ஜி.கே. மணி | 208-230 |
| | திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 231-244 |
| 6. | அரசினர் தீர்மானம்— | |
| | *விதி 32-ஐத் தளர்த்தல் | 230 |
| 7. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 245-247 |

[2002 ஏப்ரல் 5

உயர்நிலைப் பள்ளியாகத் தொடங்க கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால், பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்க உரிய நடவடிக்கை எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் கல்வியறிவைப் பொறுத்தவரையில், பெரம்பலூர் கல்வி மாவட்டந்தான் தமிழகத்திலேயே மிகவும் பின்தங்கிய புள்ளிகளை எடுத்திருக்கிறது. அரியலூர் மேல்நிலைப் பள்ளி, 1,786 மாணவ மாணவியர்கள் படிக்கக்கூடிய அந்தப் பள்ளி, அதிலே மாணவியர் மட்டும் 657 பேர் பயின்று வருகின்றார்கள். அங்கே தனியாக பெண்களுக்கென உயர்நிலைப் பள்ளி கட்டுவதற்கான இடங்கள் நிறைய இருக்கின்றன. சர்வே எண் 226/3-ஏ என்ற எண்ணிலே ஏகப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. ஆகையினால் பெண்களுடைய கல்வியறிவை மேம்படுத்தவும், மாதரசி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் பெண்களுடைய கல்வித் தரம் மேம்படுவதற்காகவும், பெண்கள் கல்வியறிவிலே உயர்ந்தவர்கள் என்பதை நிலை நிறுத்துவதற்காகவும், தனியாக மாணவியர்களுக்கென பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைத்துக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; பெண்களுக்கு நல்ல கல்வியைத் தரவேண்டும், தரமான கல்வியைத் தரவேண்டுமென்று நம்முடைய புரட்சித் தலைவி அரசானது முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதனடிப்படையில் பார்க்கும்போது, அரியலூரைப் பொறுத்தவரையில், அங்கு இந்த அரசு மேல்நிலைப் பள்ளியைத் தவிர 3 தனியார்ப் பள்ளிகளும் செயல்படுகின்றன. அதில் ஒரு மேல்நிலைப் பள்ளி பெண்களுக்காகவே அரியலூரில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இருப்பினும் அரசாங்கத்தின் சார்பாக உயர்நிலைப் பள்ளி தொடங்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு செயல்படுத்தலாம் என்பதை அங்கிருக்கும் முதன்மைக் கல்வி அலுவலரும் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு சிபாரிசு செய்திருக்கின்றார்கள். ஆனால், உயர்நிலைப் பள்ளியை உருவாக்குவதற்குப் பொதுமக்கள் பணத்தைக் கட்டுவது, பங்குகள் [illegible] இவற்றைச் செய்தார்கள் என்றால், இந்த அ[illegible]ந்தக் கருத்துரு [illegible]வைக்கப்படுமானால்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
2244 88
சென்னை-600 008



2002 ஏப்ரல் 5]

இந்த அரசு அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 96, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**96—**

**பாலிடெக்னிக்**

***5309—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் அரசு தொழிற் கல்வி பயிற்சி மையம் (பாலிடெக்னிக்) ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இரண்டிற்கும் இல்லை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக உள்ளது. மலைவாழ் மக்கள் அதிகமாக வசித்து வருகின்ற தொகுதி ஆகும். இங்கு 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு வரை படித்த மலைவாழ் மாணவ மாணவிகள் வெளியில் சென்று படிக்க இயலாத காரணத்தால், சங்கராபுரம் பகுதி அல்லது கல்வராயன் மலைப் பகுதியில் ஓர் அரசு பாலிடெக்னிக் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதியானது விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ஒரு பகுதியாகும். விழுப்புரம் மாவட்டத்தில் அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் குழுவினுடைய அங்கீகாரம் பெற்று சுமார் 5 பாலிடெக்னிக்குகள் செயல்பட்டு வருகின்றன. ஒரு Polytechnic-ஐ உருவாக்க வேண்டுமென்றால்—நிலங்கள் அல்லாமல் மற்ற செலவினங்கள் ஒரு Polytechnic-ஐ உருவாக்குவதற்கு மட்டும் 10 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அந்த 10 கோடி ரூபாயில் Polytechnic-ஐ

[2002 ஏப்ரல் 5

உருவாக்குவதற்கு இப்போது நம்முடைய நிதியாதாரம் ஏற்க முடியாத ஒரு நிலையில் இருக்கிறது. ஆகவே, நிதி நிலையைக் கருத்தில் கொண்டு இப்போது சுமார் 10 கோடி ரூபாயை உடனடியாகச் செலவு செய்து ஒரு பாலிடெக்னிக் தொடங்குகின்ற கருத்துருவானது அரசினுடைய ஆலோசனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 97, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

97—

## ஆக்கிரமிப்பு

***18064—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரவாயல் பேரூராட்சிக்குட்பட்ட 8-வது வார்டிலுள்ள சக்கரபாணி நகரில் தொண்டை மண்டல ஆதீனத்திற்குச் சொந்தமான ஞானப்பிரகாச மடம் சர்வே எண் 322-இல் இருக்கும் இடத்தை சில தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து, சட்டத்திற்குப் புறம்பாக குடியிருப்பு மனைகள் போட்டு வீடு கட்டி வருவதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரம் நகர், தொண்டை மண்டல ஆதீனம், அருள்மிகு ஞானப்பிரகாச சுவாமிகள் மடத்திற்குச் சொந்தமான சென்னை, பூந்தமல்லி அருகில் உள்ள மதுரவாயல் கிராமத்தில் உள்ள சர்வே எண் 322-இல் 1 ஏக்கர் 50 சென்ட் நஞ்சை நிலம் திடீரென சட்டத்திற்குப் புறம்பாக ஒரு சிலர் ஆக்கிரமித்து விற்பனை செய்ய முயற்சி மேற்கொள்வதாக அறிந்து ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குத் தேவையான அனைத்து சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 5]

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம், தொண்டை மண்டல ஆதீனத்திற்குச் சொந்தமான, சென்னை, மதுரவாயலில் உள்ள 1 ஏக்கர் 50 சென்ட் நஞ்சை நிலத்தை சிலர் ஆக்கிரமித்திருப்பதாக இந்த அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். இந்த இடத்தை கடந்த 5-3-2002 அன்று மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு வந்ததற்குப் பிறகு, இப்போது ஆக்கிரமிப்பாளர்கள் அதிகரித்திருக்கிறார்கள் என்பதையும், கடந்த 1993 ஆம் ஆண்டு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருந்தபோது, இந்த இடமானது அரசாங்கத்தின் உபயோகத்திற்குத் தேவை என்று அன்று நிலத்தை கையகப்படுத்தியிருக்கிறது. அப்படியிருக்கும்போது, பின்னால் வந்த ஒருசில ஆட்சியாளர்களின் உதவியோடு, இந்த நிலத்தை பிளாட் போட்டு விற்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இந்து அறநிலையத் துறை சட்டம் 1958, பிரிவு 78-ன்கீழ் அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த இடத்தை நானும் நேரிலே சென்று பார்வையிட்டு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொல்லியிருக்கிறேன். சம்பந்தப்பட்ட தாசில்தார், வி.ஏ.ஓ., ஆகியோரை அங்கே நேரிலே அழைத்துச் சென்று பார்த்தோம். பார்க்கின்ற நேரத்தில், அங்கே விற்பனை மூலம் திருவாளர்கள் எம்.கே. சேகர், சுந்தரமூர்த்தி, எம்.கே. ஏழுமலை மற்றும் மாரியப்பன் என்பவர்கள் பெற்றதின் வாயிலாக பல்வேறு நபர்களால் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளதை நேரிலே பார்த்தோம். உடனடியாக அதை நிறுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், வழக்கு நிலுவையில் உள்ளது. மீறி ஆக்கிரமிப்பு செய்திருந்தால் நேரடியாக மீண்டும் பார்வையிட்டு, ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக இந்த அரசு

நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் தெய்வங்களுக்குக் காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சியம் காக்க, கோயில் சொத்துக்களை அபகரிக்கும் விஷயத்தில் அத்துமீறும் ஆக்கிரமிப்பாளர்களின் பிடியிலிருந்து, காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனத்திற்குச் சொந்தமான ரூபாய் ஒரு கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள இந்தச் சொத்தினை மீட்க, போர்க்கால அடிப்படையில் சட்டத்திருத்தம் கொண்டு வந்து, நில ஆக்கிரமிப்பு தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடர்ந்து, அந்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு தண்டனை பெற்றுத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி. சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆலயமும், கல்விச்சாலைகளும் நன்றாக இருந்தால்தான் ஓர் ஆட்சி நன்றாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே, கூடியவிரைவில்- இங்கே மட்டுமல்ல இன்றைக்குச் சென்னையில் பல கோடி ரூபாய் சொத்துக்களைத் தனியார் வசதி படைத்தவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சொத்துகள் அனைத்தும் கண்டறியப்பட்டு உடனடியாக அறநிலையத் துறையில் சேர்க்கப்படும். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 98, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



98—

## ஆரம்ப சுகாதார நிலையம்

***188—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, சாமந்தங்கோட்டை வெங்கமேடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியம், சாமந்தங்கோட்டை வெங்கமேடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம்.

என் குடும்பத்தின் குலவிளக்காய் தமிழகத்தின் ஒளிவிளக்காய் ஏழை எளிய மக்களின் இதயமாய் பாரத நாட்டின் சிறந்த முதலமைச்சராய் தமிழகத்தின் நிரந்தர முதல்வராய் விளங்கும் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களின் திசை நோக்கி எனது வணக்கத்தைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

நடப்பு நிதியாண்டில் நிதிநிலை அறிக்கையில் 270 கோடி ரூபாய் மதிப்பில் அவினாசி-அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தை அறிவித்து, கோவை, பெரியார் மாவட்டங்களிலுள்ள ஏழு சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட, 20 இலட்சம் மக்களின் இதய சிம்மாசனத்தில் நீங்கா இடம் பிடித்த, இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை நான் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைவருக்கும் ஆரோக்கியம் நிறைந்த வளமான வாழ்வு என்ற இலட்சியத்தை அடையும் வரை அல்லும் பகலும் அயராது பாடுபடுவேன் என்று சூளுரைத்து தமிழகத்தின் மக்கள் வாழ்க்கையில் ஒளி தீபம் ஏற்றும் நமது முதல்வர் ஏழைகளின் காவலர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்--எனது அவினாசி தொகுதியில் உள்ள சாமந்தங்கோட்டை, வெங்கமேடு, வஞ்சிபாளையம், முருகம்பாளையம், வலையபாளையம் ஆகிய 5 கிராமங்களில் ஆதிதிராவிடர் அருந்ததிய மக்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். குறிப்பாக மகளிருக்கு பேறு காலத்தின்போது நீண்ட தூரம் வாகனங்களில் சென்று சிகிச்சை பெற வேண்டியுள்ளது. தாய்மார்கள், ஏழை எளிய மக்களின் காவல் தெய்வமாக விளங்கும் நமது முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு—அரசின் விதிகளைத் தளர்த்தி, சாமந்தங்கோட்டை வெங்கமேடு கிராமத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெங்கமேடு என்பது ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட ஒரு சிறிய ஊர். அந்த ஊரின் அருகிலேயே புதுப்பாளையத்திலே ஒரு துணைச் சுகாதார நிலையமும், நம்பியம்பாளையத்திலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும் இருக்கின்றன. 1¼ இலட்சம் மக்கள் தொகை கொண்ட இந்த அவினாசி ஒன்றியத்திற்கு, சேவூர், துலுக்களத்தூர், நம்பியம்பாளையம் ஆகிய 3 இடங்களில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அந்தப் பகுதி மக்களுக்கு சுகாதாரச் சேவையையும், அவினாசியில் உள்ள தாலுகா மருத்துவமனை மருத்துவச் சேவையையும் அளித்து வருகின்றன. தேவைகளுக்கு ஏற்ப அவினாசி மருத்துவமனையை, அது ஒரு தாலுகா மருத்துவமனையாக இருப்பதால், அதை விரிவாக்கம் செய்து கூடுதல் வசதி செய்து கொடுத்தாலே, அந்த ஒன்றிய மக்களுக்கு போதுமானதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 99, திருமதி கே. பவானி கருணாகரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.



**99—**

**கடனுதவி**

***1859—திருமதி கே. பவானி கருணாகரன்:**

*மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் ஐ.ஆர்.டி.பி. கடனுதவி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதியில் ஐ.ஆர்.டி.பி. கடன் உதவி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களை வணங்கி இந்த வினாவை நான் தொடுக்கின்றேன். கடந்த 17 வருடங்களாக எங்களுடைய அரக்கோணம் தொகுதிக்கு அண்ணா தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லாத ஒரு காரணத்தால், எங்கள் தொகுதி மிகவும் வறட்சித் தொகுதியாகக் காணப்படுகிறது. இருந்த ஒரேயோரு எஃகு உருக்காலையையும் கடந்த ஆட்சியிலே மூடிவிட்ட காரணத்தால், இரண்டாயிரம் குடும்பங்கள் இன்று வறுமையில் வாடுகின்றன. எந்தவொரு வளர்ச்சிப் பணியும் இல்லாத என்னுடைய தொகுதியில் இப்போது நாங்கள் நன்றி அறிவிப்புக் கூட்டங்களுக்குச் செல்லுகிறபோது, தொகுதி மக்கள் அனைவரும் இந்த ஐ.ஆர்.டி.பி. லோனுக்காக என்னிடம் மனுக்களைக் கொடுத்துள்ளார்கள். கடந்த ஆட்சியில் இது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. தமிழக தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியிலே என்னுடைய தொகுதி வளர்ச்சி அடைய அமைச்சர் அவர்கள் இந்தக் கடனுதவியைத் திரும்பவும் கொடுப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 5

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஆர்.டி.பி. திட்டம் என்பது மத்திய அரசின் மூலம் மானிய உதவியோடு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வழங்குகின்ற ஒரு திட்டம். இந்தத் திட்டம் 1-4-1999 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளிலிருந்து எடுத்து, அதற்குப் பதிலாக, கிராமப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம் என்று பல்வேறு திட்டங்களை எல்லாம் ஒன்று சேர்த்து சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் குழுக்களாகச் செயல்படுகின்ற குழுக்களுக்கு, மானிய உதவியுடன் கடன் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 100, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**100—**

**விற்பனைச் சங்கம்**

***2192—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பிரெட்டிப்பட்டி வட்ட தலைமையிடத்தில் கூட்டுறவு விவசாய விளைபொருள் விற்பனைச் சங்கம் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திட்டம் எதுவும் இல்லை.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1991-96-லே முதலமைச்சராக இருந்தபோது, பாப்பிரெட்டிப்பட்டி என்ற பகுதியை அரூர் வட்டத்திலிருந்து பிரித்து, தனி வட்டமாக அமைத்துக் கொடுத்திருந்தார்கள். அந்த பாப்பிரெட்டிப்பட்டி பகுதியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள்



2002 ஏப்ரல் 5]

அதிகமாக விவசாயம் செய்து பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே தங்களுடைய தேவைக்குப் போக, மீதம் இருக்கின்ற விவசாய விளைபொருட்களை விற்க வேண்டுமென்று சொன்னால், அவர்கள் பல கிலோ மீட்டர் வந்து, அதை விற்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், வியாபாரிகள் விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்கின்றபோது, விவசாயிகளுடைய வயிற்றிலே அடித்து வாங்குகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பகுதியிலே பருத்தி, கடலை, மஞ்சள் போன்ற பல நல்ல விளைபொருள்களை விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பெருமை சேர்க்கிற வகையிலே அமைந்திருக்கிற நமது அரசு அவர்களுடைய தாக்கத்தைப் போக்குவதற்காக அங்கே வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தை, கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டியை அமைத்துக் கொடுக்க நம்முடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு அதிகப்படியான நன்மைகளைத் தருகிற இந்த ஆட்சி நிச்சயமாக விவசாயிகளினுடைய நலனைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இந்த பாப்பிரெட்டிப்பட்டி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் வேண்டுமென்ற உறுப்பினருடைய கோரிக்கைக்கு, ஏற்கெனவே பாப்பிரெட்டிப்பட்டி, அரூர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திலே அடங்கியிருக்கிறது. இப்போது இயங்குகிற இந்த அரூர் சங்கமே 71.48 இலட்சம் ரூபாய் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. உறுப்பினர் கேட்கிற இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், இரண்டு சங்கங்களாக அது மாறினால், ஏற்கெனவே இருக்கிற நட்டத்தோடு மேலும் பலத்த நட்டம் ஏற்படும் என்கிற காரணத்தினாலே, இந்தக் கோரிக்கையை ஆராய முடியாத நிலையிலே இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இன்னும் நட்டத்தை ஏற்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

[2002 ஏப்ரல் 5

வினா எண் 101, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**101—**

## நியாய விலைக் கடை

***3720—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், கோடநாடு கிராமம், வெற்றி நகரில் பகுதி நேர நியாய விலைக் கடை திறக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடநாடு கிராமம், வெற்றி நகர்ப் பகுதி மலைவாழ் மக்களும், ஆதிதிராவிட மக்களும் வசிக்கின்ற பகுதி. வெற்றி நகர்ப் பகுதி மக்கள் கீழ்ப்பகுதியிலேயிருந்து நியாய விலைக் கடைகளுக்கு மேட்டிலே ஏறிச் செல்ல வேண்டும். வயதான தாய்மார்களும், கர்ப்பிணிப் பெண்களும் மேட்டிலே ஏறி, இந்தத் தாய்க் கடைக்குச் செல்வதிலே சிரமப்படுகின்றார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, இந்த வெற்றி நகர் பகுதியில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையைத் திறக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தக் கடையிலேயிருந்து கண்டட்டி என்ற இடத்திலே தற்போதுதான் 215 குடும்ப அட்டைகளை உள்ளடக்கிய ஒரு புதிய கடை திறக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்த வெற்றி நகருக்கு இன்னொரு கடை அமைக்க வேண்டுமென்று சொன்னால், விதிகளின்படி 1 கிலோ



2002 ஏப்ரல் 5]

மீட்டருக்குக் குறைவாக இருக்கிறது. மேற்கொண்டு 500 கார்டுகள்தான் அந்தத் தாய்க் கடையிலே இருக்கின்றன. இந்த 500 கார்டுகளிலே, மேலும் இதை, 3-வது கடையாகப் பிரிக்க வேண்டுமென்று சொன்னால் மேலும் அந்தத் தாய்க் கடை இயங்க முடியாத சூழ்நிலை உருவாகும் என்பதால் இந்தக் கோரிக்கையைத் தற்போது பரிசீலிப்பதற்கு இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி நேரக் கடையைத் திறக்கிற நேரத்தில், அந்தப் பகுதி நேரக் கடைக்கு அந்த ஊரிலே இருக்கிறவர்கள் இனாமாக இடத்தைக் கொடுத்தால்தான் திறக்க வேண்டுமென்கிற சூழ்நிலை இப்போது இருந்துகொண்டிருக்கிறது. அப்படி இருக்கிற நேரத்தில் இனாமாகக் கொடுக்கிறவர்கள், ஒரு வீட்டிலே வாடகை வாங்காமல் கொடுக்கிற நேரத்தில், அந்த வீட்டுக்காரனுக்கு இந்த நியாய விலைக் கடையிலே அரிசி வழங்குவதிலே ஒரு சாதகமாக இருக்கிற சூழ்நிலைகூட ஏற்படும். ஆகவே, இது ஒரு பெரிய தொகையல்ல. கிராமத்திலே வாடகைகூட 300 ரூபாய் அல்லது 500 ரூபாய்க்குள்ளேதான் வரும். ஆகவே, அந்தப் பகுதி நேரக் கடைக்கு அரசே அதனுடைய செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே கூட்டுறவுக் கடன் 310.5 கோடி ரூபாயைத் தள்ளியிருக்கிற நேரத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், இதைக் கருணையோடு பரிசீலித்து, இந்தப் பகுதி நேர நியாய விலைக் கடைகளுக்கு அந்த வாடகையைக் கொடுக்க வேண்டுமாய் உங்கள் வாயிலாக மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி நேரக் கடைகளைப் பிரிக்கிறபோதே, அதனுடைய விதியிலேயே--அந்தக் கடையைக் கேட்கிற அந்தப் பகுதி மக்கள் அதற்கான கடையை வைத்து நடத்துவதற்கான இடத்தையும் அளிக்க வேண்டுமென்கின்ற விதியின் அடிப்படையிலேதான் பகுதி நேரக் கடைகள் பிரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, பகுதி நேரக் கடைகளைக் கேட்கிறபோதே இப்படிப்பட்ட தவறான ஆட்களினுடைய வீடுகளாகப் பார்க்காமல் ஒரு நியாயமான பொது

[2002 ஏப்ரல் 5

இடத்திலே கொண்டு வருகிற அளவிற்குக் கொண்டு வந்தால், அது மிகச் சிறப்பாக இருக்கும். இருந்தாலும், அப்படி யாராவது இந்தக் கடைக்கு இடம் கொடுத்ததற்குப் பின்னாலே, அவர்களை அந்தக் கடையிலே அந்த வீட்டுக்காரர்கள் வற்புறுத்துகிறார்கள், தவறு செய்கிறார்கள் என்று சொன்னால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறபோது அது நிச்சயமாக நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அதற்கு தனியாக வசதியோடு கட்டடம் கட்ட வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் தற்போது உணவு மானியத்திற்கு 1,500 கோடி அளவிற்கு நாம் செலவு செய்து கொண்டிருக்கிறபோது, இந்தச் செலவையும் ஏற்கிற நிலையிலே இந்த அரசு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி நேரக் கடையைப் பொறுத்த அளவிற்கு குறைந்தபட்சம் 200 அடையாள அட்டைகள் இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. குறிப்பாக மலைவாழ் மக்கள் வாழ்கிற பகுதியில் ஒரு கிராமத்திற்கும் இன்னொரு கிராமத்திற்கும் இடையே இருக்கிற தூரத்தைப் பார்க்கிறபோது 5 கிலோ மீட்டர் தூரம், 7 கிலோ மீட்டர் தூரம் என்கிற அடிப்படையில் தூரம் அதிகமாக இருக்கிறது. எனவே, மலைவாழ் மக்கள் வாழ்கிற கிராமங்கள் இருக்கிற பகுதியில் 100 கார்டுகள், 150 கார்டுகள், இன்னும் சொல்லப்போனால், 100 கார்டுகளுக்குக் கீழேகூட இருக்கிறது. எனவே, அதுபோன்ற மலைவாழ் மக்கள் வாழ்கின்ற இடங்களிலே விதியைத் தளர்த்தி — ஏனென்று சொன்னால் இந்தக் கூட்டுறவுச் சட்டத்தை நிறைவேற்றி பல ஆண்டுகாலம் ஆகிறது. இன்றைக்கு மக்களுக்குத்தான் அரசும் சட்டமும் என்கிற அடிப்படையில் பார்க்கிறபோது; இந்தப் பகுதி நேர கடை என்று சொல்கின்றபோது, 10, 15 கிராமங்களை உள்ளடக்கிக்கூட ஒரு கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இந்தப் பகுதி நேரக் கடைகளை நாம் கொடுக்கிறோம். எனவே, விதியை தளர்த்தி இதுபோன்ற, மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியிலே தூரத்தைக் கணக்கிட்டு அந்தப் பகுதியில் பகுதி நேரக் கடைகளைக்



2002 ஏப்ரல் 5]

கொண்டு வருவதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்கிற அந்த விதியைத் தளர்த்த வேண்டிய நிலையிலே இந்த அரசு இப்போது இல்லை. அந்த விதி ஏற்கெனவே தளர்த்தப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கோரிக்கைகள் வருகின்றபோது, அந்தக் கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்களே ஆய்ந்து இந்த அரசுக்குப் பரிந்துரை செய்தால், அதைத் தருகிற வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எம். சீனிவேல்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** அம்மாவை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்பரங்குன்றம் தொகுதி 3 இலட்சத்து 80 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்ட தொகுதி. திருப்பரங்குன்றத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

வினா எண் 102, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**102—**

**விதைகள்**

***4056—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை மூலம் வழங்கப்படும் மணிலா, உளுந்து, பச்சைப்பயறு விதைகள் உரிய நேரத்தில் வழங்கப்படாததால், விவசாயம் பாதிக்கப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவற்றை உரிய காலத்தில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2002 ஏப்ரல் 5

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மணிலா, உளுந்து, பச்சைப்பயறு விதைகள் தக்க பருவத்தில் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு காலகட்டங்களிலே, காலத்தைக் கடந்து, அந்தப் பருவத்திலே வழங்கப்படாமல், அதுவும் நிலக்கடலை, உளுந்து, பச்சைப்பயறு போன்ற மேட்டுத் தாவரப் பயிர்களுக்கான விதைகளையெல்லாம் காலம் கடந்து கொடுப்பதனால், அது சரியாக விவசாயிகளுக்குச் சென்றடையாமல், அதனுடைய பலனை முழுமையாக விவசாயிகள் அனுபவிக்க முடியாமல் இருக்கிறது. இதனால் ஏழையெளிய விவசாய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதனை அரசு க்ருணையோடு கூர்மையாக பரிசீலிக்குமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து நல்ல கருத்து. அப்படி ஏதாவது நடந்திருக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால், அதற்குரிய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 103, திரு. அ. நடராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**103—**

### வேளாண் விற்பனைக் குழு அலுவலகம்

***10997—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் வேளாண் விற்பனைக் குழு அலுவலகத்தை மங்கநல்லூரில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 ஏப்ரல் 5]

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாம்பின்வாய் தேரையான தமிழகத்தை மீட்டு, மீண்டும் அதை தலைசிறந்த மாநிலமாக்கிட மீண்டும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை முதல்வராக்க வாக்களித்த ஆண்டிப்பட்டி மக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிரிகள் சிறைச்சாலைக்குச் செல்லும் காலத்தை தாங்களே நிர்ணயித்து, அஞ்சி நடுங்கச் செய்த இந்தியாவின் இரும்புத் தலைவியின் மலர்ப் பாதங்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், குத்தாலம் தொகுதியில் மங்கநல்லூர் கிராமம் 25 ஊராட்சிகளுக்கு நடுவே அமைந்துள்ளது. அங்குள்ள விவசாயிகளுடைய விளை பொருட்களை விற்பனை செய்வதற்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இல்லாமல் கஷ்டப்படுகின்றார்கள். எனவே, இந்த நிலைமையைப் போக்க புரட்சித் தலைவி அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். மேலும், தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் சேர்த்து தஞ்சாவூர் வேளாண்மை விற்பனைக் குழு ஒன்று மட்டுமே செயல்படுகிறது. நாகை மாவட்டத்திற்கென்று தனியாக வேளாண்மை விற்பனைக் குழு அமைக்கும் திட்டம் புரட்சித் தலைவி அரசில் உள்ளதா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி நெருக்கடி, தஞ்சாவூர் விற்பனைக் குழுவின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு மங்கநல்லூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. என்றாலும்கூட, மயிலாடுதுறை தாலுகாவிலுள்ள மங்கநல்லூர் என்னும் இடத்தில் பயிராகும் பருத்தி மற்றும் இதர விளைபொருட்களின் விற்பனைக்கு ஏதுவாக ஒரு துணை விற்பனைக் கூடத்தை ஆரம்பித்து, அதனுடைய செயலாக்கத்தின் அடிப்படையில், தேவைப்படின், ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்திட அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 104, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சருடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

வினா எண் 105, திரு. லா. சந்தானம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**105—**

**பேருந்து**

***3047—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து சில்லாம்பட்டி, புதுப்பட்டி, பசுக்காரன்பட்டி, காமாட்சிபுரம், அய்யனார்குளம், விக்கிரமங்கலம், சோழவந்தான் வழியாக வாடிப்பட்டிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

உசிலம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து சில்லாம்பட்டி, புதுப்பட்டி, பசுக்காரன்பட்டி, காமாட்சிபுரம், அய்யனார்குளம், விக்கிரமங்கலம், சோழவந்தான் வழியாக வாடிப்பட்டிக்கு பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளதால் மேற்கொண்டு கூடுதல் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, இந்தப் பகுதிக்கு பகுதி பகுதியாக பேருந்து விடப்படுகிறது என்று கூறினார்கள். அந்த இடத்திற்கு, நான் குறிப்பிட்ட உசிலம்பட்டியிலிருந்து பகுதி பகுதியாகச் செல்கின்ற பேருந்திலே ஏறி வாடிப்பட்டி அடைய வேண்டுமென்று சொன்னால் 5,6 பேருந்துகள் மாற வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பகுதி மக்கள் எல்லாம் வாடிப்பட்டிக்குச் சென்றுவிட்டால் அங்கு இருக்கின்ற தேசிய நெடுஞ்சாலையிலிருந்து திண்டுக்கல், கோயம்புத்தூர், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, திருப்பூர், பழனி போன்ற பகுதிகளுக்கும் செல்வதற்கு வாய்ப்பாக வாடிப்பட்டியில்



2002 ஏப்ரல் 5]

பேருந்து வசதி இருக்கிறது. எனவே, ஒரே பேருந்திலே உசிலம்பட்டியிலிருந்து வாடிப்பட்டிக்குச் செல்ல வேண்டுமென்கிற ஆவல் அந்தப் பகுதி மக்களிடத்திலே இருக்கிறது. நான் குறிப்பிட்டிருக்கிற இந்தக் கிராமங்களைத் தொகுத்துப் பார்த்தாலே ஏறக்குறைய எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கிராமங்களைத் தாண்டி இந்தப் பேருந்துகள் செல்கின்றன என்கிற நிலையை எடுத்துச்சொல்வதுபோல் அமைந்திருக்கும். எனவே, பல கிராமங்களை உள்ளடக்கிய இந்த வழித்தடத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து இந்த வழித்தடத்தைத் தொடங்கி பேருந்து விடுவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் பகுதி பகுதியாக இந்தப் பகுதிகளிலே பேருந்து வசதி இருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தாலும், அப்படி பகுதி பகுதியாக இருப்பதே, தேவைக்கு அதிகமான அளவிற்கு அங்கே பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உசிலம்பட்டியிலிருந்து அய்யனார்குளம் கேட்டிருக்கிறார்கள். 8 தனிச் சுற்றுகள் வருகின்றன. அதைப்போல உசிலம்பட்டி-அய்யனார்குளம்-கீரிப்பட்டி-பாப்பாபட்டி வழியாக 4 தனிச் சுற்றுகள் வருகின்றன. உசிலம்பட்டி-விக்கிரமங்கலம்-அய்யனார்குளம் வழியாக 4 தனிச் சுற்றுகள் வருகின்றன. விக்கிரமங்கலம்-வாடிப்பட்டிக்கு 6 தனிச் சுற்றுகள் வருகின்றன. விக்கிரமங்கலம்-சோழவந்தானுக்கு 7 தனிச் சுற்றுகள் வருகின்றன. மற்றொன்றை மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் கவனிக்க வேண்டும். சோழவந்தான்-வாடிப்பட்டிக்கு 62 தனிச் சுற்றுகள் வருகின்றன. இவ்வளவு பேருந்து வசதிகள் இருக்கிற இந்தப் பகுதியிலே பகுதி பகுதியாக இருந்தாலும், நேரடியாக வருகின்ற நேரத்தைவிட குறைவான நேரத்தில், இன்னும் கூடுதலாக நேரடியாக செல்லக்கூடிய வசதிகள் பொது மக்களுக்கு இருக்கின்றன. தேவைக்கு அதிகமான பேருந்துகள் இருக்கின்றன. மேலும், இந்தப் பகுதியிலே ஓடுகின்ற பேருந்துகள் மூலமாக. போதுமான வருவாய் இல்லை என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தேவைக்கு அதிகமாக இந்தப் பகுதிகளிலே பேருந்துகள் இயக்கப்படுவதால் வருமானம் குறைந்திருக்கிறது. இந்த நிலையில் கூடுதலாகப் பேருந்து வசதி இந்தப் பகுதிக்குத் தேவையில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, விக்கிரமங்கலத்திலிருந்து வாடிப்பட்டிக்கு நேரடியாக எந்தப் பேருந்தும் இல்லை. வாடிப்பட்டிக்கும் சோழவந்தானுக்கும் மிக அதிகமான பேருந்துகள் இருக்கின்றன. அப்படி வாடிப்பட்டியிலிருந்து சோழவந்தானுக்கு வருகின்ற பேருந்துகளை விக்கிரமங்கலத்திற்கோ, அய்யனார்குளத்திற்கோ நீட்டித்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருப்பத்தின்பேரில் — இவ்வளவு வசதிகள் போதாது, நேரடியான வசதிகள்தான் வேண்டுமென்று சொல்வார்களேயானால், வலியுறுத்துவார்களேயானால், இதைப்பற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 106, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.

**106—**

### பயணியர் விடுதி

***9682—திரு. கே.கே. உமாதேவன்:**

*மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்பத்தூர் தொகுதியில் அயல்நாட்டுப் பறவைகள் அதிகமாக வந்து தங்கும் வேட்டங்குடிப்பட்டி பறவைகள் சரணாலயத்தில் பயணியர் விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் வேட்டங்குடிப்பட்டி பறவைகள் சரணாலயத்தில் பயணியர் விடுதி கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 5]

**திரு. கே. கே. உமாதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெருக்கோடியிலே இருந்த எங்களைப் போன்றவர்களை கோட்டையிலே அமரவைத்து, அழகு பார்க்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்கள் திசை நோக்கி வணங்கி, திருப்பத்தூர் தொகுதி வேட்டங்குடிப்பட்டி சரணாலயத்தில், வனத் துறை பறவைகள் காப்பகப் பகுதியிலிருந்து பறவைகளைச் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கு 20 அடி மற்றும் 15 அடி உயரத்திற்கு இரண்டு டவர்கள் மற்றும் 200 மீட்டர் தடுப்புச் சுவர்களும் கட்டப்பட்டுள்ளன. ஆஸ்திரேலியா, நைஜீரியா போன்ற வெளி நாடுகளிலிருந்து நாரை மற்றும் பல இனப் பறவைகள் ஜூன் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை வந்து தங்கியிருந்து குஞ்சுகளைப் பொறித்து, தங்கள் நாடுகளுக்கு அழைத்துச் செல்கின்றன. இந்தச் சரணாலயத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தங்கிச் செல்வதற்கு 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு இடம் இல்லை. இதனை மறுபரிசீலனை செய்து, இத்துறையின் மூலம் பயணிகள் தங்கும் விடுதி கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேட்டங்குடிப்பட்டி பறவைகள் சரணாலயம், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரிலிருந்து மதுரை சாலையில் பதினோராவது கிலோ மீட்டர் தூரத்தில் சாலைக்கு அருகில் அமைந்துள்ளது. சுமார் 38.40 எக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இந்தச் சரணாலயத்தில் பருவகாலங்களில் தாராளமான அளவில் உள்நாட்டுப் பறவைகள் மற்றும் வெளிநாட்டுப் பறவைகள் வந்து தங்கி இனவிருத்தி செய்து செல்கின்றன. முக்கியமாக அரிவாள்மூக்கன், கரண்டிமூக்கு நாரை, செங்கால் நாரை, சாம்பல் நாரை, கூழைகடா, மணிப்புறா, மாடப்புறா போன்ற அரிய வகை பறவைகள் உட்பட சுமார் 37 வகையான பறவைகள் வந்து தங்கிச் செல்கின்றன. இந்தச் சரணாலயத்தின் அருகில் அமைந்த வேட்டங்குடிப்பட்டி, கொள்ளுகுடிபட்டி போன்ற சிறிய கிராமப் பகுதிகளில் பயணிகள் விடுதி கட்டினால், சுற்றுலாப் பயணிகளுக்குப் போதுமான வசதிகள் கிடைக்கும் என்பது உண்மை. மேலும், மேற்படி கிராமப் பகுதிகள் சரணாலயத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளதால், இங்கு பயணிகளுக்கு விடுதி கட்டுவதன் மூலம், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதுடன் பறவைகளின் இயற்கையான நடமாட்டத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உமாதேவன், பயணிகள் விடுதி கட்டினால் பயணிகள்தான் வருவார்களே தவிர, பறவைகள் வராது.

வினா எண் 107. திரு. மு. அப்பாவு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**107—**

## சென்ட் தொழிற்சாலை

***2337—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், காவல்கிணறு சந்திப்பில் சென்ட் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த 10 மாதங்களுக்கு முன்னாலே, என்னைப் போன்றவர்களை இந்த அவையிலே அறிமுகப்படுத்தி, இன்று அமைச்சரவையிலே இடம் அளித்து உயர்த்தியிருக்கிற, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய சிரம் தாழ்ந்த வணக்கத்தினை அம்மாவின் பொற்பாதங்களிலே செலுத்தி, என்னுடைய கன்னி பதிலை அளிக்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், காவல் கிணறு சந்திப்பில் சென்ட் தொழிற்சாலை அமைப்பது சம்பந்தமான செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன், மறுபடியும் அமைக்கப்படுமா என்று எழுந்து கேளுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னகத்திலே சென்ட் தொழிற்சாலை அமைப்பதன் மூலம் மணம் நிறைந்த பகுதியாக தென்னகத்தை மாற்ற வேண்டுமென்ற உங்களுடைய கோரிக்கையையும் ஏற்று, அங்கே சென்ட் தொழிற்சாலை





அமைப்பதற்கு மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து ஏற்பாடு செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தொழில் கூட்டுறவுத் துறையின் மூலம் சென்ட் தயாரிக்கும் கூட்டுறவுத் தொழிற்சாலை எதுவும் செயல்படவில்லை. தவிர, சென்ட் தொழிற்சாலைக்கென சிறப்பு மானியம் எதுவும் அரசால் வழங்கப்படுவதில்லை. இருப்பினும் தொழிற்சாலை அமையும் இடம், பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்குமானால் அத்தொழிற்சாலைக்கு முறையே 15 மற்றும் 20 சதவிகித மாநில மூலதன மானியமும், மற்றும் தொழில் தொடங்கிய நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு முறையே 40, 30, 20 சதவிகிதம் என்று மின்சார மானியம் போன்றவை வழங்கப்படுகின்றன. ஆர்வமுள்ள தொழில் முனைவோர் அத்தொழிலைத் தொடங்க முன்வந்தால் அதுபற்றி ஆய்வு செய்து, தொழில் தொடங்குவதற்கான உதவிகள் மற்றும் ஆலோசனைகள் மாவட்ட தொழில் மையத்தால் வழங்கப்படும். மேலும், கூட்டுறவு முறையில் சென்ட் தொழிற்சாலைகளை அமைக்க குறைந்தபட்சம் 20 நபர்கள் சேர்ந்து தொழிற்சாலை அமைக்க முன்வந்தால், சங்கம் பதிவு செய்யப்பட்டு, தொழில் தொடங்க அனைத்து உதவிகளும் செய்யப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா, சென்ட் வேண்டுமா?

**திருமதி டி. யசோதா:** ஆமாம், எனக்கென்று இல்லை என்றாலும் மற்றவர்களுக்காகக் கேட்கிறேன். (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே எங்கேயாவது ஒரு பகுதியிலே, இந்த வரவு-செலவுத் திட்டத்தினுடைய அடிப்படையிலே ஒரு சென்ட் தொழிற்சாலையாவது தொடங்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதை கனிவோடு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சக்திவேல் முருகன்.

[2002 ஏப்ரல் 5

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்கள் வாயிலாகப் பணிவோடு கேட்டுக்கொள்வது, இந்த செண்ட் தொழிற்சாலை என்பது திருநெல்வேலி மாவட்டத்தில், எனது அம்பாசமுத்திரம் தொகுதியில் அமைக்கப்படும் என்று எங்கள் தொகுதியிலேயிருந்து வெற்றிபெற்ற அப்போதைய மத்திய தொழில் துறை அமைச்சர் அவர்கள், எங்கள் தொகுதி பூராவும், அம்பாசமுத்திரத்திலே செண்ட் தொழிற்சாலை அமைக்கப்படும், இத்தனை கோடியில் அமைக்கப்படும் என்று தொகுதி முழுவதும் சொல்லி, அங்கே வேலைகளை ஆரம்பிப்பதுபோல, எங்களுடைய மக்கள் நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில், செண்ட் தொழிற்சாலை எதுவும் பரிசீலனையில் இருக்கிறதா, இல்லையா என்பதுகூட தெரியாத நிலையில், ஓர் அறிவிப்பை அறிவித்துவிட்டு, இன்று எங்களுடைய அம்பாசமுத்திரம் தொகுதி மக்கள் எல்லாம், அந்த செண்ட் தொழிற்சாலை என்ன ஆயிற்று என்றும், நம்முடைய அம்மா அவர்களுடைய ஆட்சியில் நீங்கள் அதைக் கொண்டுவர முயற்சி செய்யுங்கள் என்றும் கேட்கிறார்கள். எனவே, அப்பாவு அண்ணாச்சி அவர்கள் கூறியுள்ளதைப்போல, அப்படி ஒரு செண்ட் தொழிற்சாலை அமைப்பதற்குரிய அனைத்து வசதிகளும் எங்கள் தொகுதியில் இருப்பதால், ஏற்கெனவே அந்தத் தொகுதியில் அமைக்கப்படும் என்று சொல்லிய காரணத்திற்காக, அந்த செண்ட் தொழிற்சாலையை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் கூறியதுபோல அந்த இடத்திலே தொழிற்சாலை அமைப்பது குறித்து ஆய்வு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று கூறி, மேலும் நான் ஏற்கெனவே சொல்லியதைப்போல, ஆர்வமுள்ள தொழில் முனைவோர் யாராவது முன்வந்தால், அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு கூர்ந்து பரிசீலிக்கும் என்பதைப் பணிவோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தன்னுடைய கன்னி பதிலிலே சொல்லும்போது, கனிவோடு ஒரு செண்ட் தொழிற்சாலை கொடுக்கப்படும் என்பதைப்போன்ற...



2002 ஏப்ரல் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிசீலிக்கப்படும் என்றுதான் சொன்னார்கள்.

**திரு. ஐ. கணேசன்:** பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். சேலம் மாவட்டத்திலே, ஏற்காடு அடிவாரத்திலே, அதிலும் கொல்லிமலை அடிவாரத்திலே, தாரமங்கலம், ஓமலூர், சங்ககிரி போன்ற பகுதிகளில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்தனை செண்ட் தொழிற்சாலைகளா?

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, இல்லை, தாரமங்கலம், ஓமலூர், சங்ககிரி ஆகிய பகுதிகளில் மல்லிகைப் பூ மணம் கொடுக்கக்கூடிய பூ மிக அற்புதமாக விளையக்கூடிய அந்தப் பகுதிகளிலே, வாசனை மிகுந்த ஒரு செண்ட் தொழிற்சாலையை இந்த அரசு வழங்க முன்வருமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களேகூட தொழில் முனைய முன்வந்தால் அதுபற்றி அரசு ஆய்ந்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செண்ட் தொழிற்சாலை மிகவும் முக்கியமான ஒரு தொழிற்சாலையாகும். நீலகிரி மாவட்டத்தில் எல்லா பகுதிகளிலுமே வாசனை திரவிய மூலிகைகள் எல்லாம் அதிக அளவிலே கிடைக்கின்றன. நிதிநிலை அறிக்கையிலேகூட, 1.00 கோடி ரூபாய் அளவிலே, தொழிற்சாலைகள் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தருகிறோம் என்று அரசு சொல்லியிருக்கிறது. ஆகவே, வாசனை திரவிய மூலிகைகள் எல்லாம் அதிக அளவில் இருக்கும் நீலகிரி மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலை அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 15 அம்சத் திட்டத்திலே கூறுகிறபோது, தரிசு நில

[2002 ஏப்ரல் 5

மேம்பாட்டுத் திட்டத்தை அமல்படுத்துகிற வகையிலே, அந்தந்த மாவட்டங்களிலே, அந்தந்த ஒன்றியங்களிலே கிடைக்கின்ற ஆதார மூலப் பொருட்களைக் கொண்டு, அதற்கு ஏற்றவாறு தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்று கூறியிருப்பதைக் கருத்திலேகொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை அரசு பரிவோடு கவனிக்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சென்ட் தொழிற்சாலையை அமைப்பதற்குத் தோராயமாக எவ்வளவு நிதி தேவைப்படும் என்பதையும், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு தொழிற்சாலை அமைக்கின்ற ஒரு சீரிய திட்டத்தை இந்த அரசு மேற்கொண்டிருக்கின்ற காரணத்தினால், இரண்டு தொகுதிகள், மூன்று தொகுதிகளிலே இருக்கின்ற ஒன்றியங்களைக்கூட இணைத்து--அங்கே நமது மதுரை மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே எங்களுடைய தொகுதியில் எல்லாம் மிக அதிகமாக மல்லிகைப் பூ போன்ற பூக்கள் விளைகின்றன--அப்படி ஒரு தொழிற்சாலை அமைத்து, அந்த இரண்டு மூன்று தொகுதிகளுக்கு உட்பட்ட மக்கள் பயன்படுகின்ற அளவிலே ஒரு முயற்சியை மேற்கொள்வதற்கு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி ஒன்றைக் கேட்பாரேயானால், அதுபற்றிய விளக்கக் குறிப்புகள் அனைத்தையும் பெற்று அவைக்கு அளிக்க முன்வருகிறேன் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம், புதுப்பாளையம் பகுதிகளில் ஒரு நாளைக்கு 20-க்கும் மேற்பட்ட லாரிகளில் சம்பங்கி, ரோஜா போன்ற பூக்களெல்லாம் பெங்களூருக்குக் கொண்டு சென்று விற்கப்படுகின்றன. ஆகவே, அங்கே ஒரு சென்ட் தொழிற்சாலை அமைப்பதற்கு--இப்போது புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே, ஒரு ஒன்றியத்திலே ஒரு தொழிற்சாலை தொடங்குகிறேன்



2002 ஏப்ரல் 5]

என்று சொல்லியிருக்கிறார்கள்; அப்படிப்பட்ட அந்தத் திட்டத்திலே இப்படி பூக்கள் விளைகின்ற பகுதியிலே சென்ட் தொழிற்சாலை தொடங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதுபோல, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அறிவித்திருக்கிற தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஒன்றியத்திலும், ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும் கிடைக்கின்ற மூலப்பொருளை ஆதாரமாகக் கொண்டு அங்கே ஒவ்வொரு தொழிற்சாலை அமைக்க இருக்கிறார்கள் என்பதை மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 108, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**108—**

**கூட்டுறவு நூற்பாலை**

***7079—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். இராஜபாளையத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்ற திருவள்ளுவரின் குறளுக்கு இலக்கணமாகவும், "ஒரு தாய் வயிறு தாங்காது என்ற காரணத்தினால் பல தாயின் வயிற்றில் பிறந்தோம்"

[2002 ஏப்ரல் 5

என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் சொல்லுக்கேற்ப, ஒரு கோடி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கும், உலகமெங்கும் வாழும் தமிழ்ப் பெருமக்களுக்கும் தாயாக விளங்கி, கடந்த ஐந்தாண்டு காலம் முன்னாள் முதல்வர் கொடுத்து வந்த மலைபோன்ற எதிர்ப்புகளைத் தகர்த்தெறிந்து, மலைகளில் உயர்ந்த மலையாம் இமயமலையைப்போல் உயர்ந்து நின்று, மூன்றாவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று இருக்கும், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள்; — நெருப்பாற்றையும் நீர்வீழ்ச்சியாக்குகின்ற ஆற்றல், அனலையும் தென்றல் ஆக்கும் சக்தி, சதிகளை முறியடிக்கும் வியூகம், சூழ்ச்சிகளை வீழ்த்திடும் மதி நுட்பம், தடைகளை உடைத்தெறியும் வீரம், துரோகத்தை வீழ்த்தும் விவேகம், இவையனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், சாதாரண எளியோனான என்னை இந்த மன்றத்தின் உறுப்பினராக்கி அழகு பார்க்கும் எங்கள் தாய், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியைப் பணிந்து சமர்ப்பித்து, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் வேண்டுகோளை ஏற்று, இரட்டை இலைச் சின்னத்தில் வாக்களித்து, இந்த அவைக்கு என்னை அனுப்பி வைத்த இராஜபாளையம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜசேகர், பேசுகிற வாய்ப்பு கிடைக்கும்போது சொல்லுங்கள். இப்போது கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கோவைக்கு அடுத்து எனது இராஜபாளையம் தொகுதியில்தான் சிறிய பெரிய நூற்பாலைகள் ஏராளமாக இயங்கி வருகின்றன. நெசவாளர்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். பலதரப்பட்ட மக்களும் நூற்பாலைகளுக்குத்தான் வேலைக்குச் செல்கிறார்கள். இவர்கள் தனியார் நூற்பாலைகளில் பணிபுரியும்போது பல பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, இவர்களின் நலன் கருதி அரசு கூட்டுறவு நூற்பாலை அமைக்க முன்வருமா என்பதனைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகள், பஞ்சு விலை, பஞ்சு தட்டுப்பாடு,



2002 ஏப்ரல் 5]

தொழிலாளர் பிரச்சினை, நிதி நெருக்கடி உள்ளிட்ட பல பிரச்சினைகள் காரணமாக ஏற்கெனவே நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதாலும், மேலும் ஸ்ரீவில்லிப்புத்தூர் எட்டையபுரத்தில் நூற்பாலைகள் இயங்குவதாலும், இராஜபாளையத்தில் புதிய கூட்டுறவு நூற்பாலை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை இந்த அவைக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 109, திரு. ப. அரசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**109—**

### சுற்றுலா நகரம்

***5947—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயில் நகரை சுற்றுலா நகரமாக அறிவிக்கும் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயில் நகரை சுற்றுலா நகரமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற சிற்பக் கலைகளிலேயே மிக அற்புதமான சிற்பக் கலை உள்ள கோயில் ஆவுடையார்கோயில் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்த ஒரு இடத்தையும், சுற்றுலாத் துறை கொள்கையளவில் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலாத் தலமானது, தன்னகத்தே கொண்டுள்ள சிற[illegible] தன்மை, [illegible]ற்றுச் சான்றுகள், வளங்கள் மற்றும் மக்களின் வருகை, [illegible]

22.4.88
சென்னை-600 008

[2002 ஏப்ரல் 5

விளங்கும். இந்தக் கோயிலைக் காண தமிழகத்திலுள்ள பல்வேறு இடங்களிலிருந்து பக்தர்களும் பொதுமக்களும் நாள்தோறும் வருகை தருவதால் ஆவுடையார்கோயில் பிரசித்திபெற்று விளங்குகிறது. தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில் அதன் சிறப்பை மேலும் உயர்த்தும் வகையில் எதிர்காலத்தில் சுற்றுலாத் துறையால் வெளியிடப்படவுள்ள சுற்றுலா கையேடுகளில் ஆவுடையார்கோயில் பற்றிய சிறப்புகளை மேலும் இடம்பெறச் செய்யவும் மற்றும் சுற்றுலா பற்றிய வலைதளத்தில் ஆவுடையார்கோயில் குறித்த செய்திகளை இடம்பெறச் செய்யவும் ஆவன செய்யப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அந்த ஆவுடையார்கோயிலுடைய பெருமையை மாவட்டம் முழுவதும் தெரிவிக்கிற வகையில், தமிழகம் முழுவதும் அறியக்கூடிய வகையில் மாணிக்கவாசகர் பிறந்தநாள் விழாவை அரசு விழாவாகக் கொண்டாடினார். இடையிலே அது நிறுத்தப்பட்டுவிட்டது. ஆகவே, மாணிக்கவாசகர் பிறந்தநாள் விழாவை அரசு விழாவாக நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இப்போது இருக்கக்கூடிய நிதிநிலையை ஆய்ந்து, சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாணிக்கவாசகர் ஆவுடையார்கோயிலில் பிறக்கவில்லை; திருவாதவூரில் பிறந்தவர்.

**திரு. ப. அரசன்:** இக்கோயிலை கட்டியவர் மாணிக்கவாசகர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2002 ஏப்ரல் 5]

## 2. கவன ஈர்ப்பு

### தனியார் கல்லூரிகளில் முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் நியமனங்களில் இனச் சுழற்சி முறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-இன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு. திரு. க. முருகவேல் ராஜன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. க. முருகவேல் ராஜன்.

***திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அரசின் நிதி உதவி பெறும் தனியார் கல்லூரிகள் 160 இருக்கின்றன....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முருகவேல் ராஜன், அதில் கொடுத்திருப்பதை வாசிக்க வேண்டும், அவ்வளவுதான்.

***திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு முழுவதும் உள்ள தனியார் கல்லூரிகள் மற்றும் அரசு நிதி உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் முதல்வர் மற்றும் பேராசிரியர் நியமனத்தில் இனச் சுழற்சி முறை, முறையாக பின்பற்றப்படாததால் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் நிலவும் நிலை குறித்து "மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

தமிழ்நாட்டில் உள்ள அரசு உதவிபெறும் கல்லூரிகளில் முதல்வர் நியமனம் தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்று) விதிகள் 1976-ன் விதி 11(4)(i)-ன்படி தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் (Merit and Ability) பதவி உயர்வின் (Promotion) மூலம் நிரப்பப்படுகிறது. தகுதி மற்றும் திறமை சமமாக இருக்கும் போதுதான் பணிமூப்பு (Seniority) கருத்தில் கொள்ளப்படும். பதவி உயர்வுக்கு இனச் சுழற்சி முறை பொருந்தாது. இவ்விதிகளின்படி பதவி உயர்வு மூலமே உதவிபெறும் கல்லூரிகளில் பெரும்பாலும் முதல்வர் பணியிடம்

நிரப்பப்பட்டு வருகிறது. அவ்வாறு பதவி உயர்வின் மூலம் முதல்வராக நியமிக்கத் தகுதியான நபர் அக்கல்லூரியில் எவரும் இல்லையெனில், அப்பதவியினை, தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்று) விதிகள், 1976 விதி 11(4) (ii)-ன்படி பத்திரிகை விளம்பரம் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெற்று நேரடி நியமனம் (Direct recruitment) மூலம் அக்கல்லூரி நிரப்பலாம். இவ்வாறு நேரடி நியமனம் மூலம் முதல்வர் பதவி நிரப்பப்படும்போதுதான் இனச்சுழற்சி முறை பின்பற்றப்பட வேண்டும்.

2. கல்லூரிகளில் 1-1-1966 முதல் பேராசிரியர் என்ற பதவி விரிவுரையாளர் முதுநிலை மற்றும் தேர்வு நிலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. தற்போது பேராசிரியர்கள் பதவி நடைமுறையில் இல்லை. விரிவுரையாளர்கள் பொறுத்தமட்டில் அவரது பணிக்காலத்தின் அடிப்படையில் அவர்களுக்கு முதுநிலை மற்றும் தேர்வு நிலை பணி மேம்பாடு (Career Advancement) மூலம் பல்கலைக்கழக மானியக் குழுவின் அறிவுரைகளின்படியும் மற்றும் இது தொடர்பான அரசாணைப்படியும் வழங்கப்பட்டு வருகிறது. இதில் இனச் சுழற்சி முறை கடைபிடிக்கும் நிலை எழவில்லை. உதவி பெறும் கல்லூரிகளில் விரிவுரையாளர்கள் நேரடி நியமனம் மூலம் நியமிக்கப்படுகிறார்கள். அந்நியமனங்களில் இனச் சுழற்சி முறை சரிவர கடைபிடிக்கப்படுகிறது.

3. மேலும் இது தொடர்பாக தமிழ்நாட்டில் உள்ள உதவி பெறும் கல்லூரிகளில் முதல்வர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களிடையே பதட்ட நிலை ஏதும் நிலவவில்லை.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அரசு நிதி உதவி பெற்று இயங்கக்கூடிய தனியார் கல்லூரிகள் கிட்டத்தட்ட 160 இருக்கின்றன. அவற்றிலே ஒன்றில்கூட, பட்டியலின பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் முதல்வராக இல்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளித்து இருக்கக்கூடிய அந்த அறிக்கையிலே, பதவி உயர்வுக்கு இனச் சுழற்சி முறை பின்பற்றத் தேவையில்லை. தகுதியின் அடிப்படையில் தகுதி படைத்தவர்கள் பதவி உயர்வின் அடிப்படையிலே முதல்வர் பதவிக்கு அமர்த்தப்படுகிறார்கள். அங்கே இனச் சுழற்சி பின்பற்றுவதற்கு தேவையில்லையென்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் 12-5-1999 அன்று இந்தச் சபையிலே ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்த அரசாணை எண் 162-லே ஒன்றுக்கு



மேற்பட்ட பணி இடங்களுக்கு ஒரே முகமையின்கீழ் பல நிறுவனங்கள் இருக்கிறபோது, கல்வி நிலையங்கள் இருக்கிறபோது, ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு நியமனம் மேற்கொண்டால் இனச் சுழற்சி முறை பின்பற்றப்பட வேண்டுமென்று அது கூறுகின்றது. அதேநேரத்திலே, பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற அரசியல் சட்டத் திருத்தம், 1995 ஆம் ஆண்டு, 11 ஆம் மாதம், 17ஆம் நாள் குடியரசுத் தலைவர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதுகுறித்து 'இந்து' பத்திரிகையில் ஜனவரி 16, 2002-லே ஒரு செய்தி வந்திருக்கிறது. அதை நான் இங்கே வாசித்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன், கேள்விதான் கேட்கலாம்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** கேள்வி தொடர்புடையது. பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு அதை நான் இந்த அவைக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

"Government employees belonging to the Scheduled Castes and the Scheduled Tribes are entitled to seniority, consequent upon their elevation under the reservation rules with effect from June 1995. Hon. President, K.R. Narayanan had given his assent to the Constitution (92nd amendment), Bill 2001, notified in the Gazzette as the Constitution (85th amendment) Act 2002, amending Article 16 Clause 4(a) of the Constitution.

The amendment provides for consequential seniority. . . . (The gong was sounded)."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன் அவ்வளவையும் படிக்க வேண்டியதில்லை. அதற்குரியதை அமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** அந்தச் செய்தியின்படி குடியரசுத் தலைவர் மூலமாக, 1995 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டிருக்கிற அந்தத் திருத்தம், பதவி உயர்விலே தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டும்

[திரு. க. முருகவேல் ராஜன்] [2002 ஏப்ரல் 5

என்று தெளிவாகச் சொல்கிறது. நம்முடைய மாநில அரசும்கூட கடந்த ஆளுநர் உரையிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, ஒரு கேள்வியைக் கேளுங்கள். கேட்டால்தான் அமைச்சர் பதில் சொல்ல முடியும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** கேள்விக்குத்தான் வருகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, இதை விளக்கிச் சொல்லாமல் கேள்வியைப் புரிய வைக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவ்வளவு விளக்கம் எல்லாம் அனுமதிக்க முடியாது. கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** G.O. 44-ன்படி பதவி உயர்வில் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று நம்முடைய அரசும் சொல்கிறது. அதாவது, 160 கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றில் கூட தாழ்த்தப்பட்டவர்கள் முதல்வராக இல்லை. இன்னும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும்கூட பதவி உயர்விலே இனச் சுழற்சி முறை பின்பற்றப்படவில்லை என்ற நிலைமையில் இருக்கிறார்கள். இதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன. பச்சையப்பன் அறக்கட்டளை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதற்குள்ளேயெல்லாம் போகக்கூடாது. என்ன கேள்வி வேண்டுமோ அதை மட்டும் தாங்கள் கேட்கலாம்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** எனவே, இனச் சுழற்சி முறையை இந்த அரசு பின்பற்றுமா? பதவி உயர்விலும் பின்பற்றப்பட வேண்டும் என்ற குடியரசுத் தலைவர் அவர்களுடைய அந்தச் சட்டத் திருத்த ஆணையையும், G.O.44-ஐயும் பின்பற்றி, அது நேரடி நியமனமாக இருந்தாலும் சரி அல்லது தேர்வின் மூலமாக இருந்தாலும், பதவி உயர்வின் மூலமாக இருந்தாலும்கூட, எல்லாவற்றிலும் சமூக நீதியைக் காக்கும் வகையில் இட ஒதுக்கீட்டைப் பின்பற்றுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, தனியார் கல்லூரியில் முதல்வர், பேராசிரியர் போன்றவர்களை நியமனம் செய்யும்பொழுது, இனச்சுழற்சி முறையைக் கடைபிடிப்பதில்லை என்று



2002 ஏப்ரல் 5] [டாக்டர் மு. தம்பிதுரை]

ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். இத்தகைய பணியிடங்களை நியமிக்கும்பொழுது, பொதுவாக அந்தக் கல்லூரியில் இருக்கும் ஆசிரியர்களை வைத்தே, அவர்களுடைய Merit and ability-யை வைத்தே, அவர்களின் தகுதியையும் திறமையையும் வைத்துத்தான் பொதுவாக முதல்வர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இதற்கு தனியார் கல்லூரிக்கு என்று சில விதிமுறைகள் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்பொழுது, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள், மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்கள் போன்றவர்களுக்கு இதுபோன்ற பதவிகள் கிடைக்காமல் இருக்கின்றன என்று வருத்தப்பட்டுச் சொன்னார்கள். நானும் அவருடன் சேர்ந்து அதற்கு வருத்தப்படுகின்றேன். ஏனென்றால், இந்தச் சமுதாயத்தில் நீதி காக்கின்ற நிலையில் இது போன்ற மக்களுக்கு இது போன்ற பதவிகளைத் தருவதுதான் மிக முக்கியம். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், இந்த Tamil Nadu Private Colleges Regulation Act, 1976 - இதை வைத்துக்கொண்டுதான் தனியார் கல்லூரியைச் சார்ந்தவர்கள் பேராசிரியர்களையும் முதல்வர்களையும் நியமனம் செய்தார்கள்.

இப்பொழுது பேராசிரியர் என்பது கிடையாது. இப்பொழுது இருப்பது Selection Grade, Senior Grade என்ற இரண்டு கிரேடில்தான் பேராசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அத்தகைய நிலையில் தேர்ந்தெடுக்கிறார்கள். அவர் பச்சையப்பன் கல்லூரியைப்பற்றி குறிப்பிட்டார். பச்சையப்பன் கல்லூரியிலே 3 கல்லூரிகளில் முதல்வர் பதவி காலியானது. அவர்கள் என்ன செய்தார்கள் என்றால், உயர் நீதிமன்றத்தை அணுகி, அதன்மூலமாக எவ்வாறு நிரப்புகிறார்கள் என்பதைப்பற்றியும் விளக்கமாகச் சொல்லி, அதன்படிதான் இவர்கள் நிரப்பியிருக்கிறார்கள்.

முற்பகல் 10-55

அதில் அவர்கள் கடைபிடித்தது, நான் சொன்னதுபோல, Tamil Nadu Private Colleges Regulation Rules, 1976 என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் 11(4)(1)-இன்படி சொல்லியிருப்பது Promotions in respect of teaching staff shall be made on the grounds of merit and ability என்று சொல்லியிருக்கிறார்கள். அதில், சீனியாரிட்டி என்பதுகூட, இந்தத் தகுதிக்குச் சமமாக இருக்கும்போதுதான், அந்த சீனியாரிட்டியும் Consider செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். பிறகு, பேராசிரியர்களை Lecturer-களை, விரிவுரையாளர்களைத்

தேர்ந்தெடுக்கும்போது, முதலிலே விளம்பரம் கொடுக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கும்போது, இனச் சுழற்சி முறை கடைபிடிக்கப்படுகிறது. ஆனால், Promotion-அந்தக் கல்லூரியிலே இருக்கும் ஆசிரியர்களுக்கு, முதல்வர் பதவிக்கு Promotion தரும்போது, பதவி உயர்வு தரும்போது, இந்த இனச் சுழற்சி முறையைக் கடைபிடிப்பது இல்லை. இதுதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது உண்மைதான். இதற்குக் காரணம், இந்த Act-ஆனது, இந்த Regulation Act-ல் சொல்லப்படுவதன் காரணமாக, இந்தக் கல்லூரிகளில் இப்படிச் செய்திருக்கிறார்கள். அதற்கு அடுத்ததாக, இப்படிப்பட்ட நல்ல ஆசிரியர்கள், தகுதி பெற்றவர்கள் கிடைக்காவிட்டால், அப்போது பத்திரிகைகளிலே விளம்பரம் கொடுக்கலாம். அத்தகைய நிலைமை இருக்கும்போது, ஒன்றுக்கும் மேற்பட்ட, அவர் சொன்னதுபோல, ஒன்று அல்லது மூன்று என்று இடங்கள் காலியாக இருந்தால், அந்தக் கல்லூரிகளிலே, காலியாக இருந்தால், அப்போது இனச் சுழற்சி முறையானது கடைபிடிக்கப்படும். ஆகவே, பச்சையப்பன் கல்லூரியைப் பொறுத்தவரையில், அவர்கள் விளம்பரம் எதுவும் தரவில்லை. அவர்கள் அந்தக் கல்லூரியிலே இருக்கும் தகுதிவாய்ந்த ஆசிரியர்களிடம் மனுக்களைப் பெற்று, அதன்மூலமாக நியமனம் செய்திருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் சொன்னதுபோல, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்பது உண்மைதான் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின்.... (குறுக்கீடு) திரு. முருகவேல் ராஜன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

***திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் ஓர் அறிவிப்பு கொடுத்திருந்தேன்....

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதவி உயர்வு என்பது, தகுதியின் அடிப்படையிலே, தாங்களாகவே தேர்வு செய்துக்கொள்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், பச்சையப்பன் கல்லூரியிலே நேர்முகத் தேர்வின் மூலமாக



தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. 13-10-1999-லே ஒரு கடிதம் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். "College Committee for Interview - 2 PM, Wednesday, 27th October 1999" அன்று இண்டர்வியூ நடத்தியிருக்கிறார்கள். அப்படி இண்டர்வியூ நடத்துகிறபோது, 3 கல்லூரிகள் அந்த முகமையின் கீழே இருக்கின்றன. 3 கல்லூரிகளிலே இண்டர்வியூ நடத்தி வரும்போது, தாழ்த்தப்பட்ட பகுதியிலே இருந்து ஒரே ஒரு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன், இவ்வளவையும் அனுமதிக்க முடியாது. கவன ஈர்ப்பு அறிவிப்பிலே கேள்வியைத்தான் கேட்கலாம். அப்படி வேறு ஏதாவது இருந்தால், அமைச்சரிடத்திலே பெட்டிஷனாகக் கொடுங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** நேர்முகத் தேர்வு என்றால் என்ன நிலைமை? ஜனாதிபதி அவர்களுடைய அந்த உத்தரவு கடைபிடிக்கப்படுமா இந்த அரசால்? அப்படிப் பார்த்தாலும், அவர்களுக்குப் பணிமூப்பின் அடிப்படையிலே கொடுக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அதை இந்த அரசு என்ன செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் கல்லூரியைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கும் ஆசிரியர்களிடமிருந்துதான் விண்ணப்பங்களைப் பெற்றிருக்கிறார்கள். இதற்காகத் தனியாக விளம்பரம் கொடுக்கப்பட வில்லை. அந்த ஆசிரியர்களிடமிருந்து பெற்று, அவர்களுக்குள் அந்த Merit and ability என்ற சொல்கிறார்களே, அதை வைத்துக்கொண்டு— சீனியாரிட்டி என்பது பிறகுதான். முதல் இரண்டும் இருந்தால், சீனியாரிட்டி வருவதில்லை. அதில் யாருக்கு என்பதில் அந்த 17 விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் அவர்கள் மனுக்களைக் கொடுத்திருக் கிறார்கள். அவர்களுக்குள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் தனியாக விளம்பரம் கொடுக்கப்பட்டு, நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது கிடையாது. இது promotion என்று அந்த விதியின்படி, முறைப்படி செய்திருப்பதன் காரணமாக, இத்தகைய நிலையிலேதான் செய்திருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினையைப் பற்றி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அறைக்கு வாருங்கள். அவையெல்லாம் ஆய்விலே இருக்கின்றன. (குறுக்கீடுகள்) அதெல்லாம் முடிந்தது; அதெல்லாம் முடிந்தது.

## 4. அறிக்கை அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொதுக் கணக்குக் குழுவின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான இருபத்து ஒன்பது முதல் முப்பத்து மூன்று வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 3. தகவல் கோரல்-தொடர்ச்சி

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லாம் அறைக்கு வாருங்கள். குறுக்கீடு) திரு. திருமாவளவன், அறைக்கு வாருங்கள், பேசிக்கொள்ளலாம்.





## 4. அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 11 முதல் 15 வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம், திரு. எச். ராஜா.

முற்பகல் 11-00

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003-வது ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை கடந்த 27-3-2002 அன்று இந்த மாமன்றத்தின் முன்பாக நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அந்த நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்துகொள்கிற வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் நாட்டிலேயே முதன்மையான மாநிலமாக தமிழகத்தைக் கொண்டுவர வேண்டும் என்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணத்தைச் செயல்படுத்துகின்ற முயற்சி இந்த நிதிநிலை அறிக்கை என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தனது உரையிலே கூறினார்கள். தமிழகத்தை முதன்மையான மாநிலமாக உயர்த்திட வேண்டுமானால், திட்டம் சாரா செலவுகள் குறைக்கப்பட்டு திட்டச் செலவுகள் அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால், 2001-2002 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினுடைய திருத்த மதிப்பீட்டில் திட்டச் செலவுகள், 6,040 கோடியிலிருந்து 5,200 கோடியாக குறைக்கப்பட்டு இருக்கிறது. அதுபற்றி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மாமன்றத்தின் வேறுசில உறுப்பினர்களும், மத்திய அரசாங்கத்தின் வரிகளில் பங்கு 512 கோடி ரூபாய் குறைக்கப்பட்ட

காரணத்தால்தான், திட்டச் செலவுகள் குறைக்கப்பட்டு இருக்கின்றன என்று இங்கே கருத்துச் சொன்னார்கள். ஆனால், மத்திய அரசினுடைய வரியின் பங்கு குறைக்கப்பட்டதைவிட, அதிகமாக 328 கோடி ரூபாய்—அதாவது திட்டச் செலவுகள் 840 கோடி ரூபாய் குறைக்கப்பட்டு இருக்கிறது. மேலும், சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே எப்போது 6,040 கோடி ரூபாய் திட்டச் செலவுகள் என்று மதிப்பிடப்பட்டதோ, அதற்குப் பிறகு, 4 மாதங்களுக்கு முன்பாக, தமிழக அரசு, 3,300 கோடி ரூபாய் அதிகமாக நிதி திரட்ட வேண்டுமென்ற முயற்சியை மேற்கொண்ட பிறகும்கூட, திட்டச் செலவுகள் 840 கோடி ரூபாய் குறைக்கப்பட்டு இருப்பதை இங்கு அடிக்கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதேசம், மஹாராஷ்ட்ரா ஆகிய மாநிலங்களின் per capita plan expenditure 1200-க்கு மேலாக உள்ளது. ஆனால், 2001-2002-லே தமிழகத்தினுடைய ஜனத் தொகை 6 கோடி என்று கணக்கிட்டுப் பார்த்தால்கூட 850 ரூபாய்தான் per capita plan expenditure வருகிறது. ஆகவே, அரசாங்கம், ஏற்கெனவே நியமித்து இருக்கின்ற சாமிநாதன் கமிட்டி அறிக்கையை வைத்து—அது ஏற்கெனவே 3 இடைக்கால அறிக்கைகளை தந்து இருக்கிறது—அதன் அடிப்படையிலே திட்டம் சாரா செலவுகளைக் குறைப்பதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் நிதிநிலை சீர்திருத்தங்களைக் கொண்டுவர, slowing down of the pace of the growth in revenue expenditure வருவாய் செலவுகளைக் குறைப்பது, அரசு வருவாயைக் கூட்டுவது, நிதிப் பற்றாக்குறை மற்றும் வருவாய்ப் பற்றாக்குறை ஆகியவற்றைக் குறைப்பது ஆகியவை அரசினுடைய நோக்கங்களாக இங்கே தெரிவிக்கப்பட்டு இருக்கின்றன. நோக்கங்கள் நல்ல நோக்கங்களாக இருக்கின்றன. ஆனால், நடப்பாண்டில் 2001-2002 திருத்த மதிப்பீட்டைவிட, 2002-2003 ஆம் ஆண்டுக்கான வருவாய் செலவுத் திட்ட மதிப்பீடு 4,347 கோடி ரூபாய் அதிகமாக இருக்கிறது. இது அரசாங்கத்தினுடைய objective-ஆக சொல்லப்பட்டு இருப்பதை கடைபிடிப்பதுபோல் இல்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறையும்கூட, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமாக காணப்படுகிறது. மேலும், இந்த நிதிநிலை அறிக்கையில் 690 கோடி ரூபாய்க்கு புதிய



வரிகள் விதிக்கப்பட்டு இருக்கின்றன. 690 கோடி ரூபாய்க்கு புதிய வரிகள் விதிக்கப்பட்ட பிறகும்கூட, un-covered deficit-Budget பற்றாக்குறை 640 கோடி ரூபாய் இருக்கிறது. பொதுவாக இந்தப் பற்றாக்குறை எப்போதுமே விலைவாசியை உயர்த்தக்கூடிய அம்சம் உள்ளதாகும். விலைவாசி உயர்வால் நடுத்தர மக்கள், சாமானிய மக்கள் அதிகமாக பாதிக்கப்படுவார்கள். அதிலும், குறிப்பாக, அரிசி, கோதுமை, மிளகு, வெல்லம், பருப்பு ஆகிய பொருட்கள்மீது விதிக்கப்பட்டுள்ள வரிகள், நடுத்தர மக்கள், சாமானிய மக்களைப் பாதிக்கும். எனவே, இந்தப் புதிய வரிவிதிப்பை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நிதிநிலை அறிக்கையிலே 6,000 கோடிக்கு மேலாக வரி பாக்கி உள்ளது. அரசு இவற்றை வசூலிப்பதற்காக சமாதான திட்டம்-Settlement Commission மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

வரி பாக்கிகளை வசூல் செய்வதற்கான இந்த நடவடிக்கைகளை பாரதிய ஜனதா கட்சி வரவேற்கிறது. அதேசமயத்திலே மொத்த வரிகளே 690 கோடி. அதிலே அரிசி, கோதுமை, மிளகு, வெல்லம், பருப்பு ஆகிய உணவுப் பொருட்கள் மீதான வரியின் அளவு மிகவும் குறைவாக இருக்கும் என்கிற காரணத்தால், பொதுமக்களுடைய பரவலான கோரிக்கையை ஏற்று அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11-05

மேலும், விவசாயத் துறையிலே கடந்த 5 ஆண்டுகளாக வளர்ச்சி விகிதம் 2.72 சதவிகிதமாக மட்டும் இருந்து வருகிறது. அதை இந்த ஆண்டிலே 4 சதவிகிதமாக உயர்த்த அரசு முயற்சி செய்யும் என்று குறிப்பிட்டுள்ளதை வரவேற்கிறேன். ஆனால், அதேசமயத்திலே உற்பத்தியைக் கூட்ட வேண்டுமென்று சொன்னால், வளர்ச்சி விகிதம் கூட வேண்டும் என்று சொன்னால், மூலதனம் அதிகமாக அதற்கு ஒதுக்கப்பட வேண்டும். ஆனால், வேளாண்மைக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிற நிதி, சென்ற ஆண்டைவிட வெறும் 2 கோடி ரூபாய் மட்டுமே அதிகமாகி இருக்கிறது. It is kept at the same level. அது நாம் விரும்புகிற, அரசாங்கம் எதிர்பார்க்கிற வளர்ச்சியைக் கொடுக்குமா என்பதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால்,

[திரு. எச். ராஜா]

தமிழகத்திலே சாகுபடி செய்யாமல் இருந்து கொண்டிருக்கிற, waste land தரிசு நிலத்தை மேம்படுத்துவதற்காக 40 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்க ஓர் அம்சமாகும்.

மேலும் விவசாயத் துறையிலே அதிகமாக மூலதனம் கொண்டு வரவேண்டியது அவசியம். பல ஆண்டுகளாக விவசாயத் துறை பல அரசுகளின் பாராமுகம் காரணமாகவும், விவசாயம் ஆதாயம் தருகின்ற தொழிலாக இல்லாத காரணத்தாலும், விவசாயத் துறைக்கான மூலதனங்கள் படிப்படியாக குறைந்து வந்திருக்கிறது. எனவே, இதை ஊக்குவிப்பதற்காக அரசு தனியார் மூலதனத்தைக் கொண்டு வருவதற்கு எடுக்கின்ற முயற்சியையும் வரவேற்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கொடுக்கப்படுகிற மாநில நிதிக் குழுவின் மானியம் 1,505 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பது வரவேற்கத்தக்கதாகும். ஆனால், சென்ற ஆண்டில் 1,083 கோடி ரூபாய் மாநில நிதிக் குழுவின் மானியமாக நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டது. ஆனால், திருத்த மதிப்பீட்டின்படி, உண்மையிலேயே ஒதுக்கப்பட்டிருப்பது, actual allocation, 437 கோடி ரூபாயாக மட்டுமே இருக்கிறது. எனவே, இந்த ஆண்டு நாம் ஒதுக்கியிருக்கிற 1,505 கோடி ரூபாய், உள்ளாட்சி அமைப்புகளுக்கு இதே அளவில் கிடைப்பதற்காக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு ஊரக வளர்ச்சித் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போது, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டு வரப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த பட்ஜெட்டிலே புதிய வீராணம் திட்டத்திற்கும், அவினாசி-அத்திக்கடவுத் திட்டத்திற்கும் நிதி ஒதுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. புதிய வீராணம் திட்டத்திற்கு ரூ.77.38 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே, இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்பதையும் நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த வறட்சிமிக்க மாவட்டங்களிலே, குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு, அரசு இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு முன்னுரிமை தரவேண்டும் என்பதையும் நான் இந்த இடத்திலே கோரிக்கையாக வைக்கிறேன்.



[திரு. எச். ராஜா]

1-1-2005-லிருந்து உலக வர்த்தக மையத்தின் ஒப்பந்தத்தின்படி Product-patent regime வருகின்ற காரணத்தால், அலோபதி மருந்துகளுடைய விலைகள் உயரும். எனவே, ஏழை மக்களுடைய நலன் கருதி, சித்தா, யுனானி மற்றும் ஆயுர்வேதம் ஆகிய மருத்துவ முறைகள் பலப்படுத்தப்படும் என்று இங்கு நிதி அமைச்சர் அவர்கள் தனது உரையிலே கூறியிருக்கிறார்கள். ஆனால், அதே சமயத்திலே, இதுவரை வரி விலக்கு பெற்று வருகிற சித்தா, யுனானி மருந்துகளுக்கு, 4 சதவிகிதம் புதிய வரி விதிக்கப்பட்டுள்ளது. இது அரசினுடைய நோக்கத்திற்கு முரண்பாடாக இருக்கிற காரணத்தால், சித்தா, யுனானி ஆகிய மருந்துகளுக்கு, அரசு அறிவித்திருக்கிற இந்தப் புதிய வரிகளை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இது விஷயமாக, ஒரு சில சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது, உலக வர்த்தக மையத்தினுடைய—இந்திய அரசாங்கம் W.T.O.-வோடு செய்திருக்கிற ஒப்பந்தத்தினால் ஏற்படுகின்ற விளைவுகள் பலபற்றி பேசுகிறபோதெல்லாம் இப்போது இருக்கின்ற வாஜ்பாய் அவர்களுடைய அரசாங்கத்தைச் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். ஆனால், 1991-லிருந்து 1998 வரை உலக வர்த்தக மையத்தில் இந்தியாவை Commit செய்வதற்கு முன்பாக என்னென்ன விளைவுகள் ஏற்படும். ஆகவே, ஒருகால் தேவை ஏற்பட்டால், multi lateral agreement-க்குப் பதிலாக bi-lateral agreement கூட மற்ற நாடுகளோடு இருக்கலாம். இதிலே நாம் கண்ணை மூடிக்கொண்டு ஒப்புக்கொள்ளக்கூடாது என்று பாரதிய ஜனதா கட்சி பலமுறை அன்றைய அரசுகளை வலியுறுத்தி வந்துள்ளது.

முற்பகல் 11-10

இது பற்றி நாம் நம்முடைய கருத்துகளை முழுமையாக தெரிவித்து வந்திருக்கிறோம். ஆனால், அந்த 1991-98 ஆண்டுகளுக்கு இடையே இருந்த இரண்டு அரசுகளும், துரதிர்ஷ்டவசமாக Globalisation-ஐ, Liberalisation-ஐ, எடுத்துக்கொண்டு செயல்பட்ட காரணத்தினால், நம்முடைய நாடு பொருளாதார விஷயத்திலே பல்வேறு பிரச்சினைகளை இப்போது சந்தித்துக்கொண்டு இருக்க வேண்டி இருக்கிறது.

உள்நாட்டிலே இருக்கிற பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, தாராளமயமாக்கல் என்பதை பாரதிய ஜனதா கட்சி கொள்கை ரீதியாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. "Public Sector to have commanding heights of the economy" என முதல் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு

அவர்கள் சொன்ன கருத்து, நாம் சுதந்திரம் அடைந்த காலகட்டத்திலே, அது பொருத்தமாக இருந்தது. ஆனால், அதற்குப் பிறகும் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் அரசுத் துறையில் முடக்கப்பட்டு, அது பல்வேறு விதங்களிலே நட்டமான பல கம்பெனிகள் இருக்கின்ற காரணத்தினாலேதான், liberalisation-ஐ—அதாவது செட்டிநாட்டைச் சேர்ந்தவன் நான். அங்கே இருக்கின்ற ஒரு பையன் தன்னுடைய தகப்பனாரிடம் ஒரு தொழில் தொடங்க வேண்டும் என்று கேட்டால், அவர் முதலிலே கேட்பது, நீ தொழில் தொடங்குவதாக இருந்தால், பேங்க் வட்டியாவது கட்டுமா என்று கேட்டுத்தான் அவர் அதற்கு அனுமதி கொடுப்பார். ஆனால், அப்படியெல்லாம், நம்முடைய இன்வெஸ்ட்மெண்ட்டுக்கான ரிட்டர்னைப் பற்றிக் கவலைப்படாமல் செயலாற்றிய காரணத்தினாலே, மிகப் பெரிய கடன் சுமையிலே நம்முடைய மத்திய அரசும் சரி, பல மாநில அரசுகளும் சரி, இருந்துகொண்டு இருக்கின்றன. அதன் காரணமாகத்தான் பல்வேறு Liberalisation methods மூலமாக சில தனியார்மயமாக்கல் கொள்கையைக்கூட நாம் ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது.

மேலும், இந்த நிதிநிலை அறிக்கையிலே மலிவு விலை மதுத் திட்டம் கைவிடப்பட்டது தாய்மார்களால் பெரிய அளவிலே வரவேற்கப்பட்ட ஓர் அம்சமாகும். ஆனால், அதேசமயத்திலே மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் மதுக்கடையில் 'Bar' வைத்துக்கொள்ள அனுமதி உரிமம் வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. பல மதுக்கடைகள் ஏற்கெனவே வழிபாட்டுத் தலங்களுக்கு அருகிலே--நம்முடைய நண்பர்கள் சொன்னார்கள் அங்கு சென்று பார்த்தேன் நான்--வடபழனியிலே கோவில் குளத்திலேயே பாலம் போட்டு மதுக்கடை வைக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்களுக்கு அருகிலே மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற குடியிருப்புப் பகுதிகளிலே, மதுக்கடைகள் இருக்கின்றன. அம்மாதிரியாக இருக்கின்ற இடங்களிலே இப்போது 'Bar' வைத்தால் அந்தப் பகுதியினுடைய அமைதி கெடும். அதோடு மட்டுமல்லாமல், குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவது-drunken driving சட்டப்படி குற்றமாகும். மதுக்கடைக்குச் சென்று, மது அருந்திவிட்டு அவர்கள் வீட்டிற்குப் போய்ச் சேருவதற்கு அவர்கள் என்ன செய்வார்கள்? ஆகவே, இம்மாதிரியான குற்றங்கள் அதிகரிக்கும். இதில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படுவதற்கான வாய்ப்பும் இருக்கிறது. ஆனால், நிதித் துறைச் செயலாளர் அவர்கள் 80 கோடி ரூபாய் அதிகமாக நிதி கிடைக்கும் என இதுபற்றி விளக்கம் அளித்திருக்கிறார்கள்.



சமூக நலனுக்காக, social expenditure அவசியமானது என்பதை நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, ஒரு social welfare State என்று சொல்லுகின்ற அரசாங்கம், மக்களுடைய நலனுக்காக, எப்படி ஒரு செலவைச் செய்யலாமோ, அதேபோல மக்கள் நலனுக்காக, Government can also forego certain income. எனவே, இது விஷயத்தில் அரசாங்கம் நிச்சயமாக இந்த முடிவினைக் கைவிட வேண்டுமென பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறையிடமிருந்து, உதவி மானியங்கள் பெறும் தனியார் மற்றும் அரசு நிதி உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான நிதி உதவியின் அளவு, நடப்பு ஆண்டு அளவிலேயே நிலை நிறுத்தப்படும். That is, freezing at the current level. பல்கலைக் கழகங்கள் மற்றும் நிதியுதவி பெறும் கல்லூரிகளுக்கும் தருகின்ற நிதி உதவியானது படிப்படியாக குறைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மணியடிக்கப்பெற்றது.) ஆனால், ஆண்டுதோறும் பெருகிவருகின்ற மாணவர்களின் எண்ணிக்கையின் காரணமாக பல பள்ளிக்கூடங்களில், அதிலும் aided schools—வகுப்புகளே இப்போது மரத்தடியிலே நடத்தப்படுகின்ற சூழ்நிலையைப் பார்க்க முடிகிறது. அதேபோல, பல பல்கலைக்கழகங்களிலே, இன்னமும் நான் சில துணை வேந்தர்களோடு பேசியபோது, இன்னும் இரண்டு மாதங்களுக்கு சம்பளம் கொடுப்பதற்குத்தான் நிலைமை இருக்கிறது என்ற நிலைப்பாடும் இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் பல்கலைக்கழகங்களுக்கும், நிதியுதவி பெறுகின்ற கல்லூரிகளுக்கும், படிப்படியாக நிதியுதவி குறைக்கப்படுமேயானால் ஆராய்ச்சிப் பணிகளுக்காக நிதி ஒதுக்குவது தடைபடும். எனவே, பல்கலைக்கழகங்களிலே உயர் கல்விக்கான வாய்ப்புகள் குறையும். அப்படி இருக்கும்போது கல்வித் துறையிலே ஏற்பட்டுக் கொண்டிருக்கிற பல்வேறு விஞ்ஞான முன்னேற்றங்களின் மூலமாக வருகின்ற புதிய புதிய படிப்புத் துறைகளுக்காக, ஆராய்ச்சிகளுக்காக, பல்கலைக்கழகங்கள் நிதியுதவி பெறுகின்ற ஒரு நிலையை அவை இழக்க நேரிடும். இதனால் ஏற்படுகின்ற பற்றாக் குறையைச் சரிகட்டுவதற்காக அவர்களாகவே internal sources-லிருந்து இதற்கு வருமானத்தை generate செய்ய வேண்டுமானால் நிச்சயமாக ஏழை மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, கல்வித் துறையை ஒரு economic entity ஆகப் பார்க்காமல், அதற்காக நாம் தேவையின் அடிப்படையிலே நிதி ஒதுக்க வேண்டும் என நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை, தேர்ந்தெடுக்கப்பட்ட சில வழித் தடங்கள் தனியார் வசம் ஒப்படைக்கப்படும் என அரசு அறிவித்திருக்கிறது. இதையும் தமிழக பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன். ஏனென்றால், போக்குவரத்துத் துறையினுடைய நோக்கம், அனைத்துப் பகுதி மக்களுக்கும் நாம் போக்குவரத்து வசதியை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற ஒரு கருத்துதான் நோக்கமாக இருக்க முடியும். அதிலும், அரசாங்கம் புதிதாக 2,275 பேருந்துகளை வாங்குவதாக அறிவித்திருப்பது, இப்போது இருக்கிற Transport Corporation-ஐக் கைவிடுகின்ற எண்ணம் இல்லை என்பதையும் நமக்கு அது தெரிவிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், மாநிலத்தினுடைய நிதி நிலையைச் சீர்படுத்துவதற்காக டாக்டர் இராஜா ஜே. செல்லையா அவர்கள் தலைமையிலே, வரி சீரமைப்பு மற்றும் வருவாய் அதிகரிப்பதற்கான வழிகளைக் கண்டறிவதற்காக ஒரு கமிஷனானது நியமிக்கப்பட்டிருக்கிறது. அதையும் பாரதிய ஜனதா கட்சி வரவேற்கிறது. எனவே, இந்தப் பட்ஜெட்டிலே பல்வேறு ஏழை எளிய மக்களுடைய, நேரடியாக, அதிலும் குறிப்பாக, நடுத்தர மற்றும் சாமானிய மக்களைப் பாதிக்கின்ற வரிவிதிப்புகளை வாபஸ் பெற்றுக்கொள்வது, மக்களிடத்திலே அரசுக்கும் நல்ல எண்ணத்தை ஏற்படுத்தும். மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினையையும்கூட அது நீக்கும்.

மேலும், ஆலயங்களிலே அன்னதானம் வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இது பாரதிய ஜனதா கட்சியினுடைய ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையை... (மணியடிக்கப்பெற்றது) முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. எச். ராஜா:** அரசு ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் அதை நான் வரவேற்கிறேன். இது விஷயமாக சில கருத்துகள் சபைக்கு வெளியிலேயும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட மதத்தினுடைய வழிபாட்டுத் தலத்திலே அங்கு அன்னதானம் வழங்குகின்ற முயற்சியை மேற்கொள்ளலாமா? இது மதச்சார்பின்மைக்கு ஏற்றதுதானா? அரசு, மதத்தை ஊக்குவிக்கிறதா என்பதுபற்றியெல்லாம் கருத்துகள் தெரிவித்திருக்கின்றார்கள். இந்து சமய



அறநிலையைத் துறை என்று ஓர் அமைச்சகம் இருந்து, இந்து ஆலயங்கள் மட்டுமே அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்றவரை, அரசாங்கம், இந்து மதத்தினுடைய முன்னேற்றத்திற்காக கவனம் செலுத்த வேண்டியதும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய கடமையானதும் அரசாங்கத்திற்கு இருக்கிறது. மற்ற மதத்தினுடைய வழிபாட்டுத் தலங்களை அவரவர்களே நிர்வகித்துக் கொள்கிறார்கள். ஆகவே, இதிலே மதச்சார்பின்மைக்கு எந்தவிதமான ஒரு குந்தகமும் கிடையாது. அரசு தன்னுடைய கடமையைச் செயலாற்றி இருக்கிறது. அதற்காக பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக நான் நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்திலே என்னுடைய கருத்துகளை இங்கே கூறுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் பழனிசாமி அவர்கள் பேசப் போகிறார்களே!

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் பேசுகின்ற நேரத்தில், 1991-லே இருந்து 1998 வரை ஆட்சிப் பொறுப்பிலே இருந்த கட்சிகள் W.T.O. Agreement-லே கையெழுத்துப் போட்டதினுடைய விளைவாகத்தான் நிலைமைகள் இன்று சீரழிந்து இருக்கின்றன. பாரதிய ஜனதா கட்சி அன்றே அதை எதிர்த்தது என்று சொல்கிறார். அப்படி என்றால், அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு, அதை மாற்றுவதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? அதே பாதையிலே தீவிரமாகச் சென்று கொண்டிருக்கிறார்களே, அதனால் பாதிப்புகள் ஏற்படவில்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு)

[2002 ஏப்ரல் 5

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ராஜா் அவர்கள் பேசும்போது நான் இல்லை. ஒரு சிறிய விளக்கம். அதாவது, இது முன்பே போட்ட கையெழுத்து என்று சொல்கிறார். கையெழுத்து உண்மையாகவே இருக்கிறது என்று ஒப்புக்கொண்டாலும்கூட, அதன்படி அது அமலுக்கு வரவேண்டிய ஆண்டு 2004. இப்போது நாம் 2002-லே இருக்கிறோம். இன்றைக்கு, மூன்றாண்டு காலத்திற்கு முன்பே அமலுக்குக் கொண்டு வந்தது யார்? அதற்கு யார் பொறுப்பு என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். அதற்கு பாரதிய ஜனதா கட்சிதான் பொறுப்பு. பாரதிய ஜனதா அரசாங்கம்தான் பொறுப்பு.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், உட்காருங்கள், திரு. பழனிசாமி பேசுகிறார்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். அதாவது W.T.O.-வில் commit பண்ணிய பிறகு....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் பேசும்போது சொல்வார். கடைசியில் அவர் பேசுகிறார். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய 2002-2003 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துகளைச் சொல்ல விழைகிறேன். குறிப்பாக, நிதியமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையில் நான் ஒன்றுமே இல்லையென்று கூறிவிட முடியாது. பல்வேறு நல்ல அம்சங்களை இந்த அறிக்கையிலே அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து, அவற்றை நான் வரவேற்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, விவசாயிகளுக்கு 310 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனுக்கான வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி என்று அறிவித்து, அதனுடைய திட்டங்களுக்காக இன்றைக்கு 110 கோடி ரூபாயை தமிழக அரசு அறிவித்திருக்கிறது என்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2002 ஏப்ரல் 5] [திரு. ஜி. பழனிசாமி]

அதேபோன்று, உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதியை மாதந்தோறும் வழங்குவோம் என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவினாசி-அத்திக்கடவுக் குடிநீர் வழங்கல் திட்டமும் இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, சில நல்ல அம்சங்களை, தமிழக அரசு நிதிநிலை அறிக்கையிலே கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

2002-2003 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இதுபோன்ற நல்ல திட்டங்களைக் கொண்டு வந்த அதேநேரத்தில், மத்திய அரசினுடைய பதினொன்றாம் நிதிக் குழு, 2001-2002 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசிற்கு நிதி ஒதுக்கீடு செய்வதிலே 512 கோடி ரூபாய் அளவிற்கு இன்றைக்குக் குறைத்திருப்பது மாநில அரசுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

அதேபோன்று, நிதி நெருக்கடியின் காரணமாக திட்ட அளவை, 5,200 கோடி ரூபாய் அளவிற்கு இன்றைக்கு மத்திய அரசு குறைத்து இருப்பது, தமிழகத்தினுடைய வளர்ச்சித் திட்டங்களைப் பெரும்பகுதி குறைத்திருக்கிறது. இரண்டும் சேர்த்தால், சுமார் 5,712 கோடி ரூபாய், நம்முடைய ஆட்சி, மக்களுடைய நலத் திட்டங்களை உருவாக்குவதிலே இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, தமிழகத்தினுடைய தேவைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பிரதமர் அவர்களுக்குக்கூட கடிதம் எழுதியிருக்கிறார்கள். மத்திய வரிகள் மீது 5 சதவீத மேல்வரி விதிப்பது என்று மாநிலத்தின் மீது சுமத்தியிருப்பது குறித்தும் தமிழக அரசுக்கு 3,000 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கவேண்டுமென்றும் தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது உண்மையிலேயே வரவேற்க வேண்டியது. மத்திய அரசு, மாற்றாந்தாய் போக்கிலேயிருந்து மாறி, ஒரு கூட்டாட்சித் தத்துவத்தை நிலைநாட்டக்கூடிய விதத்திலே மத்திய அரசினுடைய விலைவாசி ஏற்றத்தை நாடு முழுவதும் தொடர்ந்து அறிவித்திருக்கிற இந்த நேரத்தில், அதை மாநில அரசு வன்மையாகக் கண்டித்திருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, மத்திய அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னர், தொடர்ச்சியாக விலைவாசி ஏற்றத்தை குறியாக வைத்து, மத்தியிலே இருக்கிற பாரதிய ஜனதா அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

[திரு. ஜி. பழனிசாமி] [2002 ஏப்ரல் 5

மண்ணெண்ணெய் விலையை உயர்த்தியது, டீசல் விலையை உயர்த்தியது, Gas விலையை உயர்த்தியது; இப்படி தொடர்ந்து உயர்த்துவது மட்டுமல்ல, சமீபத்தில்கூட Gas விலையை 40 ரூபாய் என்று உயர்த்தி, பிறகு 20 ரூபாய் என்று குறைத்து ஏதோ அடிமாட்டுக்கு விற்பதைப் போல, விலையை உயர்த்துவதில் மத்திய அரசு ஒருபோதுகூட தயங்கியது கிடையாது. இந்தியாவில் இருக்கிற மாநில அரசுகளோடு, திட்டக் குழுவிலே கலந்து பேசாமல், விலையை உயர்த்துவதிலே மத்திய அரசு தயக்கம் இல்லாமல் நிறைவேற்றிக் கொண்டு வருகிறது.

இன்னும்கூட தமிழகத்திலே ஆதரவு கொடுக்கின்ற சில கட்சிகள், மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்ற அடிப்படையில் எல்லாம் இருந்ததையெல்லாம் விட்டுவிட்டு, இன்றைக்கு மத்திய அரசு எந்த விலையை உயர்த்தினாலும், உங்களுக்கு முழுமையான ஆதரவு தருகிறோம் என்று சொல்லக்கூடிய கொள்கை நிலையில்கூட சில கட்சிகள் இதற்கெல்லாம் வாய்மூடி மௌனமாக இருப்பதை தமிழ்நாட்டு மக்கள் மிக வேதனையோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த வகையிலே இன்றையதினத்திலே மத்திய அரசினுடைய விலைவாசி உயர்வு மிகப் பெரிய பாதிப்பை ஏழை எளிய, நடுத்தர மக்களுக்கு உள்ளாக்கியிருக்கிறது.

முற்பகல் 11-25

அதேபோன்று, பொது விநியோக முறையிலே ஒரு சீர்திருத்தம் தேவை என்கிற முறையிலேயும், ஒரு சிக்கன நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலேயும், நம்முடைய மாநில அரசு சில நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சிக்கன நடவடிக்கை, சீர்திருத்த நடவடிக்கை என்பது கீழேயிருந்து கொண்டு வருவது அல்ல. ஆகவே, தலைமைச் செயலகத்திலிருந்தே அதை முறைப்படுத்துவது நம்முடைய நிதியமைச்சருடைய பிரதானமான கடமையாகும். காரணம் என்னவென்று சொன்னால் ஏழையெளிய மக்கள், விவசாயிகள், கிராமப் புறத்திலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடியவர்கள், உள்ளாட்சி அமைப்புகளிலே அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பக்கூடியவர்கள், அவர்கள் எல்லாம்கூட நடந்து முடிந்திருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மீது, மிக நம்பிக்கை வைத்துள்ளார்கள். இந்த ஆட்சி வந்தால், தமிழகத்தில் ஒரு மாறுதல் கிடைக்கும்; நீண்டகாலமான திட்டங்கள், அரை நூற்றாண்டுகளுக்குப் பிறகு, சுதந்திரம் பெற்ற பின்னரும்கூட



2002 ஏப்ரல் 5] [திரு. ஜி. பழனிசாமி]

நிறைவேறாமல் உள்ள இந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வாரா என்கிற நல்ல நோக்கோடு நமது அரசுக்கு ஆதரவுகளைத் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சராக இருந்தாலும், நம்முடைய நிதியமைச்சராக இருந்தாலும், தமிழகத்தினுடைய நிதிநிலையில் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்கிறபோது அதனுடைய பாதிப்பு காரணமாக, அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு பல திட்டங்களை உடனடியாகச் செய்ய முடியாது; நாள் கடக்கக் கடக்க பல ஆண்டுகளிலே அவை நிறைவேற்றப்படும். 15 அம்சத் திட்டம்கூட இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. திட்டங்களை அறிவிப்பதை நான் நிச்சயமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப் பார்த்தால், சிக்கன நடவடிக்கையை எங்கே தொடங்குவது, எங்கே முடிப்பது? குறிப்பாக நாங்கள் சமீபத்திலே மகாராஷ்டிரா மாநிலத்திற்கு நம்முடைய அரசினுடைய கமிட்டி மூலமாகச் சென்றோம். அங்கே, தமிழ்நாட்டினுடைய ஆட்சி முறையிலே, மக்களுக்குச் செய்கிற நன்மைகள் என்னென்ன நடைபெறுகின்றன என்று கேட்டார்கள். அங்கே இருக்கிற கூட்டுறவுத் துறை அமைச்சர் கேட்டார். அப்படிக் கேட்கிறபோது, கமிட்டியிலே இருந்து சென்ற நாங்கள் எல்லாம் சொன்னோம். நெசவுத் தொழிலுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. சிட்டா நூலுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. ஏழை எளியவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கு இலவசமாக வேட்டி புடவைகள் வழங்கப்படுகின்றன. அரிசி விலையை உயர்த்தாமலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறோம். இதுபோன்ற திட்டங்களை எல்லாம் நாங்கள் சொன்னோம். இது எப்படி தமிழகத்தில் மட்டும் சாத்தியமாகிறது. இந்தியாவுக்கே சாத்தியமில்லையே என்ன காரணம் என்று நாங்கள் யோசிக்கிறோம், ஆச்சரியப்படுகிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். அதுதான் தமிழ்நாடு ஒரு முன்மாதிரியான மாநிலம். தமிழகத்திற்கு இருக்கிற அந்தப் பெருமையோடு தமிழகத்திலே எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் நடைபெறுகிறது என்பதை நாங்கள் பெருமையோடு கூறிவிட்டு வந்தோம்.

அதற்கு மாறான முறையிலே, சமீபத்திலே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கொண்டு வந்திருப்பது என்பது—குறிப்பாக ஏற்கெனவே இருக்கிற 3 ரூபாய் 50 பைசாவுக்குக் கொடுக்கக்கூடிய அரிசியை நாங்கள் மீண்டும் வழங்குகிறோம் என்று சொல்லியிருப்பதை

வரவேற்றாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினமும் பதில் சொன்னார்கள்; தொடர்ந்து பதில்களை இந்த அவையிலே சிறப்பான முறையிலே, ஆணித்தரமான முறையிலே அவர்கள் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே அரிசிக்கு இரண்டு சதவீதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. கோதுமைக்கு இன்றைக்கு இரண்டு சதவீதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொள்வேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலம் வரை— நான் இந்தியாவிலே எந்த ஒரு மாநிலத்திலும் அரிசிக்கு வரி போடவில்லை என்று சொல்லவேயில்லை. அந்த வரிக்கு நான் போகவே இல்லை. இந்தியா முழுமையும் வரி போடப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழகத்திலே இன்று வரையில் வரி போடாமல், தமிழகத்திலே எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அரிசியிலே கை வைக்காமல், அரிசி விலையை உயர்த்தாமல் இருந்தது அது ஏழை எளிய மக்களாக இருந்தாலும், நடுத்தர மக்களாக இருந்தாலும், வாங்கிச் சாப்பிடக்கூடியவர்கள் எத்தனை பேர்களாக இருந்தாலும்கூட, அரிசி விலையை உயர்த்தாமல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்காலத்தை நிறைவு செய்கிற காலம் வரையில், சரியாகவும், நிதானமாகவும் ஆட்சியை நடத்தியிருக்கிறார்கள். அதற்குப்பிறகு, மாறி மாறி வந்த ஆட்சிகள் திராவிட முன்னேற்றக் கழகம்கூட எம்.ஜி.ஆர். பின்பற்றிய கொள்கையைத்தான் அவர்களும் பின்பற்றினார்களே தவிர, அவர்களும் அதிரடியாக அரிசி விலை உயர்வு என்பதைக் கொண்டுவரவில்லை. நான் திரும்பவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு நிதிச்சுமைகளை, பாரங்களை இந்த அரசு சுமந்திருந்தபோதும்கூட, அரிசிமீது போடப்பட்டிருக்கிற வரியை நீங்கள் குறைக்க வேண்டும். காரணம் என்னவென்று சொன்னால், 20 கிலோ இன்றைக்கு நம்முடைய ரேஷன் கடையிலே அரிசி வாங்கினால், அது மட்டுமே அந்தக் குடும்பத்துக்குப் போதுமானதல்ல. இதனால் ஏழையெளிய மக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று சொல்ல முடியாது. நடுத்தர மக்கள் பலபேர் அரிசி வாங்கித்தான் சாப்பிடக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சொன்னால், இது விவசாய நாடாக இருந்தாலும், அனைத்துப் பகுதி மக்களும், அரிசி வாங்கிச் சாப்பிடக்கூடியவர்கள். இந்த விலைவாசியிலே, இந்த விலை ஏற்றத்தினால் மிகப் பெரிய பாதிப்பு உருவாகும். இந்த அரசு அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



முற்பகல் 11-30

அதேபோன்று, எனக்கு முன்னாலும் பலபேர் சொன்னார்கள். வெல்லம், மிளகு இதற்கெல்லாம் இப்போது வரிகள் சுமத்தப்பட்டிருக்கின்றன. இது எல்லாம் சாதாரணமானது. அப்படி வரியைப் போடுகிறபோது, நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதெல்லாம், வரி போடுவது தப்பு என்று நான் சொல்லவே மாட்டேன். வரியைப் போடுங்கள். , வரி போடாமல் ஓர் ஆட்சியை நடத்த முடியாது. அதுவும் எங்களுக்குத் தெரியும். ஆனால் வரியை எப்படிப் போடுவது? எந்தக் கணக்கு வைத்துப் போடுகிறோம்? ஒரு தனி நபருடைய வருமானம் அதனுடைய அடிப்படையிலேதான் வரியைப் போட வேண்டும். தனி நபருடைய வருமான்ம் கூடியிருப்பதற்கான சூழ்நிலையில் போடலாம். இந்த அரை நூற்றாண்டிலே அல்லது ஒரு ஆட்சி மாற்றம் வந்த பின்னால் ஒரு தனி நபருடைய வருமானம் கூடியிருக்கிறதா? அதனுடைய புள்ளிவிவரங்களை நம்மால் சொல்ல முடியுமா? அப்படி ஒரு தன்னிறைவு பெறக்கூடிய அளவிற்கு என்ன சாதனைகள் தமிழகத்திலே தமிழ்நாட்டு மக்கள் பெற்றிருக்கிறார்கள்? இப்போது சாதாரணமாக அரிசி வாங்கிச் சாப்பிடக்கூடிய அத்தனை மக்களுடைய வாழ்க்கையும் பாதிக்கக்கூடிய அளவிற்கு இந்த வரிச் சுமையை நாம் உயர்த்தியிருக்கிறோம். அப்படி உயர்ந்திருக்கிறபோது, வியாபாரிகளுக்கு அது நஷ்டம் கிடையாது. நீங்கள் ஒரு பொருளை எடுத்துக்கொள்ளுங்கள். அரிசி 9 ரூபாய் விலை என்று சொன்னால், அந்த 9 ரூபாய்க்கு உள்பட்டே வரியை நீங்கள் நிர்ணயுங்கள். அப்படி நிர்ணயித்தால்தான் அந்த விலை உயராமல் இருக்கும். ஆகவே பொதுமக்கள் பாதிக்கப்படமாட்டார்கள். ஏழையெளியவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். 9 ரூபாய் வாங்கிச் சாப்பிடக்கூடியவர்கள் பாதிக்கபட்மாட்டார்கள். 9 ரூபாய் விலை என்று அரிசிக்கு விலையை நிர்ணயிக்கிறபோது அரிசி விலையை 9 ரூபாய்க்கு மேலே உயர்த்தக்கூடாது என்கிற உத்தரவோடு நீங்கள் வரியைப் போடுங்கள். அப்போதுதான் விலைவாசிகள் உயராமல் இருக்கும். அனைத்து பொருட்களுக்கும் அது பொருந்தும். ஆனால், நீங்கள் வரியை சுமத்துகிறபோது, வரியைப் போடுகின்றபோது, அது மேலும் மக்களுடைய தலை மேலேதான் சுமையாக அமையும்.

அதனால் இன்றைக்கு என்ன நிலைமை என்று சொன்னால், இந்த விலைவாசி உயர்வின் காரணமாக, இந்த வரி போட்டதன் காரணமாக, ஏதோ சிட்டுக்குருவி தலையிலே பாறாங்கல்லை வைத்தது போன்று,

[திரு. ஜி. பழனிசாமி] [2002 ஏப்ரல் 5

சாதாரண, ஏழையெளிய மக்களுடைய தலையிலே மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து, ஒரு வரிச் சுமையைச் சுமத்துகிறது என்று மக்களிடத்திலே ஒரு குழப்பமான புழுக்கம் இன்றையதினத்திலே ஏற்பட்டிருக்கிறது. அதனால் மாநில அரசு, நலத் திட்டங்களை நிதியாதாரத்தைக் கொண்டு செய்யாவிட்டால்கூட, புதிய வரியைப் போடாமல் இருப்பது, சிறந்ததாக இருக்கும் என்று நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, இன்றைக்குப் பல்வேறு நிறுவனங்கள் பெறுகின்ற மானியங்களை, உதவிகளை, தொகைகளை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால் இந்தக் கல்வித் துறையிலேகூட படிப்படியாக தனியாருக்கு விட்டுவிடலாம் என்கிற ஒரு நிலைமை வந்திருக்கிறது. அநேகமாக அரசுப் பள்ளிகளை, இன்றைக்குப் படிப்படியாக தனியாருக்கு விட்டுவிடலாம் என்ற ஒரு யோசனை மாண்புமிகு நிதியமைச்சருடைய குறிப்பிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய கல்வி ஒரு வியாபாரமாக மாறியிருக்கிறது. டாக்டர் சீட்டை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், 20 இலட்சம் ரூபாய். இன்ஜினியரிங் சீட்டை எடுத்துக் கொண்டால், 10 இலட்சம் ரூபாய். ஒரு பொறியியல் கல்லூரிக்கு ஒரு ஏழை மாணவன் போக வேண்டும் என்று சொன்னால் 5 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. நாளைக்கு இப்படி ஒரு தனியார் நிர்வாகத்தில் இந்தக் கல்லூரிகள் போய்ச் சேர்ந்தால் கிராமப்புறத்திலே இருக்கிற ஒரு மாணவன் கூட நிச்சயமாக கல்லூரியினுடைய படியே ஏறமுடியாது. அந்த அளவிற்கான பாதிப்பு இதிலே இருக்கிறது. நிச்சயமாக எந்த ஒரு தாழ்த்தப்பட்ட, ஏழையெளிய கிராமப்புறத்திலே இருக்கிற மாணவனும் அப்படி ஒரு தனியார் கல்லூரியிலே போய் படிக்க முடியுமா என்று சொன்னால், நிச்சயமாக முடியாது. அதையும் தாங்கள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது அரசுப் பள்ளிகளை தனியார்மயமாக்குவதாக கருத்து சொல்கின்றார்கள். அப்படி எந்தக் கருத்தும் கிடையாது. அரசுப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அரசுதான் நடத்திக் கொண்டிருக்கிறது, ஒன்று. பிறகு நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது வரியைப் போடுங்கள் என்று சொல்கிறார். அதேநேரத்தில் எதற்கு வரியைப் போடுவது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும். வரி



2002 ஏப்ரல் 5] [டாக்டர் மு. தம்பிதுரை]

இல்லாமல் நம்முடைய ஆட்சியை நடத்த முடியாது என்பதை அவரே ஒத்துக்கொள்கிறார். ஆகவே, எந்த ஒரு வரியைப் போடும் போதும், மக்களுக்குப் பாதகம் இல்லாமல்தான் புரட்சித்தலைவி அவர்கள் வரியைப் போட்டிருக்கிறார்கள். அப்படி ஏதாவது புதிய கருத்துகள், இந்த வழியில் நீங்கள் வரியைப் போடுங்கள், இதிலே போடுங்கள் என்று சொன்னீர்கள் என்றால், மிகவும் நன்றாக இருக்கும். அதுபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினரும் மற்றவர்களும் சொல்லும்போது எதற்கு வரியைப் போடலாம் என்று கருத்து சொன்னால்கூட அதைப் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு சொல்கிறேன். அவர்கள் விலைவாசியைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு முன்னாலே நான் சொன்னேன். ஒரு பொருளினுடைய விலையை நிர்ணயித்து விட்டு அதன்மீது வரியைப் போட்டால் பொதுமக்களைப் பாதிக்காது. ஒரு விலையை நிர்ணயிக்காமல் நீங்கள் வரியைப் போடுகிறபோது அது பொதுமக்களைப் பாதிக்கும். அதுதான் என்னால் சுருக்கமாகச் சொல்ல முடியும்.

முற்பகல் 11-35

அந்த வகையிலே, இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1,505 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில் அதிலே 47:45:8 என்ற இந்த விகிதாச்சாரம் என்பது அநேகமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 16 என்கிற அடிப்படையில் நிதி ஒதுக்கினால், மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிச்சயமாக நிறைவேற்ற முடியும். காரணம், உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதியை அதிகரிக்கிறபோதுதான் ஓர் ஆட்சியினுடைய நிருவாகத்தை செம்மைப்படுத்த முடியும். மக்களாட்சி தத்துவத்தை உருவாக்க முடியும். அந்தவகையிலே உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதியை நீங்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, வீராணம் கூட்டுக் குடிநீர்த் திட்டம். நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னால், அந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க போர்க்கால அடிப்படையிலே செயல்பட்டார்கள் என்றுதான் சொல்ல முடியும். ஏனென்றால், அந்த அளவிற்கு சென்னை நகர மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்தார்கள். அதை இல்லையென்று

யாரும் மறுக்க முடியாது. ஆனால், அதேநேரத்தில் இன்றைக்கு கிராமப்புறத்திலேயிருந்து வேலையில்லாமல், மூன்று மாதம் விவசாய வேலை முடிந்தவுடன், இளைஞர்கள் எல்லாம் சென்னை நகரை நோக்கி, பெரிய நகரங்களை நோக்கி படையெடுக்கத் தொடங்கிவிட்டார்கள். மக்கள் பெருக்கம் நிறைய வந்துவிட்டது. ஆகவே, அப்படி வருகிறபோது, திட்டங்கள் தேவைதானா என்றால் தேவைதான். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய வீராணம் திட்டம்—காவிரி நதிநீர்ப் பிரச்சினை கடந்த 50 ஆண்டுகளாக காலம் கடந்திருக்கின்ற காரணத்தினால், அந்தத் திட்டத்தைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும். அதிலும் சில நல்ல விஷயங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. மாதவரம் ஏரி, கொரட்டூர் ஏரி, இரட்டை ஏரி இதுபோன்ற சென்னை நகரத்திலே ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிற ஏரிகளை தூர்வார வேண்டிய அவசியம் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுபோன்று சென்னை நகரத்திலே இருக்கக்கூடிய, சென்னைக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய ஏரிகளை ஆழப்படுத்தி, நீர் ஆதாரங்களைச் சேமித்தால் குடிநீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். ஆகையினால், வீராணம் திட்டம் என்பது அதிகமான ரூபாயைக் கொண்டு போய் மீண்டும் செலவழித்த பிறகு, காவிரி நதிநீர்ப் பிரச்சினை தீரவில்லையென்று சொன்னால், அந்தத் திட்டம் தோல்வியடைந்துவிடுவதற்கான அளவிற்கு நம்முடைய செலவை தெரிந்தும் செய்ய வேண்டிய அவசியமில்லை என்பதைத் தங்களுடைய கவனத்திற்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேமாதிரி இந்த சிட்டா நூல் பற்றி இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா, பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர் அவர்கள் சொன்னார். காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருக்கின்றபோது சிட்டா நூலுக்கு 3 சதவீதம் இருந்தது. இவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னால், அது 9 சதவீதமாக சிட்டா நூலுக்கு விலை உயர்ந்தது. இன்றைக்கு அந்த சிட்டா நூலுக்கு நாம் 2 சதவீதம் வரி போட்டிருக்கிறோம். 9 சதவீதம். இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற விவசாயத் தொழிலாளியைப் போன்று கைத்தறித் தொழிலாளிகள். அவர்கள் வாழ்க்கையைப் பார்த்தோம் என்றால் பரிதாபமான வாழ்க்கை. இந்தத் தொழில் இன்றைக்கு நசிந்து போய்விட்டது. எப்படி அந்த நூல் இழை இருக்கிறதோ அதுபோல் அவர்களுடைய வாழ்க்கை அழிந்துவிட்டது. எனவே, சிட்டா நூலுக்கு இன்றைக்கு 2 சதவீதம் வரி போட்டிருப்பது என்பதையும் மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இன்றைக்கு, தமிழகத்திலே சுற்றுலாவுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இருக்கின்ற சுற்றுலா மையங்களை சீரமைத்து, அவற்றை முறைப்படுத்தினால்கூட போதும். புதியதாக ஒரு முதலீட்டை கொண்டுபோய் அதற்காகச் செலவழித்து, அதனால் தமிழகத்திலே வேலைவாய்ப்பு உருவாக்குவதில் எந்தப் பயனும் கிடையாது. அதனால் 10 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும், 50 ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் என்று சொன்னால், அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளலாம். அது வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் இல்லாதது. ஆகவே, இருக்கின்ற சுற்றுலா மையங்களை நாம் பாதுகாப்பது என்பது அவசியம். அந்த வகையில் அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று, கூட்டுறவுத் துறையை எடுத்துக்கொண்டாலும், மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்களும், நம்முடைய அமைச்சர் அவர்களும் இந்த விவசாய கூட்டுறவுக் கடன் வட்டி, அபராத வட்டி 310 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்கெனவே தள்ளுபடி செய்திருக்கின்றார்கள். ஆனால், இதிலே எனக்கு புரிந்துகொள்ளவே முடியவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய விளக்கங்களைச் சொல்கிறபோது வேண்டுமானால் சொல்லலாம். 226 கோடி ரூபாய் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்போது 110 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே சொல்லப்பட்டிருக்கிறது என்பது என்னவென்று சொன்னால், இது 30-6-2002 வரையிலே செயலில் இருக்கும். விவசாயிகள் பெற்றிருக்கிற கூட்டுறவுக் கடன் தொகையில் நிலுவைத் தொகைகள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டியை தள்ளுபடி செய்ததை ஏற்கெனவே அரசு ஏற்றுக்கொண்டிருந்தது. ஆனால், அதிலே வழங்கப்பட்டிருக்கிற ரூபாய் என்பது அநேகமாக 226 கோடி ரூபாய்; இன்றைக்கு அரசு சொல்லியிருப்பது, நம்முடைய நிதிக் குழு அதிலே தன்னுடைய திறமையைக் காட்டியிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. மேற்குறித்த திட்டத்தில் வராதவர்களுக்கு 31-3-1998 வரையிலும் என்று அதனுடைய காலம் இரண்டு வருடம் குறைக்கப்பட்டிருக்கிறது. 2 வருடம், 2000 வரையிலும் இருப்பதை, 1998 வரையிலும் குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மாறாக, இன்னொன்று சொல்லப்பட்டிருக்கிறது. அபராத வட்டி மட்டுமே தள்ளுபடி. வட்டி முதலிலே சேர்க்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் எந்த விவசாயிகளும் பயனடைய மாட்டார்கள். அதில் சொல்லியிருப்பது அப்படித்தான் வந்திருக்கிறது.

[திரு. ஜி. பழனிசாமி:] [2002 ஏப்ரல் 5

அந்தவகையில் இங்கு ஏற்கெனவே 30-6-2000 வருடம் வரை நீங்கள் அறிவித்த அந்தச் சலுகைகளை நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு வேண்டி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தவகையிலே விவசாயிகள் மத்தியிலே ஒரு பெரிய ஏமாற்றம் இருக்கிறது என்கிற அடிப்படையில் இதை மீண்டும் தமிழக முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று என்னிடத்திலே வலியுறுத்தி இருக்கிறார்கள்.

முற்பகல் 11-40

அப்புறம், சிறு தொழில், குறு தொழில் விதி 25-ஐ மாற்றினோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தச் சட்டமன்றத்திலே தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் செய்து இருக்கிற தவறைத் திருத்தி, பல இலட்சம் சிறு தொழில்கள் தமிழகத்திலே நிலைத்து இருக்க வேண்டும். அவை தமிழகத்தில் உற்பத்தி செய்யக்கூடிய அந்த உதிரி பாகங்களை தமிழக அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்ற வகையில் ஒரு திட்டம் கொண்டுவந்தார்கள். ஆனால், கொண்டுவரப்பட்டதில் 25-வது விதி திருத்தப்பட்டதே தவிர, மூடப்பட்டிருக்கிற தொழில்களை திறப்பதற்கான எந்த வாய்ப்பும் இல்லாத ஒரு போக்கு இருக்கிறது.

அதேபோன்று, போக்குவரத்துத் துறையைப் பார்த்தோம் என்று சொன்னால், இன்றைக்கு 2,275 பஸ்கள் புதிதாக வாங்குகிறோம் என்று சொல்வது வரவேற்க வேண்டியது ஆகும். இன்றைக்குத் தேவைகள் இருக்கின்றன. தனியார் பஸ்களுக்கு ஈடாக கார்ப்பரேஷன் பஸ்களை ஓட்ட முடியவில்லை. நேற்றுகூட ஈரோட்டில், கோயமுத்தூரில் பார்த்தால் ஒரு செய்தி வந்திருக்கிறது. உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறது. கண்டக்டரே இல்லாத இரண்டு பஸ்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஜனங்கள் எல்லாம் ஆர்வமாக ஏறியிருக்கிறார்கள். ஆள் குறைப்புச் சட்டம் அங்கே வந்திருக்கிறது. ஆமாம், டிரைவர் மட்டும் ஓட்டிக் கொண்டு போகிறார். எல்லோரும் காசு போட்டு டிக்கெட் வாங்கிக் கொண்டு தேவையான இடத்தில் இறங்கிக் கொண்டு போகிறார்கள். அது வந்திருக்கிறது. அதற்குப் பின்னால், ஏன் தனியார்மயமாக்க வேண்டும்? அப்படியொரு திட்டம் வருகிறபோது, ஆள்குறைப்பு அந்த மாதிரி குறைக்கிறபோது டிரைவர் மட்டும் ஓட்டிக் கொண்டு இருப்பதை ஏன் தனியாரிடம் விட வேண்டும்? அதனால் போக்குவரத்துத் துறையை தனியாருக்கு



2002 ஏப்ரல் 5] [திரு. ஜி. பழனிசாமி]

படிப்படியாக மாற்றுவோம் என்று சொல்வது, முற்றிலும் வேலைவாய்ப்பை பெரிய அளவுக்குப் பாதிக்கும். மாண்புமிகு முதல்வர் அவர்களே, ஏற்கெனவே சென்ற அரசிடத்தில் போக்குவரத்துத் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக்குவோம் என்கிற அந்தக் கோரிக்கையை அவர்களே அறிக்கையாக வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு போராட்டம் நடக்கக்கூடிய காலத்திலே அப்படி அந்த வகையில் அந்தத் தொழிலாளர்கள் இன்றைக்கு அந்த உரிமைகளுக்காகப் போராடும்போது, புதிய உரிமைகளை வழங்க வேண்டியது இல்லை. பழைய சலுகைகளை மட்டுமாவது நீங்கள் வழங்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அதை வழங்குவதற்காக, உரிமைக்காக போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். பலபேர் மீது வழக்கு இருக்கிறது. பலபேர் இன்னும் வேலைக்கு அமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். அதையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டும். அவர்களைப் பணியில் சேர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, சேலம் உருக்காலை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலேயே அந்தச் சேலம் உருக்காலையை தனியாருக்கு விற்பனைச் செய்யக் கூடாது என்பதற்கான மிகப் பெரிய ஆர்ப்பாட்டம் நடந்தது. அந்தத் தொழிலாளர்கள் 4,000 பேர் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். இன்றைக்கு அந்தத் தொழிற்சாலையை விற்பதற்கு ஒரு கமிஷன் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் எப்படி நியாயமாக இருக்கும்? என்ன வளர்ச்சிகளைக் காணப் போகிறோம்? இன்றைக்கு அதை விற்பதற்காக, நலிவுற்றிருக்கிற தொழிற்சாலைகளை, நலிவுற்றிருக்கிற ஆலைகளை படிப்படியாக தனியாருக்கு விற்பதற்கு ஒரு கமிஷனை நாம் அமைத்தோம் என்று சொன்னால், எப்படி வேலைவாய்ப்புகளை உருவாக்கப் போகிறோம் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பின்னர் விளக்குவார்கள் என்று நான் கருதுகிறேன்.

அதேபோன்று இன்றைக்கு இன்னொரு நல்ல விஷயத்தையும் நமது அரசு கொண்டு வந்திருக்கிறது. குளச்சல்' துறைமுகம், மலேசியாவோடு ஒப்பந்தம். ஒரு நல்ல ஒப்பந்தம். வர்த்தகத்திற்கு, ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு, நாம் அன்னிய நாட்டு மூலதனத்தைப் பெறுவதற்கு, தமிழகம் வளர்ச்சி பெறுவதற்கு ஒரு நல்ல திட்டம் அது. அதை நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, எங்களுடைய மாவட்டம் தஞ்சை மாவட்டம், கடந்த மழையிலே எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். எங்களுக்குக் கொடுத்திருக்கும் நிவாரணம் எல்லாம் எப்படி இருக்கிறது என்றால், 'யானைப் பசிக்கு சோளப் பொரி' போட்டது மாதிரி இருக்கிறது. நான் அதை மறுக்கவில்லை. இந்த நிதிநெருக்கடியிலும் 38 கோடி, 48 கோடி ரூபாய் தமிழக அரசு வழங்கியிருக்கிறது. அதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், அதேநேரத்தில், ஒரு கட்டத்தில், இதேபோன்று, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் இருக்கிறபோது, ஒரு பெருவெள்ளம் ஏற்பட்டபோது, கீழே ஹெலிகாப்டரிலிருந்து இறங்கியே பார்க்க முடியவில்லை. அந்த மாவட்டம் பூராவும் சுற்றி வந்தார்கள். எந்த இடத்திலும் இறங்க முடியவில்லை. உடனடியாகப் பாதிக்கப்பட்டு இருக்கிற விவசாயிகளுடைய அவ்வளவு நெல்லையும் கொள்முதல் செய்தார்கள். அவர்தான் ஆரம்பித்து வைத்தார். அதற்குப் பிறகு, படிப்படியாக பலருடைய உதவி வந்தது. இன்றைக்குப் பாருங்கள், அங்கே இருக்கிற நாங்கள், விவசாயிகள் பூராவும் தெருவில் நிற்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திரும்பத் திரும்ப இந்த அவையிலே பதிலளிக்கிறார். மேலும் தொந்தரவுபடுத்துகிறோம் என்று நினைக்கக் கூடாது. நீங்கள் கொஞ்சம் தயவுகூர்ந்து, 4 நாட்களுக்கு சென்டர்களை எல்லா இடங்களிலும் திறந்து வைத்தால், சரியாகிவிடும். இதற்குப் பிறகு நெல்லே கிடையாது, முடிந்து போய்விடும். இதில் அரசாங்கம் பிடிவாதமாக இருக்கக் கூடாது. அந்த விவ்சாயிகளுடைய பிரச்சினை நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டும். விவசாயிகளுடைய பிரச்சினையில் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-45

தரிசு நிலங்கள் மேம்பாட்டுத் திட்டம், ஒரு நல்ல திட்டம். உண்மையிலேயே வரவேற்கிறோம். வரவேற்காமல் இல்லை. ஆனால், ஏற்கெனவே, தமிழகத்திற்கு ஒரு வரலாறு இருக்கிறது. அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்களை 99 வருடங்களுக்கு குத்தகைக்கு எடுத்தவர்கள் சொந்தமாக்கிக் கொண்டார்கள். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தமிழகத்தில், அநேகமாக எடுத்துக்கொண்டால் அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்கள் எல்லாம் 99 வருடங்களுக்கு லீசுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். திரும்ப அரசு அவர்களிடமிருந்து அவற்றை மீட்க முடியவில்லை. இன்று வரை மீட்க முடியவில்லை. கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது. 200 ஆண்டுகளுக்கு மேலே





தாண்டிவிட்டது. அதேபோன்று, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே நீங்கள் தனியாருக்கு லீசுக்கு விட்டு, 99 வருடங்களுக்கு அவர்கள் எல்லாம் லீசுக்கு எடுத்துக்கொண்டுவிட்டால் நிச்சயமாக இது யாருக்கும் பயன் அளிக்கப்போவது இல்லை. தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது எல்லாம், காய், கனிகள் இவையெல்லாம், ஏற்றுமதி செய்யக்கூடிய வகையில் உரங்களைப் போட்டு தயாரிக்கின்ற ஒரு முறையில், அதன் மூலமாக வேலைவாய்ப்பு உருவாக்க முடியும் என்று சொல்கிறார்கள். ஆனால், ஆண்டுதோறும் பழங்களைத் தரும் மரங்களை நட்டால், ஆண்டுதோறும் நிச்சயமாக வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியாது. இருந்தபோதிலும்கூட, இந்தத் திட்டம் ஒரு நல்ல திட்டம்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது 99 ஆண்டு காலம் லீசுக்குக் கொடுத்தால் அது சரியாக இருக்காது என்று குறிப்பிட்டார். இன்னும், எத்தனை ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடுவது என்பது குறித்து அரசு எந்த முடிவிற்கும் வரவில்லை, எந்த முடிவும் எடுக்கவில்லை.

அடுத்தபடியாக, பழங்கள் தயாரிப்பதற்காக, உற்பத்தி செய்வதற்காக, வெறும் பழ மரங்களை மட்டும் நட்டால் ஆண்டுதோறும் விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காது என்று இங்கே சொன்னார். இந்த 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களில் முழுவதும் பழத்தோட்டங்களை மட்டும் உருவாக்குவது என்பது அரசின் திட்டம் அல்ல. தரிசு நிலங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்றன. தமிழ்நாடு முழுவதும் இருக்கின்றன. ஒவ்வொரு இடத்திலும், அந்தந்த இடத்திற்கேற்ப, அங்கே இருக்கின்ற மண்ணிற்கேற்ப, அங்கே இருக்கிற இயற்கைச் சூழ்நிலைகளுக்கேற்ப, என்ன பயிரிட்டால் அங்கே நன்றாக விளையுமோ, அதற்கேற்ப விஞ்ஞானிகளின் ஆலோசனையைப் பெற்று அதற்கேற்பத்தான் பயிர்கள் அங்கே வளர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரியான மாநிலமாக இருப்பது மேற்கு வங்க மாநிலம். அங்கே இதுபோன்ற ஒரு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், நேரடியாக அந்த நிலத்திலே இறங்கி உற்பத்தி செய்யக்கூடிய, உணவு தானியங்களை

[திரு. ஜி. பழனிசாமி] [2002 ஏப்ரல் 5

உற்பத்தி செய்யக்கூடிய, உழைக்கக்கூடிய விவசாயிகளுக்கு இன்னும் சொன்னால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மேற்கு வங்கத்திலே அந்த நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அது ஒரு முன்மாதிரியான திட்டமாக இருக்கிறது. சிறப்பாகவும் இருக்கிறது. நம்முடைய அரசினுடைய கமிட்டிகள் போகிறபோது அதுபோன்ற இடங்களை நாங்கள் பார்வையிட்டு வந்திருக்கிறோம். மீன்கள் வளர்ப்பதிலேயும், மரங்கள் வளர்ப்பதிலேயும், அங்கே இருக்கிற காய்கறிகளை உற்பத்தி செய்வதிலேயும் ஒரு முன்மாதிரியான மாநிலமாக இன்றைய தினத்திலே இருக்கிறது. அவர்களிடத்திலே கேட்டோம் என்று சொன்னால், ஆளுக்கு 5 ஏக்கர், 3 ஏக்கர், 4 ஏக்கர் என்ற வகையிலே, நேரடியாக உழைக்கக்கூடிய மக்களுக்காக அந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மேற்கு வங்கத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். நல்ல வரவேற்பு இருக்கிறது. அதுபோன்று நம்முடைய மாநிலத்திலேயும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையோடு அதை நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்திலே பேச்சை முடித்துவிடுகிறேன்.

அடுத்ததாக, நம்முடைய தஞ்சை மாவட்டத்தில் குடிமராமத்துப் பணி. பொதுப் பணித் துறை மூலமாக குடிமராமத்துப் பணி, கால்வாய்களைத் தூர் வாருவது போன்ற பணிகளுக்கு அரசு இன்றைய தினத்திலே 20 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அது போதாது. காட்டாமணக்குச் செடிகள், அந்த ஆறுகளையெல்லாம் ஆக்கிரமித்திருக்கின்றன. ஆண்டுதோறும் வெள்ளச் சேதத்தால், வடிகால் இல்லாத காரணத்தினால் அரசுக்குப் பல நூறு கோடி ரூபாய் தொடர்ந்து தேவையற்ற செலவுகள் வருகின்றன. விவசாயிகளுக்கு நிவாரணம் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. ஆகையினால், இதற்கு ஒரு நிரந்தரமான Master Plan அந்தப் பகுதியிலே கொண்டு வரப்பட வேண்டும்.

அதுமாதிரி நீராதாரங்களைச் சேமிக்கக்கூடிய முறையில் தஞ்சை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், நாகை மாவட்டம் போன்ற கடலோர மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பள்ளப் பகுதி கோட்டகம் என்ற பெயரில் இருக்கிறது. அதையெல்லாம் ஏரிகளாக அமைத்து நீரைப் பாதுகாத்தால் இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் சிறப்பான முறையிலே அங்கே எல்லாம் நடைமுறைப்படுத்தப்படும். மீன் வளர்க்க முடியும். கரைகளிலே மரங்களை நட முடியும்.



2002 ஏப்ரல் 5]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்து நீராதாரங்களையும் பாதுகாத்து, அவற்றை வளப்படுத்துவதற்காக 2,900 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அதற்கு உலக வங்கி உதவியைக் கோர இருக்கிறோம் என்று நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-50

**திரு. ஜி. பழனிசாமி:** நன்றி, தமிழகத்திலே விவசாயத் தொழிலாளர்கள் ஒரு கோடி பேர் இருக்கிறார்கள். அந்த ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்களுக்காக கோலப்பன் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த கமிஷன் ரிப்போர்ட்டை—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஏற்கெனவே அதனுடைய அமைப்புகளைச் சார்ந்திருக்கிற பல்வேறு தலைவர்கள் நேரடியாக கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த — கோலப்பன் குழுவினுடைய அறிக்கையை நீங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, கோலப்பன் குழு சிபாரிசிலே இன்றைக்கு பல்வேறு தாழ்த்தப்பட்ட, ஏழையெளிய மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற துயரமான நிகழ்ச்சிகள் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்றை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி தேர்தல் அறிவிக்கப்பட்டும்கூட வேட்பாளர்கள் உள்ளே போக முடியாத ஒரு நிலைமை நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கலாமா? அப்படி இருந்தால் அது என்னவாகும்? இன்னும் சாதிக் கொடுமைகள், வன்கொடுமைகள் தலை தூக்குகிறது, ஆதிக்கச் சக்திகள் ஓர் இனத்தை, மீண்டும் மீண்டும் தலை தூக்கவிடாமல் தடுக்கிறது என்ற நிலை வரும். தேர்தல் வருகிறபோது, தொகுதி வருகிறபோது அல்லது அந்த மாறுதல் வருகிறபோது, எப்படி வேண்டுமானாலும் வரலாம். இருக்கின்ற அமைப்புகளுக்கு தேர்தல் முறையாக நடத்தப்பட வேண்டும். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடியாதவர்கள் அல்ல. நிச்சயமாக எந்த ஒரு சக்தியாக இருந்தாலும், காவல் துறையினுடைய உதவியோடு அந்தத் தேர்தலை நடத்த வேண்டும். வேட்பாளர்கள் முதலில் உள்ளே போகவேண்டும். நேற்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் சொன்னார். ஊராட்சி

மன்ற உறுப்பினரே யாரும் கிடையாது, தேர்தலை எப்படி நடத்துவது, எப்படிக் கூட்டம் நடத்துவது என்று சொன்னார். தேர்தலே நடத்த வேண்டாம் என்று சொல்லுகிறாரா, என்ன என்று தெரியவில்லை. ஆகவே, அந்தத் தேர்தலை, ஜனநாயக பூர்வமான தேர்தலாக நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேண்டாம். திரு. சந்தானம், நேற்றே சொல்லிவிட்டீர்கள். அமைச்சர் பதில் சொல்லட்டும்.

**திரு. லா. சந்தானம்:** அவர் சொன்னதற்கு சில விளக்கங்களை நான் சொல்ல வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் என்ற 3 ஊராட்சிகளில் நடந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலின்போது அங்கே தேர்தலை நடத்த முடியவில்லை என்பது நாம் எல்லோரும் அறிந்த ஒன்று. வருகின்ற 8-4-2002 ஆம் தேதியன்று, தேர்தல் நடத்துவதற்கு, நம்முடைய தேர்தல் ஆணையத்தால் முறையாக தேர்தல் மனு தாக்கல் செய்ய அறிவிக்கப்பட்டு, அதிலே கீரிப்பட்டி, பாப்பாப்பட்டி ஆகிய இரண்டு ஊராட்சிகளிலும், வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவருக்கு மட்டுமே தேர்தல் நடத்துவதற்கு மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அன்றைக்கு வேட்பாளர்கள் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் நேரடியாகச் சென்று நாங்கள் வேட்பு மனு தாக்கல் செய்யப்போகிறோம், எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாவட்ட காவல் துறை அதிகாரிகள், அவர்கள் உரிய பாதுகாப்போடு வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு வேண்டிய பாதுகாப்புக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலையில் ஊராட்சி மன்றத் தலைவருக்கு மட்டும் தேர்தல் நடத்தி, ஊராட்சி மன்றத் தலைவர் தனியாக நிர்வாகம் செய்ய முடியாது என்றுகூட மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் நேற்று சொன்னார். ஊராட்சித் தேர்தல் விதிமுறையில், ஊராட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்பு--மாவட்ட ஆட்சித்தலைவரே ஊராட்சித் தேர்தல் விதிமுறைப்படி 6 மாத காலத்திற்கு தலைவரே செயல்படலாம் என்று விதிமுறையைக்கூட திருத்தி--ஊராட்சி மன்றத்





தலைவர் செயல்படலாம் என்று சொல்ல மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. ஊராட்சி மன்ற உறுப்பினர் தேர்தலுக்கு அங்கே வேட்பு மனு தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, ஊராட்சி மன்றத் தலைவரை 6 மாத காலத்திற்கு தேர்ந்தெடுத்து, அவர்களே நிர்வாகம் செய்வதற்கு வேண்டிய வழிவகைகள் எல்லாம் இருக்கின்றன; விதிமுறைகளும் இருக்கின்றன. மாவட்ட நிர்வாகம் முழுமையாக, நல்ல முறையில், பாதுகாப்பான முறையில், தேர்தல் நடத்துவதற்கு வேண்டிய முழு முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தகவலுக்காகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) திரு. சந்தானம் அவர்கள், அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் மிகவும் கவனமாக இருக்கிறது. நீங்கள் இருக்கின்ற சிக்கலை இடியாப்பச் சிக்கலாக மாற்றிவிடாதீர்கள், உட்காருங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய வார்த்தையை நிறைவு செய்கிறேன். நேற்று ஈரோட்டில், கள் இறக்குகிறார் என்று சொல்லி சுப்பையா என்பவரை போலீஸ் அழைத்து வந்து, கடுமையாக அடித்து துன்புறுத்தியிருக்கிறார்கள். அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி தெரிந்து, அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் எல்லாம் திரண்டு வந்து, காவல் துறையினரைக் கேட்டால், இறந்துவிட்டாரா, இருக்கிறாரா என்று சொல்லாத காரணத்தால் அவரே சொல்லியிருக்கிறார், நான் மரம் கட்டவுமில்லை, கள் இறக்கவுமில்லை, நான் இருக்கிற தோட்டம் சாமியப்பன் என்பவருடைய தோட்டம். அதை நீங்கள் பாருங்கள் என்று சொல்லியிருக்கிறார். அதையெல்லாம் கேட்காமல் அடித்து, துன்புறுத்தி, அங்கே ஒரு கலவரத்தை, காவல் துறை சரியான விசாரணை இல்லாமல் நடந்து கொண்டுள்ள ஒரு விளைவு ஏற்பட்டிருக்கிறது. அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படி தவறாக நடந்திருந்தால் அதற்குரிய நடவடிக்கையை நீங்கள் விசாரித்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

இறுதியாக, நேற்று நள்ளிரவில் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தவர்கள் சவுதிக்குப் போவதற்காக வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். 14 பேர் வந்திருக்கிறார்கள், வேனிலே நின்று கொண்டிருந்த நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர்

அவர்களுடைய காருக்குப் பின்னால் அந்த வண்டி வந்து நின்றிருக்கிறது. அமைச்சர் அவர்களுடைய காரிலே நம்முடைய அமைச்சர்கள் இரண்டுபேரும் அதிலே வந்திருக்கிறார்கள். அப்படி வந்து, பின்னால் வந்து நின்ற வேனிலே, அங்கே மேலேயிருந்து வந்து டேங்கர் லாரி மோதியதில் ஸ்பாட்டிலேயே 2 பேர் இறந்து போய்விட்டார்கள். 14 பேர் ஆஸ்பத்திரியிலே மிகவும் மோசமான நிலைமையிலே இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் 3 மணிநேரம் அந்த ஆஸ்பத்திரியிலேயே இருந்து, அவர்களைத் தூக்கிக் கொண்டுவந்து வைத்து, அவர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்துவிட்டு, இரவில் 2 மணிக்கு மேலே சென்றிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் மட்டும் கொஞ்சம் நிதானத்தில் இருந்தவர், 'நான் திருத்துறைப்பூண்டியைச் சேர்ந்தவன்; திரு. பழனிசாமி அவர்களிடம் சொல்லுங்கள்' என்று சொல்லியுள்ளார். அமைச்சர் அவர்களும் நேரடியாக எனக்கு போன் பண்ணிச் சொன்னார்கள். உண்மையிலேயே அவர்களுக்கு நான் நன்றி சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி 3 மணி நேரம் இருந்திருக்கிறார்கள். அவர்கள் ஏதோ அவசரமாகத்தான் சென்றிருக்கிறார்கள். அப்படியிருந்தும், ஏதோ வந்தோம் பார்த்தோம், அதிகாரிகளிடத்திலே சொன்னோம் என்றில்லாமல் அல்லது போலீசாரே அவர்களைத் தூக்கிக் கொண்டு போக வேண்டுமென்று சொல்லாமல், அந்த ரோடு clear பண்ணுவது வரையிலும் இருந்து, அவர்களை மருத்துவமனையிலே சேர்த்துவிட்டு, 3 மணி நேரம் அங்கேயே இருந்திருக்கிறார்கள். காலையிலே அவர்கள் எங்களுக்கு போன் பண்ணியதற்குப் பிற்பாடு, காலையிலே நான்கு மணிக்கு, நானும் திரு. சிவபுண்ணியம் அவர்களும் போனோம். அந்தப் பகுதி மக்களே ரொம்பப் பெருமையாகப் பேசுகிறார்கள் அவர்களுக்கு நான் உண்மையிலேயே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் கூடவே இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் சேர்த்து நான் நன்றி சொல்லி என்னுடைய வார்த்தைகளை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துகளை இந்த அவையின் முன் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

என்று சொல்வார்கள். அதுபோல, 150 பாராக்களுடன் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முதல்வர் அவர்களுடைய ஆலோசனையோடு, பேரறிஞர்களினுடைய அறிவுரையோடு, தயாரித்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையினைப் பார்க்கின்றபோது, உண்மையிலேயே மிகவும் சிரமப்பட்டு, தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்ற வேண்டுமென்கின்ற கடுமையான முயற்சிக்கு ஓரளவு வெற்றியாவது கிடைக்க வேண்டுமென்ற ஆதங்கத்தோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொண்டுதான் தீர வேண்டும்.

சென்ற ஆட்சியிலே 1996 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர்கள் கஜானாவும் காலி, களஞ்சியமும் காலி என்று சொல்லி, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், உண்மைக்கு மாறாகக் கூறி, 5 ஆண்டுகள் ஆட்சி செய்து, தமிழகத்தினுடைய பொருளாதாரத்தைச் சிதைத்து, சின்னாபின்னப் படுத்தி, நடுத்தெரு நாராயணா என்று கொண்டு வந்ததால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளை அறிக்கை, வேதனை, இல்லாமை என்று வரவு, செலவில் கூறும் துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

தன் பணத்தைச் சூதாடுவதை குற்றம் என்றால், மக்கள் பணத்தைச் சூதாடுவதை மாபாவம் என்றார் பாரதியார். நிதி நிறுவனங்கள், தொழில் முனைவோர், ஏர் செல், கம்ப்யூட்டர், வைர வியாபாரிகள் இவர்களை காவல் துறை தவறு செய்தபின் நடவடிக்கை எடுப்பதைக் காட்டிலும், இந்த நிலையினைத் தவிர்க்க எப்படி பாஸ்போர்ட் வாங்குவதற்கு முன்னதாக, அரசு ஊழியர்களுக்கு V.R.S.-ல் சென்றால் காவல் துறை தடையின்மைச் சான்றை எப்படிக் கொடுக்கின்றதோ, அதுபோல இதுபோன்ற நிறுவனங்களை ஏற்படுத்துகின்றவர்களுக்கு முன்னதாகத் தடையின்மைச் சான்றை காவல் துறை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தால்தான், மக்கள் பணத்தில் தொழில் முனைவோர் விஷயத்தில், அரசாங்கம் முதல் கட்டத்திலேயே நடவடிக்கை எடுப்பதற்குத் தயார்படுத்திக் கொள்கின்ற வகையில் நம் மக்களுடைய பணத்தைப் பாதுகாப்பதற்குரிய சூழ்நிலை ஏற்படும்.

நான் இந்த நேரத்திலே சொல்கின்றபோது, நம்முடைய தமிழகத்தின் முதல்வர் அவர்கள் மிகத் துடிப்பாகவும், மிக வேகமாகவும், இங்கே யார் எந்தக் கேள்வியைக் கேட்டாலும், உடனுக்குடனாக அதற்குரிய பதிலை, நெத்தியடி என்று சொல்வார்களே (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல கொடுக்கின்ற ஆற்றல் பெற்றிருக்கின்ற அவர்கள் எங்களுக்கு முதல்வராக வந்திருப்பதை நான் உண்மையிலேயே பெருமையாக நினைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நன்பகல் 12-00

ஒரு கேள்வியை இப்பொழுது கேட்டு, ஒரு வருடத்திற்கு அப்புறம் பதில் வந்து, கேள்வி கேட்டவருக்கே என்ன கேள்வி கேட்டோம் என்று தெரியாமல், பதில் வருகிற நேரத்திலே மம்மங்கா மாதிரி இல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) உடனுக்குடன் Spot payment மாதிரி, அதனாலே அப்படிப்பட்ட திறமை மிக்க உங்களைத் தேர்தலிலே நிற்க தடை பெற்று, தேர்தலிலே நிற்க முடியாத சூழ்நிலையை உருவாக்கினார்கள். ஆனாலும், கலங்காமல் நீங்கள் தேர்தலிலே எல்லோருக்காகவும் போய் பேசி, மிகப் பெரிய ஒரு வெற்றியைப் பெற்றீர்கள் என்பதனை சரித்திரம் மறக்காது. அதன் பிறகு நீங்கள் பெரும்பான்மையாக வந்ததனால் முதல்வர் ஆனீர்கள்.

நீங்கள் முதல்வராவதைப் பொறுக்காத உள்ளங்கள் டெல்லி கோட்டைக்குப் போய் அங்கே இருக்கின்ற சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு மனுவைக் கொடுத்து, ஓர் உத்தரவைப் பெற்று நீங்கள் முதல்வராக இருக்க முடியாது என்ற நிலைமையைத் தோற்றுவித்தார்கள். கலங்கவில்லை. உடனடியாக உங்கள் தொண்டராக இருக்கின்ற எங்கள் மாண்புமிகு முன்னாள் வருவாய்த் துறை அமைச்சரும், இன்றைய பொதுப் பணித் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு ஓ. பன்னீர்செல்வம் அவர்களை அழைத்து 'இதைப் பிடித்துக்கொள்ளுங்கள், இந்த முதல் மந்திரி பதவியை, நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள்', நான் கொஞ்சம் அந்தக் கோர்ட் வரைக்கும் போய்விட்டு வருகின்றேன் என்று போனீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நீதிக்குத் தலைவணங்குகின்ற நீங்கள் அதைப் பெற வேண்டும் என்றும், நீதிக்கு தண்டனை கொடுக்கப்பட்டுவிடக் கூடாது என்ற காரணத்தினாலும் கோர்ட் வரைக்கும் போய் வெற்றி பெற்று, வீராங்கனையாக வந்தீர்கள். உடனே எல்லோரும் என்ன சொன்னார்கள்? உடனே முதல்வராக வந்து விடுங்கள் என்று. சொன்னார்கள் அவர் கொடுப்பதற்கு ரெடியாக இருக்கிறார், எப்பொழுது அம்மா நீங்கள் வாங்கிக்கொள்வீர்கள் என்றார். அம்மா உடனே வைத்துக்கொள்ளுங்கள், நான் ஆண்டிப்பட்டிக்குப் போய் அங்கேயிருக்கிற மக்களைப் பார்த்துவிட்டு வருகிறேன் என்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



ஆண்டிப்பட்டிக்குப் போனார்கள், அங்கே ஒரு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றார்கள், உடனே திரும்பி வந்தார்கள். தன்னுடைய அம்மையார் இட்ட கட்டளைக்காகப் பொறுப்பேற்றிருந்த அந்த முதல்வர் பதவியை அம்மையாரிடத்திலேயே திருப்பிக்கொடுத்த அந்தக் காட்சியை நான் பார்த்தபோது இராமாயணத்திலே பரதன் அப்படி கொடுத்ததாக படித்திருக்கிறோமே தவிர பார்த்ததில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) பார்க்கக்கூடிய ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தந்த, நம்முடைய இன்றைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்."**

நான் இன்றைக்கு இருக்கிற மற்ற கட்சிக்காரர்களைக் கேட்கிறேன். இந்தக் கட்சியிலேதான் கொடுத்துவிட்டால், திரும்பக் கொடுக்கிற பழக்கம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வேறு யாரையாவது நீங்கள் போட்டுவிட்டால், போடப்பட்டவன்தான் பர்மனென்ட் முதல்வர். (சிரிப்பு) அதற்குப் பிறகு வேறு ஒருத்தரும் வரமுடியாது. உதாரணத்திற்கு ஆந்திராவை எடுத்துக் கொண்டால்கூட பாருங்களேன். மாமனாரை ஒழித்துவிட்டு மருமகன்தான் முதல் அமைச்சராக வந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) சொந்தத்திலேயே அப்படி இருக்கும்போது, உண்மையிலேயே ரொம்ப ஆச்சரியமான தொண்டர்கள்தான். அதைப் பார்க்கின்றபோது, உண்மையிலேயே இப்படிப்பட்ட ஒரு நல்ல வரலாற்றைத் தமிழகத்திற்கு உருவாக்கித் தந்து இருக்கிறீர்கள். அதை நாம் நினைக்கின்றபோது எனக்கு ஒரு மகிழ்ச்சி.

1984 ஆம் ஆண்டு எங்கள் அருமை அன்னை இந்திரா காந்தி மறைந்த நேரத்திலே, அவருடைய புதல்வர் பிரதமராக வந்தார். எல்லோரும் சொன்னார்கள். இன்னும் ஒரு வருடம் இருக்கிறது, ஆட்சி நடத்திவிட்டு அதற்கு அப்புறம் நீங்கள் தேர்தலைச் சந்திக்கலாம் என்று. இல்லை, இல்லை, நான் தேர்தலைச் சந்தித்துவிட்டுத்தான் பிரதமராக வருவேன் என்று சொன்னார் எங்கள் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள். அதேபோல, ஆண்டிப்பட்டிக்குச் சென்று தேர்தலிலே வெற்றி பெற்று முதல்வராக பொறுப்பு ஏற்பேன் என்று சொன்ன நம்முடைய முதல்வருடைய நடவடிக்கைகளைப் பார்க்கின்றபோது, மறைந்த எங்களுடைய தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் நினைவுதான் எனக்கு இந்த நேரத்திலே வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அதிகபட்சமாக நான் புகழ வேண்டியது எனக்குத்

தேவையில்லை. ஆனால், ஒவ்வொரு கட்டத்திலேயும் century அடிக்கிறமாதிரி ஒவ்வொன்றையும் செய்து கொண்டு வருகிறபோது அதைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாலே ஆட்சியிலே இருந்தவர்கள், குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இரண்டு வகையான ஆட்சியாளர்களைப் பார்க்கிறோம். ஒருவர் செய்ததற்குப் பெயர் வைத்து பழக்கப்பட்டவர்கள். இன்னொருவர் மற்றவர் செய்ததற்கு பெயர் மாற்றிப் பழக்கப்பட்டவர்கள். அதுமாதிரி மாற்றியது உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சீரணி அரங்கம் இருக்கிறதே, அது சீரணி அரங்கம் இல்லை. காங்கிரஸ் காலத்தில் அதை உருவாக்கி, அதற்கு திலக் காட் என்று பெயர் வைத்தோம். சுதந்திரப் போராட்டத் தியாகி லோகமானிய பாலகங்காதர திலகருடைய பெயரை வைத்தோம். பார்த்தார்கள், அந்த பெயரை மாற்றி அதற்கு சீரணி அரங்கம் என்று பெயர் வைத்தார்கள்.

பிற்பகல் 12-05

கலைவாணர் அரங்கம் என்று இப்போது இருக்கிறது. அது நேருவினுடைய கரத்தாலே திறக்கப்பட்ட காரணத்தினாலே, அவர்களுடைய நினைவாக இருக்க வேண்டும் என்பதற்காக, அதற்கு Childrens' Theatre-சிறுவர் அரங்கம் என்று பெயர் இருந்தது. அதற்குப் பெயரை மாற்றி, கலைவாணர் அரங்கம் என்று பெயர் வைத்தார்கள். ஏன் அவருக்கு என்று ஒரு கட்டடத்தைக் கட்டி அதற்கு பெயர் வைக்க வேண்டியதுதானே? அந்தப் பெயரை மாற்றி விட்டார்கள். அதேபோல, உங்களுக்கு ஞாபகம் இருக்கும். இப்போது இராமச்சந்திரா மெடிக்கல் காலேஜ் இருக்கிறதே, அதற்குக்கூட தாமரை என்று பெயர் வைத்தார்கள். மறுபடியும் அது மாறி மறுபடியும் இராமச்சந்திரா மெடிக்கல் காலேஜ் ஆகியது. அதைப்போல, தமிழகத்திலே Asia Games விளையாட்டினை அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே நடத்தினார்கள். அதற்காக, ஒரு ஞாபகத்திற்காக, Asia Nagar என்று 100 அடி ரோட்டிலே கோடம்பாக்கம் பக்கத்திலே உருவாக்கினார்கள். அந்தப் பெயரை எடுத்துவிட்டு இப்போது குடிசை மாற்று வாரியம், மன்னிக்க வேண்டும், வீட்டு வசதி வாரியம் என்று பெயர் வைத்துவிட்டார்கள். அதேமாதிரி நேரு விளையாட்டரங்கம் இருக்கிறது பாருங்கள். இன்டர்நேஷனல் லெவலிலே, எல்லோரும் வந்து விளையாடக்கூடிய ஒரு நல்ல ஸ்டேடியத்தை, விளையாட்டு அரங்கத்தை உருவாக்கினார்கள். பல கோடி ரூபாய் செலவு செய்து அமைத்தார்கள். அதிலே போய், பிறந்த நாள், அந்த நாள், இந்த நாள் என்று வைத்து,



அங்கேயிருக்கிற புல்வெளி எல்லாவற்றையும் நாசப்படுத்தி அதை ஒரு வழியாக்கிவிட்டார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், மக்களுடைய வரிப் பணத்தை நல்லவிதமாகப் பயன்படுத்தி, மக்களுக்கே பயன்படக்கூடிய காரியங்களை உருவாக்கியவர் ஒருவர். அப்படிப்பட்ட காரியங்களை, கரும்புக் கொல்லையிலே யானை புகுந்த மாதிரி, உள்ளே நுழைந்து நாசப்படுத்துவது என்பது ஒரு கூட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும்கூட நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாமிகளுக்குக்கூட நேரம் வர வேண்டும் போல் இருக்கிறது. ஆமாம், இப்போது 63 சாமிகளும் ஓஹோ என்று இருக்கிறார்கள். 63 கோயில்களிலும் அன்னதானம் நடைபெறுகிறது. ஆனால், சில கோயில்களிலே ஒருகால பூஜைக்குக்கூட வழியில்லாமல் இருந்த அந்தச் சாமிகளுக்கெல்லாம் இந்த அம்மா நல்ல நேரத்தைக் குறித்து, 25,000 ரூபாய் பணத்தை அந்தக் கோயிலினுடைய பெயராலே (மேசையைத் தட்டும் ஒலி) டெபாசிட் செய்து, அதிலே வருகிற வருமானத்திலிருந்து, அவர்களுக்கு, அந்த சாமிகளுக்கு ஏதோ என்னால் முடிந்தது சர்க்கரைப் பொங்கல் சாப்பிடு அல்லது ஒரு நாளைக்கு வெண்பொங்கல் சாப்பிடு ஒரு வேளையாவது விளக்கேற்றி தீபாராதனை காட்ட, வேண்டுமென்று 25,000 ரூபாய் டெபாசிட் செய்தார்கள். இவர்கள் ஆட்சி போனதற்குப் பிறகு இந்தத் திட்டம் தொடர்கிறதா இல்லையா என்பது தெரியாத ஒன்றாக இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டம் இல்லாமல் இருந்தால் மறுபடியும் அதை நீங்கள் கொண்டுவர முயற்சிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்னாலே, இந்த ஆண்டு ஒரு கால பூஜைக்காக ஆயிரம் கோயில்களைத் தேர்வு செய்து நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதையும், வருகிற ஆண்டில் இருக்கின்ற அனைத்துக் கோயில்களிலும் ஒரு கால பூஜை நடைபெற, ஒரு கால பூஜை திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 5

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்களின் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழுமையாக பதில் சொல்லவில்லை என்பதனால் நான் விளக்கம் கூற எழுந்திருக்கின்றேன். கடந்த ஆட்சிக் காலத்தில் 1991 முதல் 1996 வரை, தமிழகத்தில் ஒரு கால பூஜைகூட நடைபெறாத கோயில்கள் எத்தனை என்று கணக்கிடப்பட்டு, அந்தக் கோயில்களிலே எல்லாம் விளக்கு எரிய வேண்டும், ஒரு கால பூஜையாவது நடத்தப்பட வேண்டும் என்பதற்காக, ஒரு கால பூஜை திட்டம் என்று கொண்டு வந்து, அப்படி விளக்கு எரியாத கோயில்களுக்கெல்லாம் தலா 25,000 ரூபாய் வைப்பு நிதியை ஏற்பாடு செய்து போட்டு வைத்து, 1996 ஆம் ஆண்டு, ஆட்சிக் காலம் முடிவதற்குள் தமிழகத்தில் விளக்கு எரியாத கோயில்களே இல்லை என்ற நிலைமையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்படுத்தியது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், பின்னர் 1996-லிருந்து 2001 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில், இந்த ஒரு கால பூஜை திட்டம் கைவிடப்பட்டது. மீண்டும் 2001-ல் ஆட்சி பொறுப்புக்கு வந்ததும் பார்த்தபோது, பழையபடியே நிறைய கோயில்களில் ஒரு கால பூஜைகூட நடைபெறவில்லை என்ற தகவல் கிடைத்தது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல், இந்த ஆண்டு ஆயிரம் கோயில்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டிற்குள் தமிழகத்தில் ஒருகால பூஜைகூட நடைபெறாத அனைத்து கோயில்களுக்கும் இந்த வைப்பு நிதி ஏற்பாடு செய்யப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் அனைத்துக் கோயில்களிலும், விளக்கு எரிய ஏற்பாடு செய்ய உள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா கோயில்களுக்கும் 1996 வரைக்கும் 25,000 ரூபாய் டெபாசிட் செய்துதான் அந்த நிகழ்ச்சிகள் நடந்தன. அந்த ஆட்சி போனதற்குப் பிறகு அந்த 25,000 ரூபாய் என்ன ஆயிற்று? சமத்துவபுரம் கதை ஆகிவிட்டதா, என்ன என்பதை நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைக் கண்டுபிடிக்கத்தான் விசாரணைக்கு உத்தரவிட்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2002 ஏப்ரல் 5]

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு சம்பந்தம் இல்லை. (குறுக்கீடு) உங்களுக்கு சம்பந்தமே இல்லை, உட்காருங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கோ.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திருமதி டி. யசோதா:** நான் கேட்கிற கேள்விக்கு முதல்வர் பதில் கொடுக்கிறார்... எதையும் தாங்கும் இதயம் கொஞ்சம் பொறுமையாக இருந்து...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யசோதா, கொஞ்சம் இருங்கள். பேராசிரியர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் கோயில்களுக்கு வைப்பு நிதி வைக்கப்பட்டதாகத்தான் முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொல்கிறபோது நான் அறிந்தேன். வைப்பு நிதி என்றால் எனக்குப் புரிந்தது Fixed Deposit. அதன் வட்டியைக் கொண்டு இந்தக் கடமையை நிறைவேற்றுவதாகவே நான் கருதுகிறேன். அப்படி வைக்கப்பட்ட நிதி நிரந்தரமாகத் தொடர்ந்து நீடிக்காமல் அந்த வைப்பு நிதி வைக்கப்பட்ட கோயில்களில் அந்த நிதி இல்லாத நிலைமை எப்படி ஏற்பட முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் விளக்குவார் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் அந்தத் திட்டத்தைத் தடை செய்து நிறுத்திவிட்ட காரணத்தினாலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதல்வராக பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே, அனைத்து ஆலயங்களிலேயும் ஒரு விளக்கு ஓர் ஆண்டிற்குள் எரிந்தாக வேண்டும் என்று ஆணையிட்டு இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் இன்றைக்கு அந்த வைப்பு நிதியை வைத்து, ஒவ்வோர் ஆலயத்தின் பெயரிலேயும் 25,000 ரூபாய் வைப்பு நிதியை வைத்து, அதிலிருந்து வருகின்ற வருவாயை வைத்து ஒருகால பூஜை செய்ய வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய தலைவர் பேராசிரியர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்கள் கேட்டதற்கு, முதலமைச்சர் அவர்கள் அதுசம்பந்தமாக விசாரித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) திருமதி யசோதா, பேசுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** ஏற்கெனவே வைத்து இருக்கிற வைப்பு நிதியைபற்றி விசாரித்து, மானியக் கோரிக்கையில் விளக்கமாகச் சொல்லப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, சாமிகளுக்கெல்லாம் நல்ல காலம் வந்துவிட்டது.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகின்றேன். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், உலக வங்கியை சென்னைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். உண்மையிலேயே இந்தச் சாதனை பாராட்டிற்குரியது தான். ஏன் என்றால், உங்களுக்கு மத்தியிலே அமைச்சர்கள்கூட கிடையாது. அமைச்சர்கள் வைத்திருந்த முந்தைய ஆட்சியாளர்கள்கூட இந்தச் சாதனையைச் செய்யவில்லை என்கின்றபோது ரொம்ப குறுகிய காலத்திலேயே, இந்த உலக வங்கியை நீங்கள் கொண்டுவந்து இருப்பது பாராட்டிற்குரியது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையில், ஆளும்கட்சி, எதிர்க்கட்சி, சட்டமன்றம், அரசு, சென்றுக் கொண்டிருக்கின்றபோது, இந்த ஆட்சி



கவிழ்க்கப்படும், இல்லை கவிழ்க்கப்படலாம், தானே கவிழ்ந்திடுமா, அப்படி இப்படி என்று கிளி ஜோசியம், குருவி ஜோசியம் போல சொல்லிக்கொண்டிருக்கின்ற அந்த நிலைமைகளையெல்லாம், உண்மையிலேயே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே, உங்கள் அரசுக்கு ஓர் இக்கட்டான சூழ்நிலைமை ஏற்பட்டது. அந்த நேரத்திலே மத்தியிலே ஆண்டுகொண்டிருக்கிற பாரதிய ஜனதாவினுடைய தலைவர், அகில இந்திய தலைவர்கூடச் சொன்னார். காங்கிரஸ் ஒப்புக்கொண்டால், ஆதரித்தால், இந்த அரசாங்கத்தின்மீது நடவடிக்கை எடுக்க முடியும் என்று சொன்னார்கள். ஆனால் அந்த நேரத்திலே எங்கள் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவியாக இருக்கும் அன்னை சோனியா காந்தி அவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை, எந்தக் காலகட்டத்திலும் கவிழ்ப்பதற்கு காங்கிரஸ் துணையாக நிற்காது என்று சொன்னதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 12-15

எல்லா மாநிலங்களுக்கும் பற்றாக்குறைதான். அதை எப்படி கையிலே எடுத்துக்கொள்ள வேண்டுமோ அப்படி நீங்கள் எடுத்திருக்கிறீர்கள். மிகப் பக்குவமாகக் கையாண்டு, மத்திய அரசாங்கத்தை எங்கள் மாநிலத்திற்கு 3,000 கோடி ரூபாய் தாருங்கள், அதை மானியமாகத் தாருங்கள் என்று கேட்டு இருக்கின்றீர்கள். நீங்கள் கேட்டதைப் பார்த்தவுடனேயே, சந்திரபாபு நாயுடு அவர்கள், நமக்குத் தோன்றவில்லையே அந்த ஆலோசனை என்று நினைத்து அவர் கேட்கிறார், நீங்கள் கேட்பது கரெக்ட், நானும் கேட்பேன் என்கிறார். அதேமாதிரி, பாண்டிச்சேரியிலே இருக்கின்ற எங்களுடைய Chief Minister திரு. ரங்கசாமி சொல்கிறார், நீங்கள் கேட்கிறீர்கள், நாங்களும் கேட்கிறோம் என்று. அதேமாதிரி கர்நாடகத்திலே இருக்கிற முதல்வர் கிருஷ்ணா அவர்கள் சொல்கிறார், நீங்கள் கேட்கிறீர்கள், அதனாலே நாங்களும் அதேவழியிலே வருகிறோம் என்கின்ற நிலைமைக்கு, மற்ற முதல்வர்களுக்குக்கூட இதுபோன்ற பற்றாக்குறை சூழ்நிலையிலே எப்படி அதை மத்திய அரசாங்கத்திற்கு கொண்டு போகவேண்டும் என்பதற்கு ஓர் உதாரணமாக தமிழ்நாட்டைச் சேர்ந்த முதல்வர் அவர்கள் முன்னோடியாக இருக்கிறார் என்பதை நினைக்கின்றபோது எனக்கு பெருமையாகத்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு, ஒரு பஞ்சாயத்திற்கு அவசியம் தேவை, Model Village மாதிரி அதை

நாம் உருவாக்க வேண்டும் என்பதற்காக. மாற்றான் தோட்டத்து மல்லிகையாக இருந்தாலும் மணம் இருக்கும் என்று சொன்னவர், அவருடைய பெயராலே ஓர் இயக்கத்தையே நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, இந்தத் திட்டம் ஒரு பஞ்சாயத்திற்கு நீங்கள் இரண்டு யூனியனுக்கு ஒரு கோடி கொடுக்கிறீர்கள், தொழிற்சாலை அமைப்பதற்கு அங்கே என்ன வசதியிருக்கிறது என்பதை வைத்து. ஆனால், அது இந்தப் பஞ்சாயத்துகளின் நலன்களைப் பாதுகாக்கக்கூடிய ஒரு சூழ்நிலையிலே, பஞ்சாயத்திற்கு வேண்டிய ரோடு மற்றும் பள்ளிக்கூட கட்டடங்கள் செய்வதற்கு முடியாது. நீங்கள் தயவுசெய்து அதைச் செய்து கொடுக்கவேண்டுமென்று உங்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னமோ POTA சட்டம் என்று ஒன்றைச் சொன்னார்கள். POTA சட்டம். அதைப் போட்டால் திருப்பி எடுக்க முடியுமோ, என்னமோ தெரியவில்லை. அது தாக்கல் செய்யப்பட்டது. இந்த நாட்டின்மீது எல்லையில்லா பாசம் கொண்ட அதிகாரிகள், பாராளுமன்றத்தைத் தீவிரவாதிகள் தாக்கிய நேரத்திலே, தங்களுடைய உயிரை பலிகொடுத்து அன்றைக்கு பாராளுமன்றத்தைக் காப்பாற்றியிருக்கிறார்கள் என்பதை நாம் பெருமையாக நினைக்க வேண்டும். அன்றைக்கு அந்த POTA சட்டம் காப்பாற்றவில்லை. அதிகாரிகளுடைய தியாகத்தாலே அந்தப் பாராளுமன்றம் காப்பாற்றப்பட்டது. அதனால் நாம் மத்தியில் என்ன செய்தோம்? 5 சதவிகிதம் மேல்வரி போட்டோம், அதனால் நமக்கு 512 கோடி ரூபாய் தமிழ்நாட்டிற்கு cut செய்து விட்டோம். இப்போது இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் கொண்டுபோய் 3 மாதங்களாக இராணுவத்தை நாம் நிறுத்தியிருக்கிறோம். சரி, பாகிஸ்தான் பண்ணியது தப்பு. அதனால் நாம் அதை நிறுத்தியிருக்கிறோம். அதற்காக நமக்கு இரண்டு கொட்டு கொட்டியிருக்கிறார்கள். 512 கோடி ரூபாயை cut செய்திருக்கிறார்கள். 5 சதவிகிதம் வரியைப் போட்டு இருக்கிறார்கள். அத்தனையையும் தாங்கி நிற்கிறோம். அதைத்தானே குஜராத்திலே பஜ்ரங்தள் இயக்கத்தினர் செய்திருக்கிறார்கள். அன்றைக்கு சட்டமன்றத்திற்குள்ளே போய் அடித்து நொறுக்கியிருக்கிறார்களே, அவர்கள்மீது இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அவர்கள் எல்லாம் நம்முடைய ஆட்கள் என்ற நினைப்பா? ஓரிசாவில்..... (குறுக்கீடு) மன்னிக்கவும், ஓரிசா என்றுதான் எழுதியிருக்கிறேன். நான் குஜராத் என்று சொல்லிவிட்டேன். இதே குற்றத்தை இன்றைக்கு ஓரிசா சட்டசபையில் பஜ்ரங்தள்காரர்கள் நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் நம்மவர்கள் என்ற பாணியிலே மத்திய அரசினுடைய





அணுகுமுறை இருப்பது வேதனை அளிப்பதாக இருக்கிறது. என்ன செய்தது இந்த POTA சட்டம். பல இனம், பல மொழிகளைக் கொண்ட இந்திய நாடு, இதன் ஒற்றுமையை இன்றைக்கு பலர் விரும்பவில்லை.

"காவித் துணி வேண்டா, கற்றைச் சடை வேண்டா,
உளந்தொட்டு நின்றாற் போதுமடா,
பேயரசு செய்தால், பிணந் தின்னும் சாத்திரங்கள்"

என்றார் பாரதி. அந்த நிலைமைதானே இன்றைக்கு ஓரிசாவிலே நடந்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையை நோக்கித்தான் குஜராத்தும் பயணம் செய்து கொண்டிருக்கிறது. இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், இது நம்முடைய தமிழகத்தை எந்த நிலையிலேயும் தாக்கி விடக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட்டுச்சொல்கிறேன்.

இன்னும்கூட சொல்லவேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு குறைந்த வட்டியில் நிதியாதாரம் பெற விரும்புகின்ற ஓய்வூதியத் திட்டத்தை அரசு சொல்லியிருக்கிறது.

ஆனால், முந்தைய ஆட்சியிலே V.R.S. ஓய்வுபெற்ற பல ஊழியர்கள், 1996-லேயிருந்து 1998 வரைக்கும், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகையிலே 60 சதவிகிதத்தை இன்னும் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதற்கு 9½ சதவிகிதம் வட்டி கொடுக்கிறார்கள். அது தேவைதானா? இதில் அரசுக்கு ஏற்படும் இழப்பைச் சரிசெய்து, ஊழியர்களையும் திருப்தி செய்யும் அளவில், உடனடியாக செட்டில்மெண்ட், குறைந்த வட்டியிலே வாங்கிக் கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்தால் அவர்கள் பாராட்டுவார்கள். மத்திய அரசு, இராணுவம், போலீசைத் தவிர மற்ற துறைகளை தனியார்மயமாக்க அவசரமும், ஆவேசமும் காட்டுகிறது. இதில் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் தனியார் மயமாக்கப்படுவதை எதிர்த்து முதல் குரல் கொடுத்த நம்முடைய தமிழகத்தின் முதல்வருக்கு பெருந்தலைவர் காமராஜருடைய தொண்டர் என்கின்ற முறையில் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-20

நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நீங்கள் கொடுப்பதிலே புரட்சித் தலைவரையும் தாண்டிப் போய்க்

கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், மக்கள் கோயிலுக்குப் போனால் முடியைக் கொடுப்பேன் என்றுதான் வேண்டிக்கொள்வார்கள். ஏனென்றால், அது மறுபடியும் முளைக்கும். உங்கள் மேலே பாசம் கொண்டு ஒரு தொண்டர் எந்தவிதமான விளம்பரமும் இல்லாமல், நேராக திருப்பதிக்குப் போய் நாக்கை வெட்டி அங்கே உண்டியலில் போட்டுவிட்டு வந்துவிட்டார், கேட்டால், ஆண்டிப்பட்டியிலே நீங்கள் ஜெயித்து வரவேண்டுமென்று. அந்தச் செய்தி உங்களுக்குத் தெரிந்த உடனே நீங்கள் கூப்பிட்டு, அவரைப் பார்த்து, 25,000 ரூபாய் கையிலே கொடுத்து, என்னய்யா, இந்த மாதிரியெல்லாம் பண்ணுவது தப்பு, சரியில்லை, நியாயமில்லை என்று சொன்னால், அவர் சொல்கிறார், பேசமுடியாத நிலையிலேகூட, உங்களுக்காக நான் உயிரைக்கூட கொடுப்பேன் என்று சைகையிலே காட்டுகிறார். அதுமட்டுமல்ல, அதோடு அவரை விட்டுவிடவில்லை. அவரைக் கொண்டுபோய் மிக உயர்ந்த மருத்துவமனையிலே சேர்த்து, அவருக்கு முழுமையான treatment கொடுத்து, Additional ஆக ஒரு நாக்கையும் பொறுத்தி, அவர் பேசக்கூடிய அந்த அழகினைப் பார்த்து ரசிக்கின்ற தமிழக முதல்வரைப் பார்க்கின்றபோது, (மேசையைத் தட்டும் ஒலி) நான் பள்ளிக்கூடத்துப் பாடத்திலே குமணன், அமணன் என்று இரண்டு அண்ணன் தம்பிகளை படித்திருக்கிறேன். அதிலே குமணன் தலையை வெட்டிக் கொண்டு வந்தால்தான் அமணன் பரிசு கொடுப்பான் என்று சொன்னான். புலவர் போனார். தலையைக் கொடுப்பதற்கு அண்ணன் ரெடி. அந்தப் புலவரே வந்து, வாழைப் பூவிலே அந்தத் தலையைச் செய்து கொண்டுபோய்க் கொடுத்தார். அந்த இராஜாக்கள் காலத்திலே படித்ததெல்லாம்கூட இன்றைக்கு நிகழ்வுகளாக உங்களுடைய ஆட்சிக் காலத்திலே பார்க்கின்றபோது, இவ்வளவு தியாகம் செய்யக்கூடிய அந்தத் தொண்டர்களையும், அவர்களை அரவணைத்துச் செல்லக்கூடிய ஒரு தலைமையும் தமிழகத்தினுடைய முதல்வராக வந்திருக்கின்றபோது (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் நிச்சயமாக தமிழகத்து மக்களுடைய காலிலே அடி படுகின்றபோது, அவர்கள் காலிலே பட்ட அடியின் காரணமாக வலியினாலே துடித்து, துவள்கின்றபோது, நிச்சயமாக அம்மா, உங்களுடைய கண்களிலேயிருந்து கண்ணீர் வரும் என்பதைப் புரிந்து கொண்டவர்கள் நாங்கள் என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே மூன்று அம்மாக்கள் இருக்கிறார்கள். இரண்டு அம்மாக்கள் ஆன்மீகம். மருவத்தூர் அடிகளார் ஒரு அம்மா. மற்றொரு



அம்மா, மாயி இருக்கிறார்களே, அந்த அம்மா ஒரு அம்மா. இந்த இரண்டு பேரும் ஆன்மீகம். அரசியலிலே ஒரேயொரு அம்மா, தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள் என்றாலே, அது நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதனாலே, நீங்கள் அந்தத் தாயுணர்வோடு, தாயுள்ளத்தோடு நிச்சயமாக—இந்தத் தமிழகத்து மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினை மிகவும் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. "இரவும் பகலும் கண் விழித்து, தண்ணீர் வண்டிக்காகக் காத்திருந்த தமிழ்த்தாய் நின்று, களைத்து, நித்தம் இளைத்து, ஊர்தி சத்தம் கேட்டதும் உயிரினில் பாதி இற்றவளாய் நின்ற....." என்ற நிலையை தமிழகத்து முதல்வர் அவர்கள் போக்கியாக வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, உங்களுக்கு ஒன்றை நான் கூற விரும்புகிறேன். கல்வித் துறையிலே, ஜெர்மனி வல்லரசினுடைய தலைவர் ஒருவர் சொன்னார்; "Give me the Elementary School, I will make the Nation" என்று சொன்னார். "ஆரம்பப் பள்ளிகளை என்னிடம் தாருங்கள்; உலகை நிர்மாணித்துத் தருகிறேன்" என்று அந்தத் தலைவர் சொன்னார். ஆரம்பப் பள்ளி, சமுதாயத்திற்கு நல்ல அடித்தளம். பெரியவர் பக்தவச்சலம், அவர்கள் முதல்வராக இருந்தபோது, தமிழக சட்டமன்ற உறுப்பினர்களையே ஒரு குழுவாக வைத்து, அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று, ஆரம்பப் பள்ளிகளுடைய பிரச்சினைகளை பரிசீலித்தார். உயர்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பிற்கு ஓர் ஆசிரியர் உண்டு. ஆனால், ஆரம்பப் பள்ளிகளுக்கு மாணவர்களுடைய எண்ணிக்கையின் அடிப்படையில்தான் ஆசிரியர்கள். 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்கின்ற நிலை மாறி, அது 1964-லேயிருந்து இன்றைய வரைக்கும் இருந்தாலும்கூட, 35 ஆண்டுகளாகச் செயல்பட்டாலும்கூட, தற்போது நிலைமை 50 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்கின்ற நிலைமை.

100 மாணவர்களுக்கு இரண்டு ஆசிரியர். ஒரு வாத்தியார் லீவு போட்டுவிட்டார் என்றால் 100 மாணவர்களையும் ஒரே ஆசிரியர் பார்க்க வேண்டுமென்று சொன்னால் அது பள்ளிக்கூடமாக இருக்காது. சத்துணவுக் கூடமாகத்தான் இருக்கும். அந்த ஆசிரியர் நிச்சயமாக Good ஆசிரியராக இருக்க மாட்டார். Good Shepherd ஆகத்தான் இருக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, 1920 தமிழ்நாடு ஆரம்பப் பள்ளிகளின் சட்ட விதி 35(2) இன்படி உள்ளாட்சி நிறுவனங்கள் ஆரம்பப் பள்ளிக்காக,

கல்வி வரி விதிக்க இயலும். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை அரசு முழுமையாக ஏற்றதால் நிதிச்சுமை கூடியுள்ளது தெரிகிறது. இதில் நல்ல உள்ளாட்சிகளினுடைய பங்களிப்பும் ஓரளவு பெற்று, அரசு ஆரம்பக் கல்வியை முன்போல் சிறப்பாகச் செயல்படுத்திட வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12-25*

பைசாவை நாம் சரியாகப் பார்த்துக்கொண்டால் அது ரூபாயை சரியாகக் கவனித்துக்கொள்ளும் என்பார்கள். ஆரம்பக் கல்வித் திட்டமும் அதுபோலத்தான். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை அரசு முழுமையாக ஏற்று, அவற்றைப் பராமரிக்கும் பணிகளைச் செய்கின்றபோது, ஆசிரியர்களுடைய வைப்பு நிதியை இன்னும் பல யூனியன்கள் அரசுக்கு மாற்றவில்லை. அவர்களே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்ட நேரத்தைத் தாண்டிவிட்டீர்கள்.

**திருமதி டி. யசோதா:** இவ்வளவு பேர் பேச வேண்டுமென்று சொன்னால் நான் என்ன சார் செய்வேன் ? அதேபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்படுவது, பச்சாவத் கமிட்டி, கோதாவரி, காவிரி, கிருஷ்ணா நதியிலிருந்து உபரியாக கடலில் வீணாகும் நீரை கி.பி. 2000-க்குள் பயன்படுத்திக்கொள்ளா விட்டால், கர்நாடகம், மகாராஷ்டிரம் மாநிலங்கள் உரிமை ஏதும் கோர முடியாது எனச் சொல்லியுள்ளது. ஆனால், இந்த மாநிலங்கள் இதை இதுவரையிலும் பயன்படுத்திக் கொள்ளவில்லை. எனவே, தடையில்லா இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, தமிழக முதலமைச்சரவர்கள், தீபகற்ப ஆற்று இணைப்புத் திட்டத்தை விரைவில் முடிக்க வேண்டுகிறேன்.

அதேபோல நம்முடைய ஊரிலே எல்லாம் வெளியிலேயிருந்து வந்து பெர்மிஷன் கேட்டு Pepsi வந்தது. Coca-cola வந்தது. அப்புறம் Nestle வந்தது. இதுவெல்லாம் வந்தவுடனே, நாம் முதலிலே இப்போதுதான் வந்திருக்கிறார்கள் என்று நினைத்தோம். அவன் வரும்போது 4 ரூபாய்க்கு வந்தான். இன்றைக்கு அது 12 ரூபாயாகிவிட்டது. அவன் வரும்போது இங்கே காளிகோலா என்று இருந்தது. அவன் இங்கே வரும்போது ஃப்ரூட்னிக் என்று ஒன்று இருந்தது. அவன் இங்கே உள்ளே வரும்போது



ஸ்பென்சர் சோடாகூட இருந்தது. இப்போது இவையெல்லாம் காணாமல் போய் விட்டன. நம்முடைய ஊரிலே இருக்கிறவன் நடத்திய சிறு தொழில்கள் எல்லாம் இன்றைக்கு முழுமையாக அழிக்கப்பட்டுவிட்டன. அவன் வந்தது, coca-cola-வினை நடத்துவதற்கும், Pepsi நடத்துவதற்கும், Nestle நடத்துவதற்கும். இப்போது அவன் எல்லாம் தண்ணீர் தயாரிக்கிறான். Drinking Water தயாரிக்கிறான். பாட்டில்களில் தயாரிக்கிறான். நம்முடைய ஆட்களாலே அவனுடன் போட்டி போட முடியவில்லை. நம்முடைய ஆள் அந்தத் தொழிலை செய்துகொண்டிருக்கிறான். அவனவன் சின்ன பாக்கெட்டுகளிலும், சின்ன சின்ன பாட்டில்களிலும் குடிப்பதற்கென்று தண்ணீர் செய்து கொண்டிருக்கிறான். ஆனால், அவர்களோடு இன்றைக்கு நம்மவர்களால் போட்டி போட முடியவில்லை. இதையெல்லாம் நீங்கள் மனதிலே கொண்டு வர வேண்டுமென்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நெசவுக்குரிய பஞ்சு, இப்போது நாம் என்ன செய்கிறோம்? அதையே எடுத்து, அதையே பதியம் வைத்து, அதையே மரமாக வளர்த்து அதில் பஞ்சைத் தயாரிக்கிறோம். Rotation மாதிரி. அமெரிக்காவிலிருந்து Britt என்கிற ஒரு விதையை விற்கிறான் அமெரிக்காகாரன். அதைப் போட்டால் நமக்கு பஞ்சு கிடைக்கும். மறுபடியும் நம்முடைய விதையை அந்த இடத்திலே போட்டால் பஞ்சு விளையாது. அந்த Britt-ஐப் போட்டால்தான் வரும் என்கின்ற நிலைமைக்கு இன்றைக்கு கொஞ்சம் கொஞ்சமாக வெளிநாட்டினுடைய ஆதிக்கம், இந்தியாவிற்குள்ளே, நம்முடைய தமிழ்நாட்டிற்குள்ளே வருகிறபோது மீண்டும் ஒரு சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திடக்கூடிய ஓர் ஆபத்து ஏற்படுமோ என்கிற அச்சமான சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலேதான் இதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மறைவிற்குப்பின் வாரிசுதாரர்களுக்கு ஓய்வூதியம் தருவதாக 1999-க்குப் பிறகு இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்குத்தான் உதவி செய்ய முடியும் என்கின்ற நிலையை வரையறுத்தது முந்தைய அரசாங்கம். அதை அம்மா அவர்கள், மறுபரிசிலனை செய்து, 1999 என்பதை இன்னும் கொஞ்சம் தள்ளிப் போங்கள். ஏனென்றால், உங்களுடைய ஆண்டிப்பட்டித் தொகுதியிலேயே ஒருவர், ஒரு கிராமத்திலே குருசாமி என்கின்ற சட்டமன்ற உறுப்பினர் செத்துப் போய்விட்டார். அவர் 1996-ல் செத்துப் போய் இருக்கிறார். இந்தச் சட்டம் 1999-லே

[திருமதி டி. யசோதா] [2002 ஏப்ரல் 5

வந்திருக்கிறது. அவரது மனைவி என்னை வந்து பார்த்து, என்னை அம்மாவிடம் கூட்டிக்கொண்டு போங்கள் என்று சொன்னார்கள். அம்மா எவ்வளவோ பிரச்சினையில் இருக்கிறார்கள். என்ன சொல்லுங்கள் நான் சொல்கிறேன் என்று சொன்னேன். அதனாலே, குருசாமி அவர்களுடைய மனைவிக்காக, குருசாமி 1996-லே இறந்திருக்கிறார். இந்தச் சட்டம் 1999-லே வந்திருக்கிறது. அதை அம்மையார் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று, நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேமாதிரி Bar. அந்த Bar-ஐக் கொண்டு வந்ததற்கு பலவிதமான கருத்துகளைச் சொன்னாலும்கூட, என்னைப் பொறுத்தவரையிலும் நான் சொல்வேன், Bar வைத்தால் அரசாங்கத்திற்கு அந்தப் பணம் வரும். இவ்வளவு நாள் பிராந்திக் கடையைக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், Bar நடந்துகொண்டுதான் இருந்தது. அந்தப் பணம் உங்களுக்கு வரவில்லையென்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணம் கடைக்காரன் யாருக்குக் கொடுத்தானோ, கொடுக்கின்றவன் கையிலே கொடுத்தான். Bar நடத்திக்கொண்டேயிருந்தான். இப்பொழுது அரசாங்கமே அந்த Bar-ஐ, நடத்துவதற்கு உரிய உத்தரவைப் போட்டு, அந்தப் பணம் அரசாங்கத்திற்கு வந்து, அதன் மூலமாக, நல்ல வருமானத்தைப் பெற்று நலப் பணிகள் செய்வதற்கு உதவியாக இருக்கவேண்டும். மொத்தத்திற்கு சொன்னால், இந்த மது யாராலே தமிழகத்திற்குள்ளே வந்தது? குஜராத்திலும் தமிழகத்திலும்தான் மது இல்லாமல் இருந்தது. அப்படி இருந்த இந்த மதுவை தமிழகத்திற்குள்ளே கொண்டு வந்தவர்கள் இன்றைக்கு அதைப்பற்றி கருத்து கூறுகின்றபோது, வருத்தமாக இருக்கிறது.

பிற்பகல் 12-30

மறைந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கொட்டும் மழையில் குடை பிடித்துக்கொண்டு போய், கோபாலபுரத்திலே போய் சொன்னார், இந்தப் பாவமான காரியத்தைச் செய்யாதீர்கள் என்று சொன்னார், கேட்கவில்லை. அன்றைக்குக் கொண்டு வந்தார்கள். அன்றைக்குக் கொண்டு வந்ததன் காரணமாக ஒரு ஜெனரேஷனே அன்றைக்கு குடி என்றால் என்ன என்று தெரியக்கூடிய நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆகவே, நான் இப்பொழுதும் கூட சொல்கிறேன். அரசுக்கு Bar மூலமாக வருமானம் வருகிறது என்று சொன்னால் அதைப் பயன்படுத்திக் கொள்வதிலே தவறு இல்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 5] [திருமதி டி. யசோதா]

பட்டுப் புடவை மூவாயிரம் ரூபாய். ஒரு சவரன் நகை மூவாயிரத்திற்கு மேலேதானம்மா போகிறது. அம்மா, பட்டுப் புடவைக்கும், இந்த நகைக்கும், அரிசி, கோதுமை, வெல்லம், மிளகு இவற்றிற்கெல்லாம் நீங்கள் போடுகிற வரியை வேறு எதிலேயாவது போடுங்கள். மூவாயிரம் ரூபாய்க்கு பட்டுப் புடவைக்கூட இல்லையே அம்மா. சாதாரண ஒரு ஏழை கூட கல்யாணத்திற்குப் போனால் பட்டுப் புடவை — 3 ஆயிரம் ரூபாய் என்றால், அதற்கு 30 ரூபாய் வரி ஆகிறது. அதேபோல ஒரு சவரன் நகையின் விலைகூட மூவாயிரத்திற்கு மேலேதான் போகிறது. மூவாயிரம் ரூபாய்க்குக் கம்மியாக இல்லை. அதையெல்லாம் தாயுள்ளத்தோடு நீங்கள் நிச்சயமாகப் பரிசீலிப்பீர்கள் என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

தாட்கோவிற்கு ஒரு பாவமான சூழ்நிலை. ஆயிரம் துப்புரவுப் பணியாளர்கள் குழுவிற்கு, ஒரு குழுவிற்கு ரூபாய் 4 இலட்சம் வீதம் 36 கோடி ரூபாய் வருகிறது. ஆனால் அதை பாங்கில் போடுகிறார்கள். வட்டிக்காக. அதைப் போடும்போது, அதிகாரிகளுக்கு இந்த பாங்குகாரர்கள் கமிஷன் கொடுக்கலாம். அதற்கு வாய்ப்பு இருக்கிறது. கொடுக்கிறார்களோ இல்லையோ? ஆனால் வட்டியும் வருகிறது. இதுபோன்ற சூழ்நிலையில் உண்மையான துப்புரவுப் பணியாளர்களுக்கு அந்தப் பணம் ஆண்டுதோறும் கிடைக்கவில்லை. நீங்கள் அதற்கென்று C.B.C.I.D. மாதிரி ஏதாவது ஒரு Squad போடுங்கள். எல்லாவற்றையும் இப்பொழுது பரிசீலித்துத்தான் ஆக வேண்டும். அதனாலே என்ன என்ன பணிகள், சரியாக நடக்கின்றது என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். அதுபோன்ற கடனையெல்லாம் இப்போது வங்கிக்கு அனுப்புவதை விட 'தாட்கோ' மூலமாகவே கொடுப்பதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டும்.

சிறுசேமிப்பு வட்டி குறைந்தால், சேமிப்பும் குறையும் சூழ்நிலையில் இருக்கிறது. சிறுசேமிப்பின் வட்டி குறைந்தால் போடுகிறவன் போடமாட்டான். போடாது இருக்கிற அந்தப் பணத்தை நமக்குக் கொடுக்கிறேன் என்கிறார் நமது நிதியமைச்சர். அதனால் நாம் மத்திய அரசாங்கத்திடம், நம்முடைய உரிமைகளை எந்தக் காலக்கட்டத்திலும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் நாங்கள் கேட்கவில்லை. நீங்களாகவே பெருந்தன்மையோடு கொடுத்தீர்கள். கொடுத்தவனோ

பறித்துக் கொண்டான் என்பது போல திருப்பி அதையும் நீங்கள் வாங்கி விட்டீர்கள். அதனால் ஒரு காரியம் நீங்கள் செய்வதற்கு முன்னால் ஒரு தடவைக்கு இரண்டு தடவை யோசித்துப் பார்ப்பதில் தப்பே இல்லை. ஏனென்றால் இல்லாத நேரத்திலே நாம் இங்கே வந்து உட்கார்ந்து இருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக உட்கார்ந்து இருக்கிறோம். அதனாலே நான் அதற்காக சொல்லவில்லை. (குறுக்கீடு) நிறுத்தவில்லை நீங்கள், ஒத்திவைத்திருக்கிறீர்கள். இந்த வருடம் இல்லை, அடுத்த வருடம் என்று. ஒரு முறை நீங்கள் announce பண்ணுவதற்கு முன்னால், ஒரு முறைக்கு இரண்டு முறை யோசித்துப் பார்த்து அதைப் பண்ணீர்கள் என்றால் நன்றாக இருக்கும்.

இரண்டாவது, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதி, 50 இலட்சத்திற்கு நீங்களே வேலை கொடுத்துவிட்டீர்களேயானால், நாங்கள் 30 இலட்சத்திலே மக்களுக்குக் கொடுத்திருக்கிற வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை எங்களுக்கு ஏற்படுகிறது. அம்மா, நீங்கள் அதையும் பார்க்க வேண்டும்.

அதே மாதிரி, குளச்சல் துறைமுகம் வெளிநாட்டு உதவியுடன் நீங்கள் கொண்டு வருவதை நான் இந்த நேரத்திலே பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓசூரிலே பூ ஏற்றுமதி செய்வதற்கு சொல்கிறீர்கள். எங்கள் எம்.எல்.ஏ., சொன்னார், 'அம்மாவிற்கு நன்றி சொல்லிவிடுங்கள்' என்று திரு. கோபிநாத் சொன்னார். நன்றி சொல்லுகின்ற அதே நேரத்தில், அதை பெங்களூர் ஏர்போர்ட்டிலே நீங்கள் கொண்டு போனீர்களென்றால், அந்த ஏர்போர்ட்டின் செலவினங்கள் அத்தனையும் அந்த அரசிற்குப் போய்விடும். நம் ஏர்போர்ட்டிலே அதை ஏற்றுமதி செய்வதற்கு நல்ல ஒரு திட்டத்தை நீங்கள் தீட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பேப்பரிலே நேற்று வருந்திருக்கிறது. 'குன்றத்தூர் சாலை படு மோசம், பக்தர்கள் அவதி' என்று வந்திருக்கிறது. இந்தச் சாலை இரண்டு வருடங்களுக்கு முன்னாலேதான் போடப்பட்டிருக்கிறது. இரண்டு வருடங்கள்கூட முழுமையாகவில்லை. பல இலட்சக் கணக்கான ரூபாய் செலவு பண்ணி இந்த ரோடு போடப்பட்டிருக்கிறது. அந்த ரோடு இப்பொழுது ரோடு மாதிரியே இல்லை. 'எத்தனையோ மேடு பள்ளம் வழியிலே நம்மை இடற வைத்து தள்ளப் பார்க்கும் குழியிலே' என்ற



நிலையிலேதான் அந்த ரோடு இருக்கிறது. அந்த கான்ட்ராக்ட்காரர்கள் யார் என்பதைப் பார்த்து அவர்களிடம் ஏன் இந்த ரோடு இரண்டு வருடம் வரைகூட தாங்கவில்லை என்பதையும் பரிசீலனை செய்து....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யசோதா, இன்னும் இரண்டு தலைவர்கள் பேச வேண்டும்.

**திருமதி டி. யசோதா:** இதோ முடித்து விடுகிறேன். அதன் மேலேயும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி மாவட்டத்திலுள்ள சுமார் 65 ஆயிரம் சிறு விவசாயிகள் கடந்த 2 வருடங்களாக அவர்கள் உற்பத்தி செய்யும் பச்சைத் தேயிலை.......

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குன்றத்தூர், திருநீர்மலை சாலையைப் பற்றிய விவரங்களைச் சொன்னார்கள். அந்தச் சாலை, கிட்டத்தட்ட 4.2 கிலோ மீட்டர் தூரத்திற்கு, 1997 ஆம் ஆண்டு போடப்பட்ட சாலை. அந்தச் சாலையில் லாரி போக்குவரத்து அதிகமாக உள்ளதால், அச்சாலை அடிக்கடி பழுதடைந்து வருகிறது. அதனால், அந்தச் சாலையில் ஏற்படும் மேடு பள்ளங்கள் அவ்வப்போது சரி செய்யப்பட்டு வருகின்றன. கூடியவிரைவில், அந்தச் சாலை போடப்படுவதற்கு, அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்திலே உள்ள சுமார் 65 ஆயிரம் சிறு விவசாயிகள் கடந்த இரண்டு வருடங்களாக, அவர்கள் உற்பத்தி செய்யும் பச்சைத் தேயிலைக்கு, ஒரு கிலோ பச்சைத் தேயிலைக்குக் குறைந்தபட்சம் ரூ.15 நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று போராட்டம் நடத்தி வருகிறார்கள். இப்போதும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, உரையை முடித்து விடுங்கள்; 40 நிமிடங்களுக்கு மேலாகிவிட்டது.

[2002 ஏப்ரல் 5

**திருமதி டி. யசோதா:** முடித்து விடுகிறேன். இப்போது, ஒரு கிலோ பச்சைத் தேயிலைக்கு 5 ரூபாய் மட்டும் பெற்று வருகிறார்கள். இந்த வருட நிதிநிலை அறிக்கையில், பத்தி 67-இல் இதுகுறித்து குறிப்பிட்டிருக்கிறீர்கள். இப்போது மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிற அந்த விவசாயிகள், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் பதிலை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், அந்த விவசாயிகளினுடைய துன்பத்தை நிவர்த்தி செய்யும் வகையில், கட்டுப்படியான விலை குறித்து நல்ல அறிவிப்பினை அறிவித்து உதவுமாறு, நீலகிரி மாவட்ட விவசாயிகளினுடைய சார்பாக, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலே, நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துகளைச் சமர்ப்பிப்பதற்கு, எனக்கு வாய்ப்பினைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறக்கூடிய பொது விவாதத்திலே கலந்துகொண்டு பேச வாய்ப்பளித்தத் தங்க்ளுக்கு என்னுடைய அன்பார்ந்த நன்றியை முதலில் நான் தெரிவித்துக்கொண்டு, 2002-2003 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கை என்பது, ஓர் அரசாங்கத்தினுடைய வரவு-செலவுக் கணக்குகளைத் தெரிவிக்கக்கூடிய அறிக்கை. வரவுக்கும் செலவுக்குமான இடைவெளிதான் பற்றாக்குறை என்பது. ஆகவே, மாநில அரசுகளைப் பொறுத்தவரையிலே, ஏன், இன்னும்கூட சொல்லப்போனால், மத்திய அரசும்கூட, இதுவரையிலே தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கைகளிலே பற்றாக்குறை பட்ஜெட்டைத்தான் தாக்கல் செய்து கொண்டிருக்கின்றன என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட அணுகுமுறை என்பது, பற்றாக்குறை பட்ஜெட்டை கைவிட்டாலொழிய, கஜானா காலி என்ற நிலைமை தொடர்ந்து இருந்து கொண்டேதான் இருக்கும் என்பதை இங்கே நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்தச் சூழ்நிலையிலே, இப்படி



2002 ஏப்ரல் 5] [திரு. ஜி. கே. மணி]

பற்றாக்குறை வராமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், வரவுக்குள் அடக்கிய செலவுகள் இருக்க வேண்டும், அல்லது திட்டங்கள் அதிகமாக வருமென்று சொன்னால், பற்றாக்குறை நிச்சயமாக வந்தாகும் என்ற காரணத்தினாலேதான், இந்த நேரத்திலே வருவாய் ஆதாரங்களைப் பெருக்குகின்ற வகையிலே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு, நிதி சீர்திருத்தங்களைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். அப்படி அவர் சொல்லக்கூடிய சீர்திருத்தங்களிலே, சிலவற்றை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் நலனிலே அக்கறை கொண்டிருக்கக்கூடிய ஓர் அரசு என்பது, சமூக வளர்ச்சியோடு கூடிய பொருளாதார முன்னேற்றத்திற்கான அடிப்படையிலே, அதிலும் குறிப்பாக, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, குடியிருக்க வீடு ஆகியவற்றை மையமாக வைத்து, அனைவருக்கும் ஒரே தரமான இலவச கட்டாயக் கல்வி, ஜனாதிபதிக்குக் கிடைக்கக்கூடியதுபோல, சாதாரண ஒரு குடிமகனுக்கும் கிடைக்கக்கூடிய சுகாதார வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், வேலையில்லாத் திண்டாட்டம் போக்கி வறுமை ஒழித்தல், விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசு சார்பு நிறுவனத் தொழிலாளர்கள், ஆலைத் தொழிலாளர்கள், வியாபாரிகள், கூலித் தொழிலாளர்கள் போன்ற அனைத்துத் தரப்பினரின் மேம்பாட்டுக்காக வழிவகை செய்யக்கூடியதுதான் இந்த நிதிநிலை அறிக்கை. ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்படுகின்றபோது, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், Primary Sector என்று சொல்லக்கூடிய ஆதாரத் துறை, Secondary Sector என்று சொல்லக்கூடிய தொழில் துறை, Service Sector என்று சொல்லக்கூடிய சேவைத் துறை, ஆக இவற்றை மையமாக வத்து நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இங்கு தயார் ·யதி ருக்கிறார்கள்.

பிற்பகல் 12-40

இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி பேசுகின்ற நேரத்திலே, இதற்கு மு ன்னாலே நம்முடைய மரியாதைக்குரிய திரு. வி.பி. சிங் அவர்கள் மத்திய அமைச்சராக இருந்த நேரத்திலே, நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு, ஒரு Draft Budget எனறு சொல்லக்கூடிய வரைவு நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தார்கள். அதைப்போலவே, ஆந்திராவினுடைய முதலமைச்சராக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய

ந. சந்திரபாபு நாயுடு அவர்களும், சமீபத்திலே ஒரு வரைவு நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தார்கள். அதையெல்லாம் மனதிலே வைத்துத்தான் பாட்டாளி மக்கள் கட்சி சில தினங்களுக்கு முன்பு அரசுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய வகையிலே, அரசு ஆக்கப் பூர்வமான திட்டங்களைத் தீட்டுவதற்காக, இதுவரை தமிழ்நாட்டிலே எந்த அரசியல் கட்சியும் செய்யாத வகையிலே ஒரு வரைவு நிதிநிலை அறிக்கையை தயாரித்து, அதை அரசு எந்தவகையிலே தயாரிக்குமோ, அந்தவகையிலே, எல்லாத் துறைகளையும் உள்ளடக்கி, வருமானத்திற்குண்டான ஆதாரங்களைச் சொல்லி அந்த பட்ஜெட் தயாரிப்பதற்குண்டான அனைத்து அம்சங்களையும் சொல்லி தயாரித்து இருக்கிறோம்.

அதேநேரத்திலே இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புவது, நம்முடைய அரசாங்கம், பட்ஜெட் தயாரிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, சட்டமன்றத்தைக் கூட்டி, சட்டமன்ற உறுப்பினர்கள் மேஜையிலே வைக்கப்பட வேண்டிய சில அறிக்கைகளை வைத்து, அதற்குப் பின்னர் இந்த பட்ஜெட்டை தாக்கல் செய்தால் பொருத்தமுடையதாக இருக்கும் என்று நான் எங்கள் கட்சியின் சார்பிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த அறிக்கை என்னவென்று சொன்னால், Economic Survey-அதாவது தமிழகத்தில் நிலவும் பொருளாதார நிலையை உணர்ந்துகொள்ளும் முறையில் ஒரு பொருளாதார ஆய்வு அறிக்கை; இரண்டாவது, Subsidies; Subsidies in the budget—பட்ஜெட்டில் சொல்லக்கூடிய மானியங்கள்; மூன்றாவது, Performance of the State Public Sector Enterprises, மாநில அரசின் ஒவ்வொரு பொதுத் துறை நிறுவனம் பற்றிய செயல்பாடுகள் அடங்கிய ஆய்வு அறிக்கை; நான்காவது மிக முக்கியமானது, Action Taken Report ஒவ்வோர் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப்படும் கொள்கைகள், திட்டங்கள் எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டன; அதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை. இப்படி, இந்த அறிக்கைகளை வைத்துவிட்டு, அதற்குப் பிறகு பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்று சொன்னால், அது பொருத்தமுள்ளதாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணத்திற்கு அரசாங்கத்திற்கு ஒரு ரூபாய் வரவு என்று சொன்னால், அந்த ஒரு ரூபாயை எந்த வகையிலே செலவு செய்கிறோம் என்ற நிலையை ஒளிவு மறைவு இல்லாமல், transparency என்று



சொல்லுகிறோமே, அதைப்போல இந்த நாட்டு மக்கள் எல்லோரும் உணர்ந்துகொள்ளும் வகையிலே செய்யக்கூடிய அரசு என்று மக்கள் பாராட்டக்கூடிய அரசாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அப்படி சொல்கின்ற நேரத்திலே 2002-2003 ஆம் ஆண்டில் நம்முடைய மாநில அரசின் மொத்த வருவாய்ச் செலவு ரூ.26,861.54 கோடி; வருவாய் வரவுகள் ரூ.20,628.32 கோடி, இதன் விளைவாக வருவாய் பற்றாக்குறை என்பது 6,233.22 கோடி என்றும், அடுத்த நிதியாண்டில் அரசின் நிதிப் பற்றாக்குறை ரூ.8,895.04 கோடியாக இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, இந்த வருவாய் பற்றாக்குறையையும், நிதிப் பற்றாக்குறையையும் பார்க்கின்ற நேரத்திலே நம்முடைய தமிழக வரலாற்றிலே இதுவரையிலும் இல்லாத அளவிற்கு பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட பற்றாக்குறையைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பற்றாக்குறை, அரசுக்கு வருவதாக நாம் சொல்கிறோம். அப்படி அரசுக்கு வருவதாகச் சொல்லக்கூடிய அதேநேரத்திலே நான் சில தினங்களுக்கு முன்பு என்னுடைய நண்பர் ஒருவரை அழைத்து உங்களுடைய மாத வருவானம் எவ்வளவு, மாதச் செலவு எவ்வளவு, ஏதாவது பற்றாக்குறை இருக்கிறதா என்று சொல்லிக் கேட்டேன். அவர் கொடுத்த பட்டியலை நான் இங்கே சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு. 5 நபர்களைக் கொண்ட நடுத்தரக் குடும்பத்தின் மாதாந்திர பட்ஜெட்; அதிலே அவர் கொடுத்தது மிகக் குறைந்த அளவிலே செலவுகளையும் குறைத்துச்சொல்லி இருக்கிறார்.

பிற்பகல் 12-45

உதாரணத்திற்கு அரிசி 45 கிலோ, ரேஷன் அரிசி இல்லை; ஒரு கிலோ அரிசி விலை 10 ரூபாய்; மிகக் குறைத்து சொல்லி இருக்கிறார்; 16, 18 ரூபாய்க்கு அரிசி விற்கிறது; இருந்தாலும்கூட 10 ரூபாய் என்று போட்டு இருக்கிறோம்; அரிசி 45 கிலோவுக்கு 450 ரூபாய்; இது எப்போது என்று சொன்னால் கடந்த ஆண்டு ஏப்ரல் மாத காலத்திலே; இப்போது ரூ.495. கடலைப் பருப்பு ஒரு கிலோ ஒரு மாதத்திற்கு ஒரு கிலோ ரூ.27. இப்போது 28. துவரம் பருப்பு 3 கிலோ 78 ரூபாய், தற்போது 84 ரூபாய், உளுத்தம் பருப்பு 3 கிலோ ரூ.78, 84 ரூபாய்,

தனியா ஒரு கிலோ 22 ரூபாய்; 23 ரூபாய். மிளகாய் அரை கிலோ 14 ரூபாய்; ரூ. 16 சீரகம் 200 கிராம் ரூ.18; 18 ரூபாய். கடுகு 100 கிராம், ரூ.18.50; 22.00 ரூபாய். நல்லெண்ணெய் 3 லிட்டர் ரூ.140; 144 ரூபாய். தேங்காய் எண்ணெய் அரை லிட்டர் ரூ.21; 25 ரூபாய், டூத் பேஸ்ட் 200 கிராம், ரூ.50; ரூ.56. டூத் பிரஷ், மீடியம் சைஸ்-5, ரூ.50; 55 ரூபாய். துணி சோப்-5, ரூ.70; ரூ.70.50. குளியல் சோப்-5, ரூ.45; ரூ.50.50. சர்ப் அரை கிலோ ரூ.38; ரூ.44. சர்க்கரை 5 கிலோ ரூ.65; ரூ.67.50 பால் 45 லிட்டர் ரூ.540; 630 ரூபாய். காய்கறிகள் 7 கிலோ ரூ.77; ரூ.84. வெங்காயம் 5 கிலோ ரூ.96; ரூ.100. தக்காளி 7 கிலோ ரூ.56; ரூ.70. தேங்காய் பத்தை ரூ.45; ரூ.50. பஸ் கட்டணம் ரூ.768; ரூ.1440. மின் கட்டணம் மாதம் ரூ.270; 350 ரூபாய். வீட்டு வாடகை ரூ.1,700; ரூ.2,000. கேபிள் டி.வி. கட்டணம் ரூ.150; ரூ.180. சிலிண்டர் ரூ.235; ரூ.270. ஆகவே ஒரு மாதத்திலே 2001 ஏப்ரல் மாதத்தைவிட 2002 ஏப்ரல் மாதத்தில் ஒரு நடுத்தரக் குடும்பத்தின் பட்ஜெட் ரூ.5,000 அநுமானம் என்று சொன்னால் அவருக்கு ரூ.1,342 அதிகச் செலவு ஏற்பட்டிருக்கிறது. ஒரு நடுத்தரக் குடும்பத்தின் பட்ஜெட் அதிகம் செலவு ஏற்பட்டது ரூ.1,342. மொத்தச் செலவு 5,120 ரூபாய் 50 காசு.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தினுடைய நிலவரப்படி செலவு ரூ.5,121.50. நடப்பு ஆண்டு, இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தினுடைய செலவு மொத்தம் ரூ.6,463. ஆக, கடந்த ஆண்டு ஒரு மாதத்திற்குக் கூடுதல் செலவு, பற்றாக்குறை என்பது ரூ. 121.50. இந்த ஆண்டு அவருக்குப் பற்றாக்குறை என்பது ரூ.1,463 இப்படி ஒரு மாதத்திற்கு ஒரு குடும்பத்திற்குப் ஒரு நடுத்தரக் குடும்பத்திற்கு, ரூ.1,463 பற்றாக்குறை என்று சொன்னால், இப்படி ஒவ்வொரு குடும்பமும் இந்த நாட்டிலே பற்றாக்குறையாகப் போய்க் கொண்டு எல்லாத் தரப்பு மக்களும் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற அந்தச் செய்தியைச் சொல்கிறேன். நானேகூட அங்கே கேட்டேன், உப்பு குறித்து மட்டும் நீங்கள் சொல்லவில்லையே என்று கேட்டேன். அவர் சொன்னார், நீங்கள் பட்ஜெட் போட்டீர்கள், நாங்கள் எல்லாம் ரொம்ப எதிர்பார்த்தோம். எங்களுக்கு ஏமாற்றமாக இருக்கிறது. உப்பு சப்பு இல்லாத காரணத்தாலே நான் உப்பைப் பற்றியே சொல்லவில்லை என்று சொல்லிவிட்டார். ஆகவே, அந்த அளவுக்கு இந்த வரி உயர்வு என்பது எல்லாத் தரப்பு மக்களையும் கடுமையாகப் பாதித்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



ஓர் அரசு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்கிற நேரத்தில், வள்ளுவர் இந்த அரசாங்கத்திற்கு இலக்கணமாகச் சொன்னது,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

வள்ளுவர் சொன்னது, ஓர் அரசாங்கத்திற்கு வருவாய் ஆதாரத்தைப் பெருக்குவது, அப்படிப் பெருக்கிய அந்த வருவாயை ஒரு வழியில் சேர்த்தல், சேர்த்த அந்தப் பொருளைப் பாதுகாத்தல், பாதுகாத்த அந்தப் பொருளாதாரத்தை எல்லோருக்கும் பகுத்து, சரியான முறையில் விநியோகிப்பதுதான் ஒரு சிறந்த அரசினுடைய கடமையாகும் என்று சொல்கிறார். ஆகவே, அந்த வகையிலே இப்படி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு, அதைச் செலவிடுவதற்கு வரி வருவாயே போதும் என்று நாம் நினைத்து விடக்கூடாது. அந்த வரி வருவாயைப் பெருக்குவதற்குக்கூட நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். ஆக, அப்படிச் சொன்ன பேரறிஞர் அண்ணா அவர்கள், ராஜ்யசபையிலே வேறு ஒன்றையும் சொல்கிறார். "வருவாயைப் பெருக்க மக்கள் தாங்க முடியாத வரி செலுத்தும்படி நிதி அமைச்சர் ஒருவித மகிழ்ச்சியுடன் கேட்கிறார். ஆனால் மக்கள் அடைகிற துன்பங்களை அவர் உணரவில்லை. வேதாந்திபோல பேசுகிறார்"— இதை நான் சொல்லவில்லை. அண்ணா அவர்கள் சொன்னது — "பணம் படைத்தவர்களிடமிருந்து அதிக வரியைப் பெற வேண்டும். இதுதான் ஏழைகள் அதன் மூலமாக முன்னேற்றம் அடைய வேண்டும். இதுதான் எங்களுடைய சமதர்மக் கொள்கை" என்று பேரறிஞர் அண்ணா அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அதன் காரணத்தாலே இப்படி வருவாய் ஆதாரத்தைப் பெருக்குவதற்கு வரியை மட்டுமே கொள்ளாமல், மற்ற வகைகளிலே ஆதாரங்களைப் பெருக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் நிறைய வரியைப் பற்றி பேச உள்ளே போக வேண்டி இருக்கும். காலத்தினுடைய அருமையைக் கருதி அந்த வரி ஆதாரங்களைப் பற்றி எல்லாம் அதிகமாக நான் உள்ளே போகவில்லை. இன்னொன்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டதையெல்லாம் நீங்கள் நிச்சயமாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

உதாரணத்திற்கு கடந்த 2001-02 ஆம் ஆண்டு பட்ஜெட்டிலே பல்வேறு அறிவிப்புகளையெல்லாம் நீங்கள் வெளியிட்டீர்கள். நாங்கள் எல்லாம் மகிழ்ச்சி அடைந்தோம். அரசு நிச்சயமாக நிறைவேற்றும். நல்ல அறிவிப்புகளை சொல்லி இருக்கிறது என்று எதிர்பார்த்தோம். இருந்தாலும்கூட கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்ட நிறைய காரியங்கள் இதுவரையிலே நிறைவேற்றப்படாமல் விடுபட்டு இருக்கின்றன.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள், விலைவாசி உயர்வைப் பற்றி அவர் கூறுகிறபோது, 155 ரூபாய் என்ற நிலை, ஆயிரத்து சொச்சம் ரூபாய் என்று உயர்ந்து, கிட்டத்தட்ட 700, 800 சதவிகிதம் விலை உயர்வு ஏற்பட்டது என்ற புள்ளி விவரங்களை தந்தார். அது உண்மைக்கு மாறான புள்ளி விவரம் ஆகும். Data Centre மூலமாக் இருக்கின்ற தகவலை நான் அவைக்குத் தருவது என் கடமை எனக் கருதுகிறேன். 5-11-2001, அதாவது ஆரம்ப நேரத்திலே 2001-லே மஞ்சள் ஒரு கிலோ 35 ரூபாய் என இருந்தது. தற்போதைய விலையும் அதே 35 ரூபாயில்தான் இருக்கிறது. துவரம் பருப்பு இரண்டாவது இரகம் 2001-லே 27 ரூபாயாக இருந்தது, தற்போது 25 ரூபாயாக, 2 ரூபாய் குறைந்து இருக்கிறது. கடலைப் பருப்பு 28 ரூபாயாக இருந்தது. தற்போது 25 ரூபாயாக குறைந்து இருக்கிறது. உளுத்தம் பருப்பு இரண்டாவது இரகம் 32 ரூபாயாக இருந்தது, தற்போது 30 ரூபாயாக குறைந்து இருக்கிறது.

இன்றுகூட மைய அமைச்சர் அவர்கள் விட்டிருக்கிற ஓர் அறிக்கையில் உற்பத்தி அதிகமாகி இருக்கிற காரணத்தால் விலைச்சரிவு உணவுப் பொருளில் ஏற்பட்டிருப்பதாகக்கூட ஒரு தகவலைச் சொல்லி இருக்கிறார். நல்லெண்ணெய் 40 ரூபாயாக இருந்தது. அது தற்போது 42 ரூபாயாக உயர்ந்து இருக்கிறது. Wholesale 42 rupees; Retail 52 rupees - 52 ரூபாய் என இருக்கிறது. அதைப்போலவே ரேடியோ ஆயில் 2001-லே 47 ரூபாய் 50 பைசாவாக இருந்தது, தற்போது அது 49 ரூபாயாக இருக்கிறது. ஒன்றரை ரூபாய் அதிகமாக இருக்கிறது. கடலை எண்ணெய் 40 ரூபாயாக இருந்தது 2001-லே, தற்போது 42 ரூபாயாக இருக்கிறது. பாமாயில் 31 ரூபாய் 50 காசாக இருந்தது, தற்போது அது 34 ரூபாயாக இருக்கிறது. தேங்காய் எண்ணெய் 50 ரூபாயாக இருந்தது, தற்போது 52 ரூபாயாக இருக்கிறது. பூண்டு 45 ரூபாயாக இருந்தது, தற்போது 48 ரூபாயாக இருக்கிறது. மிளகாய் 29 ரூபாயாக இருந்தது,



தற்போதும் அதே 29 ரூபாயாக இருக்கிறது. ஆந்திரா மிளகாய், ஆந்திரா வழி மிளகாய் 33 ரூபாயாக இருந்தது தற்போது 29 ரூபாயாக நான்கு ரூபாய் குறைந்திருக்கிறது. பொன்னி அரிசி 19 ரூபாயாக இருந்தது. தற்போது 18 ரூபாயாக குறைந்திருக்கிறது. ஒன்றாவது இரகம். பொன்னி இரண்டாவது இரகம், புழுங்கல் 19 ரூபாயாக இருந்தது, 16 ரூபாயாக குறைந்திருக்கிறது. மூன்று ரூபாய் குறைந்திருக்கிறது. இட்லி அரிசி பொன்னி 11 ரூபாயாக இருந்தது. அதே 11 ரூபாயாக இருக்கிறது. அரிசி சிறுமணி 13 ரூபாயாக இருந்தது, அதுவும் 13 ரூபாயாக இருக்கிறது.

இப்படி நான் இதைச் சொல்வதற்கு காரணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவல் தவறான தகவல் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகச் சொல்லுகிறேன். நான் அரசினுடைய Data Centre மூலமாக உள்ள தகவலைத் தங்களுக்குத் தருகிறேன். நீங்கள் நினைப்பதைப் போல், அல்லது நீங்கள் கூறுவதைப் போல், விலைவாசி உணவு தானியங்களில் அந்த அளவுக்கு உயரவில்லை. அந்தப் புள்ளி விவரங்களும் தவறான புள்ளிவிவரம் என்பதை அவைக்குச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நீங்கள் பலசரக்கு வாங்குகிற கடையை மாற்றுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் சொன்னதிலே நான் குறைத்துப் போட்டு இருக்கிறேன். அரிசி ரூபாய் 10 ரூபாய்தான் போட்டேன். 16 ரூபாய், 18 ரூபாய், 19 ரூபாய் எல்லாம் குறைந்ததாகச் சொன்னார்கள். அந்த அளவிற்குப் போகவில்லை. அரிசி விலை கடந்த ஆண்டு 10 ரூபாய், இந்த ஆண்டு 11 ரூபாய்தான் போட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது அரிசியிலே 4 வகைகளைச் சொல்லியிருக்கிறேன். உயர்தர வகையிலே சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல், ஏதோ ஒரு retail shop, ஒரு சிறு வியாபார கடையிலே ஒரு கணக்கைக் கேட்டால், அந்த வியாபாரி உற்பத்தி ஆகின்ற உற்பத்தியாளனுக்கும் கிடைக்காமல், நுகர்வோருக்கும் கிடைக்காமல், இடைத் தரகராக அதிக விலையில் விற்கும் ஏதோ சிறு வியாபாரியாக இருக்கலாம். அப்படி ஒரு சிறு வியாபாரி கடையிலே நீங்கள் வாங்கிய கணக்கைச் சொல்கிறீர்கள். ஆணித்தரமாக, அதிகாரபூர்வமாக உள்ள

புள்ளிவிவரங்களை நான் சொல்கிறேன். இதுதான் உண்மை நிலை.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் 1-00 மணிக்குள் உரையை முடித்து விடுங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேச வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** என்னைப் பேச அழைத்ததே 12-40 மணிக்குத்தான். தலைவர் அவர்களே, நான் ஏதோ குற்றச்சாட்டு சொல்வதற்காக, விலையை உயர்த்திச் சொல்வதாக நீங்கள் தயவுசெய்து நினைக்க வேண்டாம். 10 ரூபாய் என்று சொன்னேன். 11 ரூபாய். 10 ரூபாய், 11 ரூபாய்க்கு நல்ல அரிசி கிடைக்கவேயில்லை. அதேபோல, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு இவற்றிற்கெல்லாம், அவர்கள் சொன்ன விலையைவிடக் குறைத்துப் போட்டிருக்கிறேன். 29 ரூபாய், 30 ரூபாய் என்றெல்லாம் சொன்னார்கள். அந்த அளவுக்கு நான் போடவில்லை. அதைவிடக் குறைத்து போட்டிருக்கிறேன். நான் குறைத்துப் போட்டிருந்ததே இவ்வளவு வருகிறதே! இதை நல்லெண்ணத்தின் அடிப்படையிலே சொல்கிறேன். இப்படி விலைவாசி இருக்கின்ற நேரத்திலே பற்றாக்குறை என்பது ஒவ்வொரு குடும்பத்தையும் பாதித்திருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேனே தவிர வேறொன்றும் அல்ல.

அதைப்போலவே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்ட நிறைய திட்டங்கள், அறிவித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணத்திற்கு, வேளாண்-வணிகத் துறை என்ற புதிய துறை ஏற்படுத்தப்படும் என்று நீங்கள் அறிவிப்புச் செய்தீர்கள். இதுவரையிலே அது நிறைவேற்றப்படவில்லை.

நில உச்சவரம்புச் சட்டங்கள் தளர்த்தப்படும் என்று சொன்னீர்கள். இதுவரையில் அதுவும் தளர்த்தப்படவில்லை.

அடுத்து 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்கள் வரும் ஐந்தாண்டுகளில் படிப்படியாக மேம்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. உள்ளபடியே நாங்கள் வரவேற்கிறோம். இது நல்ல திட்டம். இதிலே மாறுபாடே கிடையாது. இருந்தாலும்கூட, அப்படி ஐந்தாண்டுகளில் 20 இலட்சம் எக்டேர் என்று சொன்னால், ஓராண்டில் 4 இலட்சம் எக்டேர் எடுத்திருக்க வேண்டும். ஆனால், இந்த ஆண்டு எடுத்ததாகச்



சொல்வது, உங்கள் கணக்குப்படி 56,627 எக்டேர் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு ஒதுக்கிய தொகையும் இன்னும் முழுமையாகச் செலவு செய்யப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பது, இந்தத் திட்டம் நல்ல திட்டம். பொறுத்தாவது நீங்கள் நிறைவேற்றுங்கள். இருந்தாலும்கூட, இதைப் பணக்காரர்களுக்குக் குத்தகைக்குக் கொடுத்து விடாமல், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் எல்லாம் சொன்னதுமாதிரி, ஏழை எளிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஏழை எளிய மக்களுக்கு, கூட்டுறவுத் துறையிலே, அதுவும் குறிப்பாக, படித்து விட்டு வேலை இல்லாதிருக்கும் இளைஞர்களுக்கு நீங்கள் வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய வகையிலே இதைச் செய்து கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள். ஏழை எளியவர்களுக்குக் கொடுத்தால் அவர்களிடத்திலே நிதி இல்லை. இதைச் செம்மைப்படுத்த முடியாது, சீர்திருத்த முடியாது என்று சொன்னார்கள். ஆனால், மத்திய அரசு, தரிசு நில மேம்பாட்டிற்காக கோடிக்கணக்கிலே உதவியைச் செய்வதற்குக் காத்திருக்கிறது, தயாராக இருக்கிறது. ஆகவே, அந்த நிதி உதவியைப் பெற்று, இதை ஏழை எளிய மக்களுக்கு நீங்கள் குத்தகை அடிப்படையிலே கொடுக்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். நிறைய ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று நான்கூட கேட்டேன். கேட்ட தகவலைத்தான் சொல்கிறேன். நேற்று இரவு தொலைபேசியிலே பேசி விட்டுச் சொல்கிறேன்.

அடுத்து, வெளிநாட்டு நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற, 'தமிழ்நாடு நீர்வரத்துப்பகுதி' மேம்பாட்டு முகவரமைப்பு ஏற்படுத்தப்படும் என்று...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் நேற்று இரவு தான் மத்திய அரசில் உள்ளவர்களோடு தொடர்புகொண்டு தொலைபேசியிலே பேசியதாகச் சொல்கிறார்கள். மத்திய அரசில் என்ன பதில் சொன்னார்கள்? இந்த 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தையும் மேம்பாடு செய்வதற்கு மத்திய அரசு நிதி கொடுப்பதாக உங்களுக்கு உறுதி அளித்தார்களா? தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

[2002 ஏப்ரல் 5

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த தரிசு நிலத்தை மேம்படுத்த வேண்டும் என்று சொன்னால், உடனடியாக நிதியைக் கொடுத்து, அதைச் செம்மைப்படுத்திக் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்ற தகவலைச் சொன்னார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசில் அப்படி பொத்தாம் பொதுவாக, ஒட்டுமொத்தமாக நிதி கொடுக்கிறோம் என்று சொல்லவே மாட்டார்கள். அப்படி எந்தத் திட்டமும் மத்திய அரசில் இல்லை. மத்திய அரசில், தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்கு என்று ஓர் ஒதுக்கீடு செய்திருப்பார்கள். இதை எல்லா மாநிலங்களுக்கும் பிரித்துக் கொடுப்பார்கள். ஆகவே, ஓரளவுதான் நிதி கிடைக்குமே தவிர, இந்த 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களையும் மேம்படுத்துவதற்கு மத்திய அரசிடமிருந்து நிதி பெறமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களால் பெற்றுத்தர முடியும் என்றால் எங்களுக்கு மகிழ்ச்சிதான்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டு நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற 'தமிழ்நாடு நீர்வரத்துப்பகுதி மேம்பாட்டு முகவரமைப்பு' ஏற்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருந்தது. இதுவரையிலே அதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

அடுத்து, நம்முடைய கடல் மண்டலப் பகுதியிலே எல்லை தெரியும் வகையில் வழிகாட்டும் விளக்குடன்கூடிய மிதவைகள் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. இதுவரையிலே அதுவும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது.

வெளிநாட்டில் வாழும் இந்தியத் தமிழர்களின் தொழில் முனைவோர் கூட்டமைப்பு ஏற்படுத்தப்படும் என்று சொல்லி, அதுவும் நிலுவையில் இருக்கிறது.

மகளிர் தொழில் முனைவோருக்கென நான்கு தொழில் பூங்காக்கள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதுவும் இன்னும் தொடங்கப்படவில்லை.



2002 ஏப்ரல் 5] [திரு. ஜி.கே. மணி]

அமரர் எம்.ஜி.ஆர். திரைப்பட நகரை, 'எம்.ஜி.ஆர். அறிவு நகர்' என்று மாற்றியமைக்கும் பெரும் திட்டம் வகுக்கப்படும் என்று சொல்லப்பட்டு, அதுவும் நிலுவையிலே இருக்கிறது.

அதைப்போலவே, மதுரை, காஞ்சிபுரம், தஞ்சாவூர், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் ஒலி-ஒளிக் காட்சிகள் அறிமுகப்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் இன்னும் தொடங்கப்படவில்லை.

உலக அளவில் விளையாட்டில் போட்டியிடும் திறனைக் கண்டறிந்து மாணவர்களை ஊக்குவிப்பதற்காக 8 ஆம் வகுப்பிலிருந்து தொடங்கப்படும் என்ற திட்டம் இன்னும் நிலுவையிலே இருக்கிறது. ஒவ்வொரு அரசு மருத்துவக் கல்லூரியிலும்....

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான திட்டம் வகுக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராகக் கொண்டு குழு அமைக்கப்பட்டு, செயல் வடிவம் பெற்று செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, செயல்பட்டு இருக்கிறது.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கு எல்லா ஆயத்தப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. சிறிய அளவில் இந்தத் தொழிற்பேட்டைகள் இப்போது தயாராகவே உள்ளன. 50 ஷெட்டுகள் கொடுக்கும் அளவுக்கு தயார் செய்திருக்கிறார்கள். இது போதாது என்று நான்தான் சொல்லி நிறுத்தி வைத்திருக்கிறேன். ஆகவே, குறைந்தபட்சம் 500 பேருக்காவது அங்கே தொழிற்கூடங்களைக் கொடுக்கும் அளவுக்கு இந்தத் தொழிற்பேட்டைகள் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். ஓரிரு மாதங்களுக்குள் அந்தப் பணிகள் முடிவடைந்துவிடும். அந்தத் தொழிற்பேட்டைகளை நானே தொடங்கி வைக்க இருக்கிறேன். அந்த விழாவுக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களையும் அழைப்போம். நிச்சயமாக வந்து கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, 'எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்' என்று இருப்பதை, 'எம்.ஜி.ஆர். அறிவு நகர்' என்று மாற்றுவதற்கு M.G.R. Film City என்பதை, M.G.R. Knowledge City என்று அறிவித்திருக்கிறோம். அதையும்

விரைவில் தொடங்குவதற்குப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் எந்தெந்தத் தலைப்பின்கீழ், எந்தெந்தத் திட்டத்தைக் குறிப்பிட்டு, இது இன்னும் நடைபெறவில்லை, நடைபெறவில்லை என்று சொன்னாரோ, எல்லாவற்றுக்கும் ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவிலேயே தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, ஐந்து மணித் துளிகளில் உரையை முடியுங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசவேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** இன்னும் 20 நிமிடங்கள்கூட ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 12-37-க்குப் பேச ஆரம்பித்திருக்கிறீர்கள், பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு முக்கியமான பிரச்சினை. பத்திரிகையாளர்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை என்று சொல்லி, எல்லோரும் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையின் சமயத்திலே, வீடு வாங்க கவர்ச்சிகரமான தவணைத் திட்டம், டி.வி. நிறுவனங்களுக்கு அங்கீகார அட்டைவழங்கல், குடும்ப நல உதவித் தொகை ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து 2 இலட்சமாக உயர்த்துதல், இவை அறிவிக்கப்பட்டு இன்னும் நிறைவேற்றப்படவில்லை என்று சொல்லி, நம்முடைய பத்திரிகைத் துறையைச் சார்ந்தவர்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று இந்த நேரத்திலே அவர்கள் சார்பாக இங்கே வேண்டுகோளாக வைத்து, அவற்றை அவசியம் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிறைய சொல்லவேண்டுமென்று இருந்தாலும், காலத்தின் அருமை கருதி, அவற்றையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டுகோளாக வைத்து, அடுத்து கல்வியைப் பொறுத்தவரையில் இன்று கல்விக்கான மானியங்கள் பெறும் தனியார் மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் மானியங்கள், படிப்படியாகக் குறைக்கப்படும் என்று ஓர் அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறீர்கள். மத்திய அரசாக இருந்தாலும் சரி அல்லது உலகத்தில் இருக்கக்கூடிய எந்த அரசாக இருந்தாலும்கூட, கல்விக்கான நிதியை, சுகாதாரத்திற்கான நிதியை நிச்சயமாகக் குறைக்கமாட்டார்கள். வளர்ந்து வரும்



விஞ்ஞானத்திலே அறிவைப் பெருக்குவதற்கு கல்விக்காகவும், சுகாதாரத்திற்காகவும் அதிகமாக, அதிலும் குறிப்பாக அமெரிக்காவைப் போன்ற வளர்ந்த நாடுகள்கூட கூடுதலாக நிதியை ஒதுக்கிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே நம்முடைய அரசு நிச்சயமாக நிதியை, மானியத்தை குறைக்கக் கூடாது. அப்படி குறைக்கின்ற காரணத்தினாலே இன்று நாட்டு மக்கள் மத்தியிலே மிகப் பெரிய கேள்வி எழுந்திருக்கிறது. என்னவென்று சொன்னால், படிப்படியாக இலவசக் கல்வி பறிபோய்விடுமோ என்ற கேள்விக்குறி இன்றையதினம் எழுந்திருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியை மேம்படுத்துவதற்காக குறிப்பாக ஆரம்பக் கல்வியை அனைவருக்கும் தருவதற்காகப் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. அதற்காக ஆயிரக்கணக்கில் ரூபாயை அதிகமாக இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது. மேல் கல்வி, பல்கலைக்கழகம், உயர்நிலைக் கல்வி படிக்கும்போது, அதைத் தனியார் சிலர் முன்வந்து செயல்படுத்தும்போது, அதை ஊக்குவிக்கும் அடிப்படையில்தான், இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய, அடிப்படைக் கல்வி தமிழகத்தில் வளர்வதற்கு அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேநேரத்திலே கோத்தாரி கமிஷன்கூட தொடக்கக் கல்விக்கு தேர்வு முறை எளிதாக்கப்பட வேண்டுமென்று சொல்கிறது. அப்படி தேர்வு முறையை எளிதாக்கினால்தான் இன்று இருக்கக்கூடிய கிராமப்புற மாணவர்கள், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மலைவாழ், சீர்மரபினர் மாணவர்களெல்லாம் படித்து தேர்ச்சி பெறமுடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே 5-வது வகுப்பிலிருந்து 9-வது வகுப்பு வரை பொதுத் தேர்வு என்று அறிவித்துவிட்டு, அதற்குப் பிறகு, தற்போது 5, 7, 9 வகுப்புகளுக்கு மாவட்ட அளவிலே பொதுத் தேர்வு என்ற முறையும், அந்த மாணவர்களுக்குக் கடுமையான சுமையாக இருக்கும் என்ற காரணத்தால், அதையும் நீங்கள் கைவிடவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி மானியங்கள், நிதி ஒதுக்கீடுகள் என்பது கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மிகவும் குறைவாகவே வழங்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு இந்த நாட்டிலே மிகப் பெரிய எதிர்பார்ப்போடு வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள்

எதிர்பார்த்த ஒன்று என்னவென்று சொன்னால் இலவச வேட்டி, சேலை. கடந்த ஆண்டு அறிவித்துவிட்டு நிறுத்தி வைத்துவிட்டார்கள். ஆனால் இந்த ஆண்டு அதைப்பற்றிப் பேசவும் இல்லை; நிதி ஒதுக்கவும் இல்லை. ஆகவே, இது மிகப்பெரிய ஏமாற்றத்தைக் கொடுக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதைப்போல விவசாய உற்பத்திக்கு ஊக்கத் திட்டம் என்று அதற்கு நிதி ஒதுக்கவே இல்லை. உணவு மானியம் 300 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. உணவு மானியம் 300 கோடி ரூபாய் குறைக்கப்பட்டு, அரிசிக்கு வரி இரண்டு சதவீதம் என்று சொன்னால், இதையெல்லாம் ஏழை மக்கள், சாதாரண மக்கள் மிகக் கேள்விக்குறியோடு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஆறுதலான பதிலை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னவென்று சொன்னால், இந்த ரேஷன் அரிசி நிச்சயமாக விலை உயர்த்தப்பட மாட்டாது. அதுவரையிலே மக்களுக்குத் திருப்தி. அப்படித் திருப்தியாக இருந்தாலும்கூட இன்றும் மற்ற அரிசிக்கு, கடைகளிலே வாங்கக்கூடிய அரிசிக்கு இரண்டு சதவீதம் வரியென்று சொன்னால், அதை நான் மாத்திரம் அல்ல, எல்லாக் கட்சி உறுப்பினர்களும் தனிப்பட்ட முறையிலே கேட்டால் அனைவரும் ஒத்துக்கொள்வார்கள். நாட்டுமக்கள் எதிர்பார்க்கிறார்கள். நான் மாத்திரமல்ல. அதிலேகூட முதலமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே, இது மக்களைப் பாதிக்காது...

பிற்பகல் 1-05

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசிக்கு இரண்டு சதவீதம் விற்பனை வரி விதித்து இருக்கிறோம் என்று சொன்னால் first point sales-க்கு மட்டும்தான் அந்த விற்பனை வரி. முதற்கட்ட விற்பனைக்கு மட்டும்தான். அதாவது, அரிசி ஆலை அதிபர்கள், அதை விற்கின்றபோது, அப்போதுதான் அந்த இரண்டு சதவீதம் வரி விதிக்கப்படும். பிறகு, second point sales, கடைகளில் விற்பனை செய்யும்போது விற்பனை வரி கிடையாது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைத்தான் சொன்னார்கள். இருந்தாலும்கூட, அந்த மில் உரிமையாளர்களே சொல்லியிருக்கிறார்கள், பத்திரிகையிலே. முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் வைத்து விளம்பரம் கொடுத்திருக்கிறார்கள். இந்த வரி என்பது மில் உரிமையாளர்களுக்கு மாத்திரமல்ல. இதைப் பயன்படுத்தக்கூடிய பொதுமக்களுக்கும் விலைவாசி கூடுதலாவதற்கு



வாய்ப்பாக இருக்கும். ஆகவே, குறைக்கவேண்டுமென்ற விளம்பரத்தைப் பத்திரிகையிலே கூட கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த உயர்வு என்பது நாளடைவிலே எல்லோரையும் பாதிக்கும் என்ற காரணத்தினாலே அதை நீங்கள் நிச்சயமாகத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று சொல்லி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அப்புறம், விவசாய மின்சக்தி உதவித் தொகை. 250 கோடி ரூபாய் இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த மின்சாரத்திலே நிறைய இழப்பு; திருட்டு transmission இழப்பு என்று சொல்கிறோம்-விநியோக இழப்பு. இது 5,000 கோடியென்றும் 9,000 கோடிஎன்றெல்லாம் பலவாறாகக் கணக்கிட்டுச் சொல்லப்படுகிறது. இது எப்படி இருந்தாலும்கூட, இந்த இழப்பீட்டை நாம் நிச்சயமாகத் தவிர்த்தாக வேண்டும். இது அதிகாரிகள் செய்யக்கூடிய மிகப்பெரிய தவறு. நான் வெளிப்படையாக சொல்கிறேன். ஆகவே, அதிகாரிகள் யாராக இருந்தாலும்கூட, உடனடியாக இப்படி மிகப்பெரிய நிதி நெருக்கடியிலே இருக்கக்கூடிய நம்முடைய அரசு, இந்த இழப்பீட்டைக் கண்காணித்து, உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று சொல்லி நான் கேட்டுக்கொள்கிறேன்.

அப்புறம் கைத்தறி தள்ளுபடி சலுகை ஆறு கோடி ரூபாய் மிகப் பெரிய குறைப்பு. நெசவாளர்கள் வாழ்க்கையிலே மிகவும் நலிவடைந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நெசவாளர்களுக்கு வழங்கக்கூடிய ஆறு கோடி ரூபாய் தள்ளுபடி சலுகை குறைக்கப்பட்டிருப்பது பெருத்த வருத்தத்தை அளிக்கிறது.

மாணவர் பஸ் பாஸ் சலுகை 40 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு 41 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. இலவச வீட்டுமனைத் திட்டத்திற்கு 12 கோடி ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. பின்தங்கியவர்களுக்கான வீடுகள் கட்டும் திட்டத்திற்கு ஒதுக்கீடு அறவே இல்லாமல் போய்விட்டது. அதைப்போலவே, ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம், நிதி ஒதுக்கீடு அறவே இல்லாமல் போய்விட்டது. இப்படிப் பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்காமல் போயிருக்கிறது. இப்படிச் சில சில திட்டங்களுக்கு நிதி குறைக்கப்பட்டிருக்கிறது. இப்படிச் சில திட்டங்கள் காணாமல் போய்விட்டன.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் தொடர்ந்து

தவறான தகவல்களையே இந்த அவைக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். ஆனால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எல்லாவற்றுக்கும் இப்போதே பதில் சொல்வதானால், அதிக நேரம் பிடிக்கும் என்பதால், திங்கட்கிழமையன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எல்லாவற்றுக்கும் உரிய பதில் அளிப்பார் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறாகச் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது நம்முடைய நிதிநிலை குறிப்பு பகுதி ஒன்றிலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய தகவலைச் சொல்கிறேன். இதை நான் தவறாகச் சொல்லவில்லை. தாங்கள் கொடுத்திருக்கக்கூடிய அந்தப் பகுதி ஒன்றிலே இருக்கக்கூடிய அதை வைத்து...

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் சாராச் செலவு என்ற ஒன்றும் இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். திங்கட்கிழமை விளக்கமாக எல்லாவற்றுக்கும் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளியிலே உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** அதைப்போலவே இப்படி இன்னும் நிறைய திட்டங்களுக்கு நிதி குறைக்கப்பட்டிருப்பதாலும்கூட, விளம்பரம், பிரச்சாரத்திற்கு 26 கோடி ரூபாயிலிருந்து 35 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படி விளம்பரத்திற்கும் பிரச்சாரத்திற்கும் நிதியைக் கூடுதலாக ஒதுக்கியதைப்போல, மற்ற மக்கள் நலப் பணித் திட்டங்களுக்கும் இன்னும் கூடுதலான நிதி ஒதுக்குவதுதான் பொருத்தமானதாக இருக்கும் என்ற காரணத்தினாலே சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்று உள்ளாட்சி. மத்திய அரசு நிதி ஒதுக்கவில்லை. நிதியைக் குறைத்துவிட்டது என்று சொல்லி, மத்திய அரசை நாம் குறை சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடியவை உள்ளாட்சி அமைப்புகள். ஆகவே, உள்ளாட்சி அமைப்புகள் தினந்தோறும் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய அமைப்பாக இருக்கின்ற காரணத்தினால், உள்ளாட்சி அமைப்புகள் மாநில அரசிடம் கையேந்தி



நிற்கின்றன என்ற அந்த நிலை மாறி, கூடுதலான நிதி ஒதுக்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-10

அதைப்போலவே இன்னொன்று மிக முக்கியமான பிரச்சினை. எங்களுடைய தருமபுரி மாவட்டத்திற்கு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வரவேண்டும் என்று பெருந்தலைவர் காமராஜர் காலத்திலேயிருந்து அந்த மாவட்டத்து மக்கள் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். தமிழகத்திலே மற்ற மாவட்டங்களில் இருப்பதைப்போல அல்லாமல், நிலத்திலே ஃப்ளோரைடு என்ற நச்சுத்தன்மை அதிக அளவிலே இருக்கிறது. வேறு எந்த மாவட்டத்திலேயும் அந்த அளவிற்கு இல்லை. அப்படி ஃப்ளோரைடு என்ற நச்சுத்தன்மை அதிகமாக இருந்தும்கூட, இதுவரையிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வரவில்லை. கடந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருந்தது, இந்த ஆண்டு அதைப்பற்றிப் பேசவில்லை என்பது பெருத்த வருத்தத்தை அளிக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதைப்போல தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியை தலைநகராகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பு நிலுவையில் இருக்கிறது. அதையும் நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லி இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல காவல் துறைக்கு நிதியொதுக்கீடு அதிகம். உள்ளபடியே அதை நான் மனதார வரவேற்கிறேன். இன்று இருக்கக்கூடிய குற்றங்களைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு காவல் துறைக்கு நிதியொதுக்கம் அதிகம் தேவைப்படுகிறது. அதைப்போலவே அவர்கள் பணி நேரம் வரையறுக்கப்படவேண்டும். 24 மணி நேரம் பணி என்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) அது வரையறுக்கப்பட வேண்டும். 8 மணி நேரம் பணி. அது மாத்திரம் அல்ல, மற்ற துறைகளிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு இருப்பதைப் போல இணையான ஊதியம் வழங்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, எல்லா நிலைகளிலும் தனியார்மயம், தாராளமயம் என்று சொல்லக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, அரசாங்கத்தினுடைய

[திரு. ஜி. கே. மணி] [2002 ஏப்ரல் 5

வேலைவாய்ப்புகள் அரிதாகிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை. இந்தச் சூழ்நிலையிலே பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து ஆரம்பக் காலத்திலேயிருந்து இன்றைய வரையில் தனியார் துறைகளிலே இட ஒதுக்கீடு வேண்டும் என்று கொள்கை அளவிலே சொல்லியது மாத்திரமல்ல, டெல்லியிலே மிகப்பெரிய மாநாடு நடத்தியும்கூட, இந்தக் கொள்கைக்கு வெற்றி கிடைக்காத இந்த நேரத்திலே, நம்முடைய மேதகு ஜனாதிபதி அவர்கள், இந்த ஆண்டு உரையிலே சொல்லி இருக்கிறார்கள். 'பிறபடுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்க தனியார் துறைகளிலே இடஒதுக்கீடு வேண்டும்' என்று ஜனாதிபதி அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அண்டை மாநிலமான கர்நாடகா அரசுகூட சட்டமன்றத்திற்கு என கமிட்டி அமைத்து, அந்தக் கமிட்டி அரசாங்க வேலைவாய்ப்புகள் மாத்திரமல்லாமல், தனியார் துறைகளிலே இடஒதுக்கீடு கொண்டு வருவதற்கு, இடஒதுக்கீடு சட்டத்தை மாநில அரசே வகுத்துக் கொள்ளலாம் என்ற ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும் என்று சொல்லி அந்த கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது.

அதைப்போலவே சமீபத்திலே நமது அரசியல் சட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆராய்ந்த அரசியல் சட்ட மறுஆய்வு கமிஷனும் தனியார் துறையிலே இடஒதுக்கீடு கொடுப்பது பொருத்தமாக இருக்கும், உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லி, மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்திருக்கிறது. இப்படி எல்லா நிலைகளிலும் மத்திய அரசும், மாநில அரசும் இந்தக் கோரிக்கைக்கு குரல் கொடுத்திருக்கிற காரணத்தினாலே, நம்முடைய தமிழக அரசு, தனியார் துறையில் நிச்சயமாக இடஒதுக்கீட்டு முறையை அமலாக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். உள்ளபடியே நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். பாட்டாளி மக்கள் கட்சி மாத்திரம் அல்ல, முதன்மை மாநிலமாக வருவதை எந்த அரசியல் கட்சியும் எதிர்க்கமுடியாது. அதில் வேறுபட்ட கருத்தே இருக்க முடியாது. ஆகவே, முதலமைச்சர் அவர்களுடைய கனவு நனவாக வேண்டும் என்ற எண்ணத்தை பாட்டாளி மக்கள் கட்சி, அந்தக் கனவை நனவாக்க உறுதுணையாக இருக்கும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2002 ஏப்ரல் 5] [திரு. ஜி.கே. மணி]

அதைப்போலவே மிக முக்கியமானது. நான் குற்றச்சாட்டிற்காகச் சொல்லவில்லை. இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய அனைவருக்கும் தெரியும். இன்று நல்ல அதிகாரிகள், நேர்மையான இலஞ்சம் இல்லாத அதிகாரிகள் இன்றும் இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் பாராட்டுதல்களை, வாழ்த்துகளைச் சொல்லிக்கொள்கிறேன். அதேநேரத்திலே, இலஞ்சம் எங்கு பார்த்தாலும் புரையோடிக் கொண்டிருக்கிறது. ஒரு நல்ல அரசுக்கு முன்மாதிரியான அரசுக்கு இலஞ்சத்தை ஒழிப்பதிலே அதிக அக்கறை இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதிலே உங்களை நான் குறையாகச் சொல்லவில்லை. ஆகவே, இலஞ்சத்தை எங்கும் இல்லாத அளவிற்கு ஒழிப்பது முக்கியம்; அது மிகப்பெரிய குற்றம் என்று உணர்ந்து, அது வராமல் தடை செய்வது நம் அரசின் கடமையாக இருக்கும் என்ற காரணத்தினாலே இந்த இலஞ்சத்தை அடியோடு ஒழிப்பதற்கு ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வரவேண்டும். அப்படி எந்தத் திட்டத்தினாலாவது அதை நீங்கள் நிச்சயமாக ஒழித்துக்கட்ட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) என்று குறிப்பிட்டு ஒன்றே ஒன்று.

பிற்பகல் 1-15

அடுத்து, தனியார் துறை பற்றிச் சொன்னேன். போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையிலே படிப்படியாக தனியார்மயம். இந்தத் தருணத்திலே, நாம் வரலாற்றிலே பார்த்திருக்கிறோம். நட்டத்திலே இயங்கிய பொதுத் துறை நிறுவனங்கள் இலாபத்தை ஈட்டிய வரலாறு உண்டு. உதாரணமாக என்.எல்.சி. நம்முடைய போக்குவரத்துக் கழகங்களேகூட, சில ஆண்டுகளுக்கு முன்பு நட்டத்திலே இருந்தன. மீண்டும் இலாபத்திற்கு வந்தன. இப்போது நட்டம். நேற்றுகூட எங்களுக்கு விழுப்புரம், கோவை மாவட்ட போக்குவரத்துக் கழகத்தினுடைய ஆண்டு அறிக்கையை கொடுத்தார்கள். அதிலே படித்துப் பார்த்தோம். இந்த ஆண்டு போக்குவரத்துக் கழகம் இலாபத்திலே இயங்கிக்கொண்டிருப்பதாக புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. ஆக, இலாபத்தில் இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய அந்தப் போக்குவரத்துக் கழகங்களை நிச்சயமாக தனியார்மயமாக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மிக முக்கியமான இன்னொரு பிரச்சினை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கிடு) மணி, பேசி முடித்துவிடுங்கள், நேரமாகிவிட்டது.

[2002 ஏப்ரல் 5

**திரு. ஜி.கே. மணி:** இன்னொரு முக்கியமான பிரச்சினை. கடந்த ஆட்சி காலத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, சீர்மரபினருக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அரசுப் பணிகளிலே உரிய பிரதிநிதித்துவம் இல்லை என்று சொல்லி, இந்த மாமன்றத்திலே நாங்கள் எல்லாம் பலமுறை பேசி, தமிழக அரசாங்கத்தாலே ஒரு வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதிலேயிருந்த பின்னடைவு காலி இடங்களை அரசு நிரப்பும் என்று அரசு வாக்குறுதி அளித்தது. அந்த வகையிலே Schedule இன மக்களுக்குக் கிடைக்க வேண்டிய காலிப்பணியிடம் 4,907, பழங்குடியின மக்களுக்கு 1,094, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 5,263. இந்த இடங்கள் எல்லாம் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். இதற்காக அரசு என்ன செய்யப் போகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்திலே, இப்படி இட ஒதுக்கீட்டை பின்பற்றாதவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்று மாநில அரசு சொல்லியிருக்கிறது. ஆனால், இன்று அண்ணா பல்கலைக்கழகத்திலே இட ஒதுக்கீட்டு முறையே பின்பற்றப்படுவதில்லை. விளம்பரம் கொடுத்திருக்கிறது. அதிலே இனச்சுழற்சி முறையும் கிடையாது. எந்த முறையையும் பின்பற்றுவதில்லை. உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறது, இட ஒதுக்கீட்டு முறையை பின்பற்றவில்லையென்று சொன்னால், நடவடிக்கை எடுக்கும் என்று. மத்திய அரசு, மாநில அரசினுடைய நிதியோடு இயங்கக்கூடிய இந்த அண்ணா பல்கலைக்கழகம், இட ஒதுக்கீட்டு முறையை தமிழகத்திலே பின்பற்றவில்லையென்று சொன்னால், இந்தப் பல்கலைக்கழகம் எந்த நாட்டிலே இருக்கிறது என்ற கேள்விதான் நமக்கு வருகிறது. ஆகவே, அந்த நிறுவனத்தின்மீது அரசு உடனடியாக தனிக் கவனம் செலுத்தி, அதற்கு யார் காரணமோ அவர்கள்மீது தக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் பேசும்போது அண்ணா பல்கலைக்கழகத்தில் காலி இடங்களை நிரப்பும்போது, பணியமர்த்தும்போது, இனச்சுழற்சி முறை கடைபிடிக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார். இதுகுறித்து நான் துணை வேந்தர் அவர்களிடம் பேசி, உண்மையான தகவலை இந்த அவைக்குத் தர விரும்புகிறேன். ஆனால், இவர் குற்றம் சொல்வது பற்றி ஏதாவது ஆதாரத்தைக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.



2002 ஏப்ரல் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மணி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசுக்குப் பாராட்டு சொல்ல விரும்புகிறேன். மலிவு விலை மது என்பது மக்களை எல்லாம் கொடுமையாக பாதிக்கும் என்ற காரணத்தினாலே, நாங்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, நம்முடைய தமிழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மலிவு விலை மதுவை இரத்து செய்த காரணத்தினாலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்த மாமன்றத்திலே மனதார நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் Bar திறப்பு என்பது மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்கும். அதையும் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த மழைநீர் சேகரிப்பு என்பது மிகப் பெரிய முக்கியமான பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம். பேசி முடித்துவிடுங்கள். இத்தோடு பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மழைநீர் சேகரிப்பு, நீர்வள ஆதாரத்தை நாம் மேம்படுத்துவது மிக முக்கியமான பிரச்சினை. இதற்குக்கூட கடந்த 23-3-2002 அன்று சென்னையிலே நாங்கள் ஒரு கருத்தரங்கை தேசிய அளவிலே நீர்வள ஆதாரங்கள் மேலாண்மை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அதை மற்ற மானியக் கோரிக்கையிலே பேசிக்கொள்ளலாம்.

**திரு. ஜி.கே. மணி:** நீர்வள ஆதாரத்தைப் பெருக்குவதற்கு மக்கள் மத்தியிலே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்று வல்லுநர்கள் சொல்கிறார்கள். இன்னும் 25 ஆண்டு காலத்திற்குள்ளாக உலகப் போரே வரும் என்று சொல்கிறார்கள். எதற்காக என்று சொன்னால், தீவிரவாதத்திற்காக, மதத்திற்காக அல்ல, தண்ணீருக்காக வரும் என்று சொல்கிறார்கள். அது இந்திய நாட்டிலேயே வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. கர்நாடகா-தமிழ்நாடு, தமிழ்நாடு-கேரளம், தமிழ்நாடு-ஆந்திரம் என்று எல்லாம் இப்படி பிரச்சினை வரும் என்ற காரணத்தினால், மழைநீர் சேகரிப்பு மிக மிக முக்கியம். இந்த ஆண்டுகூட, நம்முடைய சென்னையிலே 1,400 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறது. இதில் 25 சதவீதம் மழைநீரைச் சேகரித்தாலே நமக்குப் போதுமானதாக இருக்கும்.

[திரு. ஜி.கே. மணி] [2002 ஏப்ரல் 5

ஆகவே, மழைநீரைச் சேகரிப்பதற்கு அரசு எல்லா வகையிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு, கடைசியாக ஒரு கோரிக்கை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், வேண்டாம். உரையை முடியுங்கள் (குறுக்கீடு) கோரிக்கையைத் தனியாக வைத்துக்கொள்ளலாம்.

**திரு. ஜி.கே. மணி:** எழுதிக் கொடுத்துவிடுகிறேன். இதுவரையிலே பேச அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் முத்தமிழ் அறிஞர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-20

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 8-4-2002 திங்கட்கிழமை அன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 8-4-2002 (திங்கட்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

8-4-2002 திங்கட்கிழமை அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order, Point of Clarification. நேற்று வைக்கப்பட்ட ஏடுகளிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியபோது, போக்குவரத்துக் கழகத்தைப் பற்றிச் சொன்னார்கள். 2000-2001-க்கான நிதிநிலை அறிக்கை என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனியாக அவரிடம் சொல்லிவிட வேண்டியதுதானே?

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், ஒரு குறிக்கோளை அடையும் நோக்கத்துடன் வகுக்கப்பட்டிருக்கிறது. மாநிலத்தின் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் நிலவிடும் வறுமைப் பிணியைப் போக்கிடவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கிடவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் மீண்டும் நிலைநிறுத்தி, எல்லாத் துறைகளிலும் நாட்டிலேயே தலைசிறந்த மாநிலமாகத் தமிழகத்தை உயர்த்திட தீவிர செயல் திட்டங்களை நமது முதலமைச்சர் மேற்கொண்டிருப்பதாகவும், அவருடைய தொலைநோக்குச் சிந்தனைகள் ஆக்கபூர்வமான செயல்திட்டங்களாக மலர்வதற்கு இந்த வரவு-செலவுத் திட்டம் வழிவகுக்கும் என்றும் நிதியமைச்சர் அவர்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

புகழ் பெற்ற பொருளாதார வல்லுநர் டாக்டர் இராஜா ஜே. செல்லையா அவர்களது தலைமையின்கீழ் "வரி சீரமைப்பு மற்றும் வருவாய் அதிகரிப்பு ஆணையம்" ஒன்றை ஏற்படுத்திடவும் அரசு முடிவு எடுத்திருக்கிறது. அதேபோன்று புகழ் பெற்ற வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களை மாநிலத்தின் திட்டக் குழுத் துணைத் தலைவராக நியமித்திருக்கிறது. ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியான திரு. ஏ.எம். சுவாமிநாதன் அவர்களை அரசுத் துறைகளில் சிக்கனம் மற்றும் பணியாளர்கள் சீரமைப்பு குறித்து ஆலோசனைகள் வழங்குவதற்காக ஒரு நபர் ஆணையமாக நியமித்திருக்கிறது.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 5

அதேபோன்று இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கையின் மீதான கருத்துகளையும், ஆலோசனைகளையும் அரசியல் கட்சிகள், கல்வியாளர்கள், வல்லுநர்கள், வர்த்தகம் மற்றும் தொழில் சார்ந்தோர் மற்றும் ஏனைய பிரிவினர் பலரிடமிருந்தும் கோரி பெற்று இந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்கியிருப்பதாகவும் நிதியமைச்சர் கூறி நக்கிறார். எனவே, அந்தப் பின்னணியில் என்னுடைய கருத்துகளை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

நடப்பு ஆண்டு நிதிநிலைமை மாநில அரசுக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்துள்ளதாகவும் நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கின்ற நேரத்திலே, அவருக்கு இருந்த சிரமம் நமக்குத் தெளிவாகவே புரிகிறது. அவருடைய நிலையும் நமக்குத் தெளிவாகவே புலப்படுகிறது. இதிலே பட்ஜெட் கண்ணோட்டம்-Budget at a glance-நிதிநிலை குறிப்புப் பகுதி ஒன்று. அதிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வருவாய்ச் செலவு 26,862 கோடி ரூபாய். மூலதனச் செலவு 2,207 கோடி ரூபாய். ஆக மொத்தம், எல்லாம் சேர்த்து 30,832 கோடி ரூபாய் செலவு வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். வருவாய் வரவு என்று எடுத்துக்கொண்டால் 20,629 கோடி ரூபாய். நல்ல நிதிநிலை அறிக்கை என்று சொன்னால், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை வரக்கூடாது. அதுதான் முன்பெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தோம். ஆனால், இப்போது எல்லோருமே வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை வருகிற மாதிரிதான் நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கிறார்கள். என்றாலும்கூட, அது 30 சதவீதத்திற்கு அதிகமாகப் போகின்ற நேரத்தில் அது எந்த அளவிற்குச் சரியாக இருக்கும் என்பதை நிதியமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரும்பச் செலுத்துதல், அரசு வாங்கிய கடன் வகையிலே, அரசுக் கடன்கள் 7,198 கோடி ரூபாய்; அது தவிர பொதுக் கணக்கில் சேர்ந்து வந்துள்ள. நிகரத் தொகை 1,459 கோடி ரூபாய். இதிலே புரியாத விஷயம், என்னைப் பொறுத்தவரைக்கும், பொது வருங்கால வைப்பு நிதி 1,000 கோடி ரூபாய் - General Provident Fund - 1,000 கோடி ரூபாய். வைப்பீடுகள் 119 கோடி ரூபாய். ஏனையவை 657 கோடி ரூபாய். அந்த 1,000 கோடியும், 657 கோடி ரூபாயையும் சேர்த்தால் 1,657 கோடி ரூபாய் வருகிறது. இந்தப் பொது வருங்கால வைப்பு நிதி இந்த வைப்பீடுகள் - டெபாசிட்ஸ் - மைனஸ் 119 கோடி என்று



2002 ஏப்ரல் 5] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

போட்டிருக்கிறார்கள். அதைக் கழித்தால், ஒருவேளை, அது நம்முடைய கையிலே இல்லை, தர வேண்டியது என்று கணக்கில் வைத்து கழித்தால்கூட, 1,657 கோடியிலேயிருந்து 119 கோடியை கழித்தால் 1,538 கோடி ரூபாய் வருகிறது. இல்லை, அது சேர்க்கப்படத்தான் வேண்டும், அதுதான் இதுவரைக்கும் இருந்தது என்றால், இந்த மூன்று ஆண்டுகளாக நான் பார்க்கிறேன், அது கணக்கிலேதான் சேர்ந்து கொண்டு இருக்கிறதே தவிர, குறையவில்லை. அதிலே, சென்ற ஆண்டு திருத்திய மதிப்பீடாக இருந்தாலும் சரி, வரவு-செலவுத் திட்ட மதிப்பீடாக இருந்தாலும் சரி, 2000-2001-லே கொடுக்கப்பட்ட கணக்குகளாக இருந்தாலும் சரி, சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இங்கே அந்த 119 கோடி ரூபாயைச் சேர்த்தால் 1,776 கோடி ரூபாய் வருகிறது. இதிலே எது வரி? 1,459 கோடி ரூபாய் என்கிற கணக்கு எப்படி வந்தது என்பதை நிதியமைச்சர் அவர்கள் நிச்சயமாக விளக்குவார்கள் என்று நம்புகிறேன். நிச்சயமாக ஏதோ ஓர் இடத்திலே இடிக்கிறது. தவறு நேர்ந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஒருவேளை அதைக் கழித்தால்கூட, 1,538 கோடி ரூபாய் வருகிறது. அதிலே 1,330 கோடி ரூபாய் பற்றாக்குறை என்பது குறையும். 640 கோடி ரூபாய் பற்றாக்குறை என்று வைத்துக் கொண்டாலும்கூட, அதிலே ஒரு 79 கோடி ரூபாய் குறையும், அது குறையும்போது 561 கோடி ரூபாய்க்கு வந்துவிடும். இதைப் பொறுத்தவரையில், ஓர் இடத்தில் 119 கோடி ரூபாய் என்று சம்பந்தம் இல்லாமல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 35-வது பக்கத்திலே வருவாய்க் கணக்கிலிருந்து மாற்றங்கள். பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை நிறைவேற்றிய மூலதனப் பணிகளுக்காக வருவாய்க் கணக்கிலிருந்து செய்யப்படும் கணக்குகளுடைய மாற்றங்கள் தொடர்பாக ரூபாய் 119 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இது வெறும் சரிக்கட்டல் பதிவே ஆகும் என்று சொல்லி இருக்கிறார்கள்.

பிற்பகல் 1-25

இதுதான் அந்தக் கணக்கு என்றால்—அந்தக் கணக்காக இருக்க முடியாது—இதுதான் அந்தக் கணக்காக இருந்தால், சரிக்கட்டல் என்றால், அதை விட்டுவிட்டு, அப்போதுகூட 1,657 கோடி ரூபாய் வரவேண்டும். அது ஏன் வரவில்லை? 1,657 கோடியும் வரவில்லை, 1,776 கோடியும் வரவில்லை, 1,538. கோடியும் வரவில்லை. அதற்குப் பதிலாக, 1,459 கோடி என்பது எந்த வகையில் பொருந்தும் என்று சொல்ல வேண்டும். நேற்றைய முன்தினம் இங்கே இன்னொரு தவறு சுட்டிக்காட்டப்பட்டது.

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 5

14,253 கோடி ரூபாய் மாநில அரசின் சொந்த வரி வருவாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவே, வேறு ஒரு பக்கத்தில் 14,792 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் தவறு, எப்படி நேர்ந்துள்ளது என்பதை நிதியமைச்சர் அவர்கள் விளக்குவார்கள், விளக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நிச்சயமாக, இந்த 14,792 கோடி ரூபாய் என்பது எடுத்து எழுதும்போது தவறு நேர்ந்திருந்தாலும்கூட, இந்த 1,459 கோடியை பொறுத்தவரையில், அது தவறாகத்தான் அங்கே பதிவாகி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்திய நிதியமைச்சர் திரு. யஷ்வந்த் சின்கா அவர்கள் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையைத் தொடர்ந்து, தமிழகத்தின் நிதிநிலை அறிக்கையை நமது நிதியமைச்சர் தாக்கல் செய்திருக்கிறார். நிதிப் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில் இரண்டு நிதியமைச்சர்களுமே எதிர்பார்த்த வகையில் அதை கட்டுக்குள் வைக்க முடியவில்லை என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். வரி விதிப்புகளைப் பொறுத்தவரையில், மத்திய அரசும் பல கடுமையான வரி விதிப்புகளைக் கொண்டு வந்திருக்கிறது. தேசப் பாதுகாப்பைக் கருதி, பாதுகாப்புத் துறைக்கு சென்ற ஆண்டைவிட அதிகமான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஆயினும், சென்ற ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு பகுதி செலவழிக்கப்படாமலேயே நின்று போய்விட்டது. அப்படி இருப்பினும், இந்த ஆண்டு அதைக் காட்டிலும் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதோடு இல்லாமல், வருமான வரி செலுத்துவோருக்கு மட்டுமல்ல, அனைத்து வரிகளுக்கும் கூடுதல் மேல்வரியாக 5 சதவீதம் புதிதாக விதித்திருக்கிறார்கள். தேவையானால் வருமான வரியை உயர்த்தியிருக்கலாம். மற்ற வரிகளையும் உயர்த்தியிருக்கலாம். அதை விட்டுவிட்டு, கூடுதல் வரி என்று விதிக்கப்பட்டிருப்பதால், அதிலிருந்து மாநிலங்கள் எந்தவிதமான பங்கையும் பெறமுடியவில்லை. அதனால் மாநிலங்கள் உரிமையும் மறுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே மத்திய வரிப் பகிர்வில் நமது மாநிலத்திற்கு வரவேண்டிய 512 கோடி ரூபாய் அளவிற்கு குறைக்கப்பட்டுவிட்டது. இப்போது கூடுதல் வரி விதிப்பின் மூலமும் நமக்கு வரவேண்டிய பங்கு மறுக்கப்பட்டிருக்கிறது. எனவே, நமது மாநிலத்தின் சார்பிலும், கர்நாடக மாநிலத்தின் சார்பிலும் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருப்பது மிகவும் சரியானது என்றே நான் கருதுகின்றேன்.



2002 ஏப்ரல் 5] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

அதுபோன்று, நியாயமற்ற முறையில் உயர்த்தப்பட்டு வரும் சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு கூறப்பட்ட யோசனைகளை இங்கே உள்ள சிமெண்ட் உற்பத்தியாளர்கள் ஏற்கவில்லை. நமது மாநிலத்தில் மட்டும் சிமெண்ட் உற்பத்தியாளர்கள் கூட்டணி அமைத்துக்கொண்டு கொள்ளை இலாபம் அடிப்படையே கொள்கையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். அரசாங்கம் எவ்வளவு எடுத்துக் கூறினாலும், அவர்கள் அதைப் பொருட்படுத்துவதாக இல்லை. அந்த அளவுக்கு சக்தியும், செல்வாக்கும் மிகுந்த பிரிவினராக அவர்கள் இருந்து வருகிறார்கள். சர்வதேச சந்தையில் சிமெண்ட் விலை மிகவும் குறைவாகவே இருக்கிறது. எனவே, குறைந்த விலையில் வெளி நாடுகளிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்ய முடியும். ஆயினும், மத்திய அரசின் இறக்குமதிக் கொள்கை இதற்குத் தடையாக இருந்து வருகிறது. சிமெண்ட் இறக்குமதிக்கு விதிக்கப்படும் இறக்குமதி தீர்வையை குறைக்க வேண்டுமென்று நமது மாநில அரசும் வற்புறுத்தி வருகிறது. ஆயினும், பெயரளவுக்கு அந்தத் தீர்வை 5 சதவிகிதம் மட்டும் குறைக்கப்படுவதாக இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் எவ்வளவு நேரம் உங்களுக்குத் தேவைப்படும்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** குறைந்தபட்சம் 9 நிமிடங்கள் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எவ்வளவு நேரம் தேவைப்படும்?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இன்னும் 40 நிமிடங்கள் தேவைப்படும். (சிரிப்பு) நான் ஏற்கெனவே உங்களிடம் சொல்லியிருக்கிறேன். அப்படியென்றால், ஒரு நிமிடம் வேண்டுமென்றால் கழித்துக்கொண்டு 39 நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரை மணி நேரம் அல்லது 35 நிமிடங்கள் 8ஆம் தேதி எடுத்துக் கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 8 ஆம் தேதி வைத்துக்கொள்ள நான் தயார், வைத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 8 ஆம் தேதி வைத்துக்கொள்ளச் சொல்லலாமா அல்லது இப்போதேபேசி முடித்துக்கொள்ளச் சொல்லலாமா?

[2002 ஏப்ரல் 5

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** என்ன, ஒரு நிமிடம், இரண்டு நிமிடம் அதிகமாகலாம். அது என்னங்க பெரியது? முடிக்கத்தான் வேண்டுமென்றால் நான் முடித்துவிடுகிறேன். ஆனால் நேரம் அதிகமாகலாம். நான் தயார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, தொடருங்கள்.

பிற்பகல் 1-30

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சரி. அதே நேரத்தில் பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் ஏறாமல் தடுப்பதற்காக அவற்றின் மீது விதிக்கப்படக்கூடிய இறக்குமதித் தீர்வையை மேலும் அதிகமாகக் குறைக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

**திரு. துரைமுருகன்:** First part-டிலே 1-45 மணி வரையிலும் பேசி, அதற்குமேல் முடியவில்லை என்றால், 8 ஆம் தேதி பேசுவதைவிட 8 ஆம் தேதியன்றே You can take your own time.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு செய்தி....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், பேரவைத் தலைவர்தான் முடிவு செய்ய வேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-45 மணி வரை அவர் பேசட்டும். அதற்கு மேலும் இருந்தால், அதை 8 ஆம் தேதி வைத்துக்கொள்ளலாம்.

**திரு. துரைமுருகன்:** அதைத்தான் நானும் சொல்கிறேன். என்னவென்றால் இன்றைக்கு 1-45 மணிவரையிலும் இருந்து...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பரவாயில்லை (குறுக்கீடு) No, No, the Member has agreed to.

**திரு. துரைமுருகன்:** இப்போது 1-45 மணிவரையிலும் இருந்து, அதற்கப்புறம் 8 ஆம் தேதி பேசுவதைவிட, 8 ஆம் தேதி உங்களுக்கு பதிலுரைக்கு time இல்லை என்றால், நீங்கள் 1-30 மணிக்கு மேலே அரை மணி நேரம் பேசுங்கள்.



2002 ஏப்ரல் 5]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களே ஒப்புக்கொண்டார்கள், அவர்கள் பேசட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, 1-40 மணிவரையிலும் பேசுங்கள். அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சரி, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஏறிவிட்டதால், இங்கு அதிலிருந்து பெறப்படும் பெட்ரோலியப் பொருட்களின் விலை ஏறாமல் தடுப்பதற்காக இறக்குமதித் தீர்வையைக் குறைப்பதாக மத்திய அரசு அறிவிக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அவற்றின் விலையை அரசே நிர்ணயித்து வந்த நிலையை இப்போது கைவிட்டுவிட்டது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு பாயின்ட்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிஷம், ஒரேயொரு செய்தி, ஒரேயொரு முக்கியமான செய்தி.....

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** திரு. சிவபுண்ணியம் அவர்களே, தலைவர் அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிவபுண்ணியம் உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அரசு நிர்ணயிக்கும் விலையை கைவிட்டு, சந்தை விலைக்கு மாறிவிட்டது. பெட்ரோலியத் தொகுப்பிலேயும் ஏராளமான நிதி குவிந்து கிடக்கிறது. ஏனென்று சொன்னால், பெட்ரோலியத்தைப் பொறுத்தவரைக்கும் என்ன நமக்கு உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள் என்றால், ஐக்கிய முன்னணி ஆட்சியிலேயும் சரி, இப்போதிருக்கிற ஆட்சிலேயும் சரி, விலைகள் குறையும்போது குறையும் என்று நமக்கு உத்தரவாதம் கொடுத்தார்கள்.

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 5

ஆனால், விலை பலமுறை குறைந்தது. சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதம், செப்டம்பர் மாதம் பேரல் ஒன்றுக்கு 17 டாலர், 18 டாலர் வந்தது. இப்போது விலையை நிர்ணயிக்கும்போதே, ஒரு பேரல் விலை 30 டாலர்கள். இதை இப்போது மாற்றிப் பேசுகிறார்கள், 26 டாலர்களே அதிகமாகிவிட்டது என்று. 26 ஒன்றும் அதிகம் இல்லை. இந்த விலை நிர்ணயம் என்பது, 30 டாலர்களுக்கான விலை நிர்ணயம். அதிலேயும் அவர்கள் இறக்குமதித் தீர்வையை எடுத்துவிட்டார்களானால், நிச்சயமாக இதைவிடக் குறைந்த விலைக்குக் கொடுக்க முடியும். ஆகையினாலே, அவர்கள் சொல்வதை எந்த வகையிலேயும் ஏற்றுக்கொள்வதற்கில்லை. நிதி குவிந்து கிடக்கிறது, அந்தத் துறைக்கு மத்திய அரசு சலுகை அளிக்க முன் வந்திருக்கிறது. ஆனால், சிமெண்ட்டுக்கு மட்டும் இறக்குமதித் தீர்வையை அதிகமாக வசூலித்து அதனை இறக்குமதி செய்ய முடியாமல் தடுக்கிறது. மத்திய அரசின் பாகுபாடு நிறைந்த இந்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட இந்த மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாக வெளி நாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் குறைந்த விலையில் சிமெண்ட் வாங்குவதைத் தடுத்து நிறுத்தும் சக்திகளை ஒரு கட்டுக்குள் வைப்பதற்காக மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது.

அதன் விளைவாகவே, குறிப்பிட்ட விலைக்குக் கூடுதலாக சிமெண்ட் விலையைக் கூட்டினால், அதற்கு 24 சதவீத விற்பனை வரி செலுத்த வேண்டுமென்று அதிரடி அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது. அத்துடன் வெளியிலிருந்து கொண்டுவரப்படும் சிமெண்ட்டுக்கு விதிக்கப்பட்டிருந்த நுழைவு வரியும் இரத்து செய்யப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக இங்குள்ள சிமெண்ட் உற்பத்தியாளர்கள் தங்களுடைய சிமெண்ட் வியாபாரத்தையே நிறுத்திவிடப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். சந்தைப் பொருளாதாரத்தை வரவேற்கும் வர்த்தகர்கள் இந்த சிமெண்ட் உற்பத்தியாளர்களின் போக்கை ஒருபோதும் ஏற்கமாட்டார்கள். தமிழ்நாடு அரசு நிறுவனமான டான்செம் மூலமாக அரசு நிர்ணயித்துள்ள விலையில் சிமெண்ட் விற்கப்பட்டு வருகிறது. அதன் விளைவாகவும் சிமெண்ட் விலை தற்போது குறைந்திருக்கிறது.

உணவு தானியங்களைப் பொறுத்தவரையில், நாட்டில் நல்ல விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசு கொள்முதல் செய்து குவித்து வைத்துள்ள உணவு தானியங்களே தேவைக்கு அதிகமாகத் தேங்கிவிட்டது. அந்த உணவு தானியங்களைத் தகுந்த முறையில்



2002 ஏப்ரல் 5] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்]

பாதுகாப்பதற்காகவே ஆண்டுதோறும் 10,000 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகிறது என்று மத்திய அரசு கூறுகிறது. உணவு தானிய மானியமாகக் கொடுப்பதற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை 21,000 கோடி ரூபாய். அதிலே அவற்றைப் பாதுகாப்பதற்கு மட்டும் பாதி செலவாகிறது. எனவேதான், இப்போது உணவு தானியக் கையிருப்பைக் குறைப்பதற்காக அரிசி, கோதுமை ஆகியவற்றின் மானிய விலையை மத்திய அரசு மேலும் குறைத்திருக்கிறது. அத்துடன் அவற்றின் ஏற்றுமதிக்கிருந்த அளவுக் கட்டுப்பாட்டையும் நீக்கியிருக்கிறது. 50 இலட்சம் டன் கோதுமையையும், 30 இலட்சம் டன் அரிசியையும் ஏற்றுமதி செய்யப்போவதாகவும் அறிவித்திருக்கிறது.

இந்தியாவிற்குள் உணவு தானியங்களை எடுத்துச் செல்லப்படுவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தையும் நீக்கியிருக்கிறது. மாநில அரசுகள் தங்களுடைய மாநிலங்களுக்குள் அத்தகைய கட்டுப்பாடுகளை விதித்திருந்தால், அவற்றையும் நீக்கிவிட வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறது. தேவைக்கு மேல் உணவு தானியங்களைக் கொள்முதல் செய்து இருப்பு வைக்க வேண்டாம் என்றும், தேவை ஏற்பட்டால் இறக்குமதி செய்துகூட அத்தகைய உணவு தானியங்களை மாநிலங்களுக்கு வழங்குவதாகவும் மத்திய அரசு உறுதியளித்திருக்கிறது. இத்தகைய பின்னணியில் அரிசி தாராளமாகவும், குறைந்த விலையிலும் மாநிலத்திற்குக் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இங்கே அரிசிக்கு 2 சதவீத விற்பனை வரி விதிக்கும்போது, நம்முடைய அரிசி மட்டும் விற்பனையாகாத நிலை ஏற்படும். அதனால், நமது விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, வரிவிதிப்பைக் கைவிட வேண்டும் என்றும், விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையில், அவர்கள் விளைவிக்கும் நெல்லை கொள்முதல் செய்து, அவர்களை ஊக்குவிக்கும் முறையில் கொள்முதல் கொள்கையை உருவாக்க வேண்டும் என்றும் அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

கொள்முதல் நிலையங்கள், முன்பு 950 கொள்முதல் நிலையங்கள் இருந்தன. இன்றைய தினம் 39-ம் 28-ம், ஆக 67 கொள்முதல் நிலையங்களாகக் குறைத்திருக்கிறீர்கள். நேரடி கொள்முதல் நிலையங்களை அருள்கூர்ந்து மீண்டும் திறக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பல பகுதிகளிலே இப்போதுதான் அறுவடை

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 5

நடந்துகொண்டு இருக்கின்றது டெல்டா பிரதேசத்திலே. அவற்றையெல்லாம் தாலுகா மையங்களுக்குக் கொண்டு வருவது என்பது இயலாத காரியம். எனவே, நீங்கள் கொள்முதல் நிலையங்களைக் கண்டிப்பாகத் திறக்க வேண்டும். திறப்பது மட்டுமல்ல, ஒரு கொள்முதல் நிலையத்திற்கு குறைந்தபட்சம் தினம் ஒன்றுக்கு கொள்முதல் செய்வதற்கு 2 இலட்சம் ரூபாய் பணம் கொடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், எவ்வளவோ கஷ்டங்கள் நமக்கு வருகின்றன. விவசாயிகளை நாம் கஷ்டப்படுத்த வேண்டாம். விவசாயிகளைப் பொறுத்தவரையில், ஊக்கத் தொகையாக 40 ரூபாய் மீண்டும் வழங்க வேண்டுமென்றும் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ள சீனாவில் பின்பற்றப்படும் சில நடைமுறைகளை நாமும் ஏற்றுக்கொள்வதில் தவறில்லை. ஆனால், அங்கு உடைமைகள் அனைத்தும் அரசிடமே இருக்கிறது என்பதையும், அரசாங்கமே உற்பத்திக்கான முதலீடுகளை வழங்குகிறது என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். பருவ காலத்திற்கும், மண் வளத்திற்கும் சந்தைகளின் தேவைக்கேற்ப பொருட்களின் உற்பத்தித் திட்டத்தை அரசாங்கமே வகுக்கிறது. அதற்குரிய முதலீட்டையும் வழங்குகிறது. எனவே, எந்த வகையிலும் அங்குள்ள பயிரிடும் விவசாயிகள் பாதிக்கப்படுவதில்லை. நம்மைப் பொறுத்தவரை, பருவமழை தவறிப்பெய்தாலும் பாதிப்பு. விளைச்சல் அதிகமாக வந்துவிட்டாலும் விலை வீழ்ச்சி ஏற்படுகிறது. அதனால் விளையும் பாதகங்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு மட்டுமே ஏற்படுகிறது. தேசிய பேரழிவு நிதியிலிருந்தோ, மாநில அரசின் நிவாரண நிதியிலிருந்தோ அவர்களுக்கு ஏற்படும் இந்த இழப்பை முழுமையாகச் சரிக்கட்ட முடியவில்லை.

யூரியா போன்ற உரங்கள் மற்றும் இடுபொருட்களின் விலையை நிர்ணயிப்பதற்கோ அல்லது விளைபொருட்களின் விலையை நிர்ணயிப்பதற்கோ விவசாயிகளிடம் எந்த அதிகாரமும் இல்லை. கடன் சுமை மட்டும் காலங்காலமாகவும், வழிவழியாகவும் அவர்களின் தலையில் ஏற்றப்பட்டு வருகிறது. இந்த நிலைமைகளை எல்லாம் உணர்ந்துதான் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு கட்டணம் வசூலிக்கத் தேவையில்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அதேபோல், அவர்கள் வாங்கிய கூட்டுறவுக் கடன்களுக்கான வட்டியையும், அபராத வட்டியையும் செலுத்தும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொண்டதை அறிவித்து 311 கோடி ரூபாயையும்



2002 ஏப்ரல் 5] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

இந்த அரசு ஒதுக்கியது. ஆனால், இப்பொழுது மத்திய அரசு வகுத்துள்ள கொள்கையை மாநில அரசு பின்பற்ற முனைவதால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

மின்சாரத் துறையில் சீர்திருத்தம் என்ற பெயரால், மீட்டர்களைப் பொருத்துவதாக அறிவிப்பதும், உணவு தானியக் கட்டுப்பாட்டை நீக்குவது என்ற பெயரால், விளைவிக்கப்பட்ட நெல்லுக்கு ஆதார விலைக் கொடுத்து கொள்முதல் செய்வதைத் தவிர்த்து வருவதும், ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சந்தையில் நல்ல விலைக்கு நெல்லை விற்க முடியாமல் தவிக்கும் விவசாயிகளுக்கு கைகொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த மாநில அரசுக்குத்தான் இருக்கிறது. மத்திய அரசின் கொள்கைகளால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு மாநில அரசாங்கம் 'உடுக்கை இழந்தவன் கைபோல, உதவிக்கு வரவேண்டும். மாறாக, மேலும் அவர்களுக்குத் துன்பத்தை விளைவிக்கும் வேலைகளை மாநில அரசு செய்யக் கூடாது என்பதை வற்புறுத்திக் கூறவிரும்புகிறேன்.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அரசு மூடி விட்டதால், இடைத்தரகர்களிடமும், வர்த்தகர்களிடமும் நெல்லை குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிர்ப்பந்தம் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. தற்போது கோதுமையின் கொள்முதல் விலையை மத்திய அரசு சிறிது உயர்த்தியது. ஆயினும், அது நியாயமான அளவிற்கு உயர்த்தப்படவில்லை என்பதால் பஞ்சாப் மாநில முதலமைச்சர் கேப்டன் அமரீந்தர் சிங் உள்ளிட்ட பலரும் அதற்கு கடுமையான எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோன்று, தமிழகத்திலுள்ள விவசாயிகளின் நலனையும் இந்த அரசு பாதுகாக்க வேண்டும்.

பயிரிடுவதைப் பொறுத்தவரை, மற்ற நவதானியங்களுக்கும், பருப்பு வகைகளுக்கும் இப்போது தேவை அதிகரித்து வருகிறது. எனவே, பயிரிட்ட பயிர்களையே திரும்பத் திரும்பப் பயிரிடாமல், அவற்றை மாற்றிப் பயிரிடுவதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும். அந்த வகையில் எண்ணெய் வித்துகள் மற்றும் பருப்பு, பயறு வகைகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலைகளை உயர்த்தி மத்திய அமைச்சரகம் அண்மையில் அறிவித்து இருக்கிறது. பயறு வகைகளுக்கு மட்டும் குவிண்டாலுக்கு 100 ரூபாய் உயர்த்தி, 1,200 ரூபாய் என்று அறிவித்திருக்கிறது. கடுகு, சூரியகாந்தி, ஆமணக்கு, கடலை போன்ற எண்ணெய் வித்துக்களின் விலைகளையும் அதிகரித்திருக்கிறது. இத்தகைய பயிர்களைப் பயிரிடுவதற்கு விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். அவற்றைக்

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 5

குறைந்தபட்ச ஆதார விலையில் அரசே கொள்முதல் செய்து, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் விற்பனை செய்வதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். இதனால் ஏராளமான கிளைகளைத் திறந்து, ஆயிரக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியும். அப்போதுதான் அந்த அமைப்பு உண்மையாகவே ஒரு வாணிபக் கழகமாக செயல்பட முடியும்.

கிராமப்புறங்களில் இருக்கும் பலரும் நகர்ப்புறங்களுக்கு பிழைப்புக்காக நாடிச் செல்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை கிராமப்புறங்களில் உருவாக்குவதற்கு திட்டமிட வேண்டும். இப்பொழுது அதிகமாக விளைவிக்கப்படுகிற மற்றொரு தானியம் மக்காச் சோளம். மக்கள் அதை விரும்பி சாப்பிடாவிட்டாலும்கூட, கோழித் தீவனமாக அது பயன்படுகிறது. இன்று கோழி வளர்ப்பு என்பது ஒரு உப தொழிலாக அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோழித் தீவனத்திற்கு விளைவிக்கப்படும் மக்காச் சோளம் சில நேரத்திலே விலை படுவீழ்ச்சி அடைகிறது. எனவே, அதற்கு ஆதார விலை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரித் தேயிலையைப் பொறுத்தவரை, நீலகிரித் தேயிலையை அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தேன். அந்தக் கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், அரசு மற்ற வியாபாரிகளைப்போல விலை கொடுத்து வாங்குகிறது. அது முறையல்ல. அரசு குறைந்தபட்சம் 55 ரூபாயாவது கிலோவிற்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, அதற்காக அங்கே போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக உண்ணாவிரதப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. எங்களுடைய கட்சி உறுப்பினர் கந்தசாமி அவர்கள்கூட சென்ற மாதம் 4 ஆம் தேதி உண்ணாவிரதம் இருந்தார்கள். எனவே, நான், அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். 55 ரூபாயாவது குறைந்தபட்சம் ஆதார விலை கொடுத்து தேயிலையை கொள்முதல் செய்யுங்கள்; நிச்சயமாக உங்களுக்கு நஷ்டம் வராது; அவர்களுக்கும் ஓரளவிற்கு நல்ல விலை கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 5] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்]

பிற்பகல் 1-40

வானம் பார்த்த பூமிகளாக கோவையிலேயும், இராமநாதபுரத்திலேயும், விருதுநகரிலேயும் நிலங்கள் இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் நீராதாரங்களைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லி இருக்கின்றீர்கள்.

பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டத்தினைப் பற்றி நான் ஏற்கெனவே நிறைய பேசியிருக்கிறேன். அதைப் பொறுத்தவரையிலே, ஆனைமலையாறு-நல்லாறு திட்டத்தினை நீங்கள் நிறைவேற்றும்போது நிச்சயமாக அது பயனுள்ளதாக இருக்கும். ஏனென்றால், ஆனைமலையாற்றிலே 2½ டி.எம்.சி. தண்ணீர்தான் வரும் என்றாலும்கூட, நல்லாறிலே 7 டி.எம்.சி. தண்ணீரைத் தேக்க முடியும். மேலிருந்து வருகின்ற தண்ணீரைத் தேக்க முடியும். அந்தத் தண்ணீரை, நீராறு தண்ணீரும், ஆனைமலையாறு தண்ணீரும் நல்லாறு வழியாக நேரடியாக திருமூர்த்தி மலைக்குக் கொண்டு செல்ல முடியும். 180 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்கின்ற வசதியும் இருக்கின்றது.

இன்றையதினம் பாசன வசதி பெறாத சுல்தான்பேட்டை மேற்கு பகுதி, பல்லடம் தாலுகா போன்ற பகுதிகளுக்கெல்லாம் நிச்சயமாக தண்ணீர் கொடுக்க முடியும். அவர்களுக்கு பாசனத்திற்குத் தண்ணீர் கொடுக்கலாம். கொடுக்க முடியவில்லையென்றால், குறைந்தபட்சம் குளம், குட்டைகளை நிரப்புவதற்கு அனுப்பலாம். அதுவும் முடியவில்லை என்று சொன்னால், குழாய்களைப் பதித்தால் அந்தப் பகுதிகளுக்கெல்லாம் தண்ணீர் வழங்க முடியும் என்று அன்போடு நான் சொல்லிக்கொள்கின்றேன்.

தொண்டாமுத்தூரைப் பொறுத்தவரையிலே அங்குதான் நொய்யல் ஆறு ஓடுகிறது. மேலே முக்திகுளத்திலே சிறுவாணி உற்பத்தியாகிறது. அந்த ஸ்தானத்திலிருந்து ஆனையாறும், பெரியாறும் வருகிறது. அந்த இரண்டு ஆறுகளும் சேர்ந்தவுடன் நொய்யலாக மாறிவிடுகிறது. நொய்யல் அங்கே பாய்ந்தாலும்கூட, பெரிய அளவிற்கு அது பயன்படுவதில்லை. அது பயன்படுகின்ற வகையில், தடுப்பணைகள் கட்ட வேண்டும். சித்திரைசாவடி விவசாயிகள் சங்கம் வைத்திருக்கிறார்களே தவிர, அவர்களுக்கு மட்டும் தான் பாசனத்திற்கு இருக்கிறது. வேறு யாருக்கும் அதிகமாக இல்லை. அதனால் தடுப்பணைகள் கட்டுவதன் மூலமாக நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 ஏப்ரல் 5

அதைப்போல இந்த வரவு-செலவு திட்டத்திலே அவினாசி திட்டத்தினை அறிவித்திருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். அவினாசி-அத்திக்கடவுத் திட்டத்தினை நீங்கள் முழுமையாக நிறைவேற்ற வேண்டும். அந்த நேரத்தில் நீங்கள் மறக்கக் கூடாத பகுதி கோவை தாலுகா. ஏனென்றால் கோவை தாலுகா வழியாகத்தான் வந்தாக வேண்டும். காரமடைப் பகுதி வழியாகத்தான் வந்தாக வேண்டும். இதை விட்டுவிட்டு எங்கேயோ கொண்டுபோய்—கொண்டு போங்கள். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் இந்தப் பகுதிகளிலே கண்டிப்பாக குளம், குட்டைகளில் தண்ணீர் நிரப்ப வேண்டும். பெரியநாயக்கன்பாளையம் வட்டாரம் சர்க்கார் சாமல்குளம் வட்டாரத்திலே இந்தத் தண்ணீரை நிரப்ப வேண்டும். ஆகவே இந்த அவினாசி திட்டம் நிறைவேற்றப்படும்போது இதை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் பேசுவதற்கு எவ்வளவு நேரம் வேண்டும்? இன்னும் பேச எவ்வளவு நேரம் தேவை?

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** குறைந்தபட்சம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறைந்தபட்சமே சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 22 நிமிடங்கள், 25 நிமிடங்கள் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திங்கட்கிழமை 25 நிமிடங்கள் நீங்கள் பேசுவதற்கு எடுத்துக்கொள்ளுங்கள். தள்ளி வைக்கிற காரணத்தினால் வட்டி போட்டுவிடாதீர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, கண்டிப்பாக இல்லை. நான் சொன்னால் சொன்னபடி சரியாக உரையை முடிப்பேன். ஒரு முறைகூட சொன்ன நேரத்தைவிட அதிகமாக எடுத்துக்கொண்டதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்களுடைய பேச்சுக்கு இரண்டு நாட்கள் இடைவேளை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (8-4-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



2002 ஏப்ரல் 5]

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

90. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருள்கள் கொண்டு வருவதற்கான நுழைவு வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 01-12-2001-ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் நாளாக நிர்ணயிப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 30-11-2001-ஆம் நாளிட்ட 111-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2001-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளில் பொருள்கள் கொண்டு வருவதற்கான நுழைவு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

91. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 17-05-2001-ஆம் நாளிட்ட 104-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937), 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

92. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 08-06-2001-ஆம் நாளிட்ட 109-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937), 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

93. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-1) முப்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்.]

94. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-2) பதினாறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்.]

95. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-3) பத்தொன்பதாவது

ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்.)]

96. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-4) ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்.)]

97. 2000-2001ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம் கோட்டம்-1) இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்.)]

98. 2000-2001ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம் கோட்டம்-2) பதினான்காவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்.)]

99. 2000-2001ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்.)]

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

56. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2001-2002)

57. பொதுக் கணக்குக் குழுவின் முப்பதாவது அறிக்கை. (2001-2002)

58. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2001-2002)

59. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து இரண்டாவது அறிக்கை. (2001-2002)





60. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2001-2002)

61. பொது நிறுவனங்கள் குழுவின் பதினொன்றாவது அறிக்கை. (2001-2002)

62. பொது நிறுவனங்கள் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை. (2001-2002)

63. பொது நிறுவனங்கள் குழுவின் பதிமூன்றாவது அறிக்கை. (2001-2002)

64. பொது நிறுவனங்கள் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2001-2002)

65. பொது நிறுவனங்கள் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2001-2002)

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224488
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.